
# 1993 அவ்யக்த முரளி



## பொருளடக்கம் - 13

**09.01.1993** வருடத்தைக் கொண்டாடுவது என்றால் உண்மையானவராகி நிரூபணம் கொடுக்க வேண்டும்!

**18.01.1993** பிரத்யக்ஷதாவின் (வெளிப்பாடு) ஆதாரம் திட பிரதிக்ஞை, திடத்தன்மையுடன் கூடிய வாக்குறுதி!

**18.02.1993** பிராமண வாழ்க்கையின் மூச்சு எப்பொழுதும் ஊக்கம் மற்றும் உற்சாகமாக இருப்பது!

**07.03.1993** ஹோலி கொண்டாடுவது என்றால் மிக உயர்ந்தவராக மற்றும் புனிதமானவராக ஆவது!

**26.03.1993** அவ்யக்த வருடத்தில் லட்சியம் மற்றும் லட்சணத்தை சமமாக ஆக்குங்கள்!

**23.04.1993** நிச்சயபுத்தி பவ! அமர பவ!

**18.11.1993** சங்கம யுகத்தின் ராஜகுழந்தைகள், எதிர்காலத்தில் ராஜ்ய அதிகாரிகள்!

**25.11.1993** சகஜமாக வெற்றி அடைவதற்காக ஞான சொரூப பிரயோகி ஆத்மா ஆகுங்கள்!

**02.12.1993** நம்பர்-1 ஆவதற்காக குணமூர்த்தியாகி குணங்களின் தானம் செய்யக்கூடிய மஹாதானி ஆகுங்கள்!

**09.12.1993** ஏகாக்கிரதா சக்தி, நிச்சயத்தின் மூலமாக, சகஜமான வெற்றியைப் பிராப்தி செய்விக்கிறது!

**16.12.1993** உண்மையான சிநேகி ஆகி, ஒரு தந்தையின் மூலமாகவே சர்வ சம்பந்தங்களின் அனுபவத்தை அடையுங்கள்!

**23.12.1993** பவித்திரத்தா என்கிற திடமான விரதம் மூலம் விருத்தியைப் பரிவர்த்தனை செய்ய வேண்டும்!

**31.12.1993** புது வருடத்தை எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்தில் பறங்கள் மற்றும் அனைவருக்காகவும் மஹாதானி, வரதானி ஆகி வீணானதை முடிவு கட்டுங்கள்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂

# 09.01.1993 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அவ்யக்த வருடத்தைக் கொண்டாடுவது என்றால் உண்மையானவராகி நிரூபணம் கொடுக்க வேண்டும்!

இன்று அவ்யக்த தந்தை தன்னுடைய அவ்யக்த மூர்த்தியான குழந்தைகளுடன் சந்திப்பைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறார். அவ்யக்தம் என்றால் வியக்த உணர்விலிருந்து விலகி மேலும் அவ்யக்த தந்தைக்குச் சமமாக அன்புடையவர்களாக இருப்பது. அனைத்துக் குழந்தைகளும் முக்கியமாக இந்த வருடத்தில் தந்தைக்குச் சமமாக ஆக வேண்டும் என்ற லட்சியத்தை வைத்து அவரவர்கள் சக்திக்கேற்றபடி நன்றாக முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். லட்சியத்தின் கூடவே லட்சணத்தையும் தாரணை செய்து கொண்டிருக்கிறார்கள். பாப்தாதா அனைத்துக் குழந்தைகளின் முயற்சியினைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். இது தான் சமமாக ஆவதில் அன்பின் நிரூபணமாகும் என்று ஒவ்வொருவரும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அப்படி நிரூபணம் கொடுக்கக் கூடிய குழந்தைகளைத் தான் உண்மையான குழந்தைகள் என்று சொல்கிறோம். அப்படி உண்மையான குழந்தைகளைப் பார்த்து பாப்தாதா குஷியும் அடைகிறார் மேலும் விஷேமாக அதிகப்படியான உதவியும் செய்கிறார். எவ்வளவு தைரியம் நிறைந்தவர்களாக ஆகிறார்களோ அவ்வளவு பல மடங்கு இயல்பாகவே தந்தையின் உதவிக்குத் தகுதியானவர்களாக ஆகி விடுகிறார்கள். அப்படி தகுதியான குழந்தைகளின் அடையாளம் என்னவாக இருக்கும்? எப்படி தந்தையின் களஞ்சியம் எப்பொழுதுமே நிரம்பியிருக்கிறது என்ற மகிமை இருக்கிறதோ அதே போல் உண்மையான குழந்தைகளுக்கு அனைவரின் இதயப்பூர்வமான அன்பு கலந்த ஆசிர்வாதத்தினால், அனைவரின் சகயோகம் கிடைப்பதினால் அனைத்து பொக்கிஷங்களின் களஞ்சியமும் எப்பொழுதும் நிரம்பியிருக்கிறது. எந்தவொரு பொக்கிஷமும் இல்லாதவராக அனுபவம் செய்ய மாட்டார்கள்.

அவர்களுடைய இதயத்திலிருந்து இல்லை என்பது தந்தையின் களஞ்சியத்தில் அல்லது குழந்தைகளாகிய எங்களுடைய களஞ்சியத்தில் இல்லை என்பது இல்லை என்ற பாடல் இயல்பாகவே எப்பொழுதும் ஒலித்துக் கொண்டே இருக்கும். அவர்களுடைய பார்வை மூலமாக, உள்உணர்வு மூலமாக, வைப்ரேஷன் மூலமாக, வாய் மூலமாக, நெருக்கத்தில் வருவதன் மூலமாக எப்பொழுதும் நிரம்பியவர் என்று மற்ற ஆத்மாக்களுக்கு அனுபவம் ஆகும். அந்த மாதிரியான குழந்தைகள் எப்பொழுதும் தந்தையின் துணையிலேயே இருக்கிறார்கள் மேலும் துணைவனாகவும் அனுபவம் செய்கிறார்கள். இது இரட்டை அனுபவம் ஆகும். தன்னுடைய முழ்கிய நிலையில் எப்பொழுதும் துணையாக இருப்பதை அனுபவம் செய்கிறார்கள். மேலும் சேவையில் எப்பொழுதும் துணைவனின் நிலையை அனுபவம் செய்கிறார்கள். இந்த இரண்டு அனுபவங்கள் 'துணைவன்' மற்றும் 'துணை' இயல்பாகவே தந்தைக்குச் சமமான சாட்சி நிலை அதாவது விலகியிருப்பவராகவும் அன்பானவராகவும் ஆக்கி விடுகிறது. எப்படி பிரம்மாபாபாவைப் பார்த்திருக்கிறீர்கள். நீங்களும் தந்தையும் எப்பொழுதும் இணைந்த ரூபத்தை அனுபவம் செய்தீர்கள் மற்றும் செய்வித்தார். இணைந்த சொரூபத்தை யாரும் பிரிக்க முடியாது. அந்த மாதிரி உண்மையான குழந்தைகள் எப்பொழுதும் தன்னை இணைந்த ரூபத்தில் அனுபவம் செய்கிறார்கள். பிரிப்பதற்கு யாரிடமும் சக்தி இல்லை.

எப்படி சத்யுகத்தில் தேவதைகளுக்கு இயற்கை அடிமையாக இருக்கிறது அதாவது தேவையான நேரத்தில் சகயோகியாக இருக்கிறது. அதே போல் உண்மையான குழந்தைகளின் உயர்ந்த நிலையின் காரணமாக அனைத்து சக்திகளும் மற்றும் அனைத்து குணங்களும் தேவையான நேரத்தில் எப்பொழுதும் சகயோகியாக இருக்கின்றன. அதாவது அனைத்து சக்திகளையும் குணங்களையும் அரசாளும் அதிகாரிகளாக இருக்கிறார்கள். கூடவே அந்த மாதிரி உண்மையான குழந்தைகளின் சேவையின் முக்கியமான சொரூபம் என்னவாக இருக்கிறது? எப்படி அனைவரும் வாய்மொழி மூலமாகவும் மற்றும் மனம் மூலமாகவும் சேவை செய்து கொண்டே இருக்கிறார்கள். அதே போல் அவர்களும் சேவை செய்கிறார்கள் ஆனால் அவர்களின் விசேஷமான சேவை என்னவென்றால் அவர்கள் எப்பொழுதும் கிடைத்திருக்கும் தந்தையின்

ஒவ்வொரு குணம் மற்றும் சக்தியை மற்ற ஆத்மாக்களுக்கு தானம் செய்வதில்லை ஆனால் சகயோகம் மற்றும் பிராப்தியை அனுபவம் செய்விப்பதாக இருக்கிறது. அஞ்ஞானிகளுக்குத் தானம் செய்வார்கள் மற்றும் பிராமண ஆத்மாக்களுக்கு சகயோகம் மற்றும் பிராப்தியை அனுபவம் செய்விப்பார்கள். ஏனென்றால் அனைத்தையும் விட மிகப் பெரிய தானம் குணதானம் மற்றும் சக்திகளின் தானம் ஆகும். பலமில்லாதவர்களைச் சக்தி நிறைந்தவர்களாக ஆக்குவது தான் உயர்ந்த தானம் மற்றும் சகயோகம் ஆகும். அப்படி அந்த மாதிரி சகயோகம் கொடுக்கத் தெரியுமா? அல்லது இப்பொழுது எடுக்க வேண்டும் என்று யோசித்து கொண்டிருக்கிறீர்களா? இது வரை எடுப்பவர்களாக இருக்கிறீர்களா அல்லது வள்ளலின் குழந்தைகள் கொடுப்பவர்களாக ஆகியிருக்கிறீர்களா? அல்லது சில நேரம் எடுக்கிறீர்களா மற்றும் சில நேரம் கொடுக்கிறீர்களா? அந்த மாதிரி இருக்கிறதா? கொடுத்துக் கொண்டே இருந்தீர்கள் என்றால் எடுப்பது இயற்கையாகவே முடிந்து விடும், ஏனென்றால் தந்தை அனைவருக்கும் அனைத்தையும் கொடுத்து விட்டார். எதையும் தன்னிடம் வைத்துக் கொள்ளவில்லை அனைத்தையும் கொடுத்து விட்டார். எடுப்பவர்களுக்கும் பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கும் காரியத்தில் ஈடுபடுத்துவதற்கும் தெரியவில்லை. எவ்வளவு கொடுத்துக் கொண்டே இருப்பீர்களோ அந்தளவே நிரம்பிய நிலையின் அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள். அந்த மாதிரி உண்மையானவர்கள் தானே நீங்கள். 'உண்மையானவர்' என்ற வரிசையில் இருக்கிறீர்களா? அல்லது உண்மையாக ஆக வேண்டும் என்ற வரிசையில் இருக்கிறீர்களா? எப்படி குடும்பத்தில் தாய் தந்தை குழந்தைகளைத் தன்னுடைய கைகளில் ஆட வைத்துக் கொண்டே இருப்பார்கள். அதாவது எப்பொழுதும் குஷியாக வைத்திருப்பார்கள், ஊக்கம் உற்சாகத்தில் வைத்திருப்பார்கள். அந்த மாதிரி உண்மையான குழந்தைகள் எப்பொழுதும் அனைவரையும் ஊக்கம் உற்சாகத்தில் ஆட வைத்துக் கொண்டே இருப்பார்கள். ஏறும் கலையில் பறக்க வைத்துக் கொண்டே இருப்பார்கள். இந்த வருடத்தை அவ்யக்த வருடமாக கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். அவ்யக்த வருடம் என்றால் தந்தைக்கு உண்மையானவராகி நிரூபணம் கொடுக்கக் கூடியவராக ஆகுவதாகும். அந்த மாதிரி நிரூபணம் கொடுப்பது என்றால் கொண்டாடுவது ஆகும். அவ்யக்தத்தின் அர்த்தமே வியக்த உணர்வு மற்றும் பாவனையிலிருந்து விலகியிருப்பது.

# 1993 அவ்யக்த முரளி

வாழ்க்கையில் ஏறும் கலை மற்றும் இறங்கும் கலையின் ஆதாரம் இரண்டே விஷயங்கள் தான் (1) பாவனை மற்றும் (2) பாவம் (உணர்வு). ஒருவேளை ஏதாவது ஒரு காரியத்தில் காரியத்திற்காக அல்லது காரியம் செய்பவருக்காக உயர்ந்த பாவனை இருக்கிறது என்றால் பாவனையின் பலனும் உயர்ந்ததாக உடனே பிராப்தி ஆகிறது. ஒன்று அனைவருக்காகவும் நன்மை பயக்கும் பாவனை, இரண்டாவது யார் எப்படிப்பட்டவராக இருந்தாலும் எப்பொழுதும் அன்பு மற்றும் உதவி கொடுக்கும் பாவனை. மூன்றாவது எப்பொழுதும் தைரியம் மற்றும் உற்சாகத்தை அதிகரிக்கும் பாவனை. நான்காவது யார் எப்படிப்பட்டவராக இருந்தாலும் எப்பொழுதும் தன்னுடையவர் என்ற பாவனை மேலும் ஐந்தாவது இவை அனைத்திற்கும் அஸ்திவாரமாக ஆத்ம சொரூபத்தின் பாவனை. இதைத் தான் நல்ல பாவனை மற்றும் நேர்மறையான பாவனைகள் என்று கூறப்படும். அப்படி அவ்யக்தம் ஆவது என்றால் இந்த அனைத்து நல்ல பாவனைகளையும் வைப்பது ஆகும். ஒருவேளை இந்த நற்பாவனைகள் விபரீதமாக ஆகி விடுகிறது என்றால் அப்பொழுது தான் வியக்த உணர்வு தன் பக்கம் இழுக்கிறது. வியக்த உணர்வின் அர்த்தமே இந்த 5-விஷயங்களின் எதிர்மறை அதாவது விபரீத நிலையில் நிலைத்திருப்பதாகும். இதனுடைய விபரீதங்களை சுயம் நீங்களே தெரிந்திருக்கிறீர்கள், வர்ணனை செய்வதற்கு அவசியம் இல்லை. எப்பொழுது பாவனை விபரீதம் ஆகி விடுகிறது. அப்போது அவ்யக்த நிலையில் நிலைத்திருக்க முடியாது. மாயா வருவதற்கான முக்கியமான வாசல் இதுதான். எந்தவொரு தடையையும் சோதித்துப் பாருங்கள், அதனுடைய மூல காரணம் அன்பிற்கு பதிலாக விபரீத பாவனைகள் தான் இருக்கும். பாவனை முதலில் எண்ணம் ரூபத்தில் இருக்கிறது. பின்பு வார்த்தையில் வருகிறது. பின்பு செயலில் வருகிறது. எப்படி பாவனை இருக்கிறதோ அதே போல் மனிதர்களின் ஒவ்வொரு நடத்தையையும் மற்றும் வார்த்தையையும் அதே உணர்வோடு பார்ப்பார்கள் கேட்பார்கள் மற்றும் சம்மந்தத்தில் வருவார்கள். பாவனை மூலமாக உணர்வுகளும் மாறி டுகிறது. ஒருவேளை எந்தவொரு ஆத்மா மேலும் ஏதோ ஒரு நேரத்தில் பொறாமையின் பாவனை இருக்கிறது என்றால் தன்னுடையவர் என்ற பாவனை இல்லை அதனால் அந்த நபரின் ஒவ்வொரு நடத்தை, ஒவ்வொரு வார்த்தையிலும் தவறான அபிப்ராயம் தான் அனுபவம்

ஆகிறது. அவர் நல்லதே செய்வார் ஆனால் உங்களுடைய பாவனை நல்லதாக இல்லாத காரணத்தினால் ஒவ்வொரு நடத்தை மற்றும் வார்த்தை மூலமாக உங்களுக்குத் தீய உணர்வுகள் தான் தென்படும். அப்படி பாவனை உணர்வுகளை மாற்றக் கூடியது. எனவே ஒவ்வொரு ஆத்மாவிற்காகவும் சுப பாவனை மற்றும் நல்லுணர்வுகள் இருக்கின்றனவா என்று சோதனை செய்யுங்கள். உணர்வைப் புரிந்து கொள்வதில் வித்தியாசம் ஏற்பட்டு விடுவதினால் 'மிஸ் அன்டர்ஸ்டான்டிங்' (தவறாகப் புரிந்து கொள்வது) மாயா வருவதற்கு வாசலாகி விடுகிறது. அவ்யக்த நிலையை உருவாக்குவதற்காக முக்கியமாகத் தன்னுடைய பாவனை மற்றும் உணர்வுகளைச் சோதனை செய்தீர்கள் என்றால் சுலபமாக அவ்யக்த நிலையில் விசேஷ அனுபவம் செய்து கொண்டேயிருப்பீர்கள். அனேக குழந்தைகள் அசுத்த பாவனை மற்றும் அசுத்த உணர்வுகளிலிருந்து விலகியும் இருக்கிறார்கள் ஆனால் ஒன்று நல்ல உணர்வு மற்றும் நல்ல பாவனை, இன்னொன்று வீணான உணர்வு மற்றும் பாவனை, மூன்றாவது சாதாரண பாவனை மற்றும் உணர்வு. ஏனென்றால் பிராமணன் என்றாலே சேவை உணர்வு. அப்படி சாதாரண பாவனை மற்றும் சாதாரண உணர்வு நஷ்டம் ஏற்படுத்துவதில்லை ஆனால் பிராமண வாழ்க்கையின் கடமையாக இருக்கும் சுபபாவனை மூலமாக சேவை உணர்வு என்பது ஏற்பட முடியாது. எனவே பிராமண வாழ்க்கையில் சேவையின் பலனாக சேமிப்பாவதற்கான விசேஷ வரதானம் இருக்கிறது அல்லவா? அதை அனுபவம் செய்ய முடியாது. எனவே சாதாரண பாவனை மற்றும் உணர்வையும் உயர்ந்த பாவனை மற்றும் உயர்ந்த உணர்வில் மாற்றம் செய்யுங்கள். சோதனை செய்தீர்கள் என்றால் மாற்றம் செய்வீர்கள். மேலும் தந்தைக்குச் சமமான அவ்யக்த பரிஷ்தாவாக சுலபமாக ஆகி விடுவீர்கள். அப்படி அவ்யக்த வருடத்தை எப்படி கொண்டாடுவது என்று புரிந்து கொண்டீர்களா? சுப பாவனை மனசேவைக்கான மிக உயர்ந்த சாதனம். மேலும் உயர்ந்த உணர்வு உறவு நெருக்கத்தில் அனைவரின் அன்பிற்குரியவராக ஆவதற்கான சுலபமான சாதனமாகும். யார் எப்பொழுதும் ஒவ்வொருவருக்காகவும் உயர்ந்த உணர்வை வைத்திருக்கிறாரோ அவர் தான் மாலையில் அருகாமையில் உள்ள மணியாக ஆக முடியும். ஏனென்றால் மாலை உறவு நெருக்கத்தில் அருகாமை மற்றும் உயர்ந்த தன்மையின் அடையாளமாக இருக்கிறது. யார் எந்த உணர்வோடு பேசினாலும்

மற்றும் நடந்து கொண்டாலும் நீங்கள் எப்பொழுதும் ஒவ்வொருவருக்காகவும் உயர்ந்த உணர்வுகள் மற்றும் நல்லுணர்வுகளை வைத்துக் கொள்ளுங்கள். யார் இதில் வெற்றி அடைகிறார்களோ அவர் தான் மாலையில் வருவதற்கு அதிகாரி ஆகிறார். சேவைக் களத்தில் சொற்பொழிவு ஆற்ற முடியாவிட்டாலும், திட்டம் வகுக்க முடியாவிட்டாலும் யார் ஒவ்வொருவரிடம் உறவு நெருக்கத்தில் நல்லுணர்வை வைக்க முடிகிறது என்றால் இந்த நல்லுணர்வு சூட்சும சேவை உணர்வில் சேமிப்பாகி விடும். அந்த மாதிரி நல்லுணர்வு வைத்திருப்பவர் எப்பொழுதும் அனைவருக்கும் சுகம் கொடுப்பார், சுகத்தை எடுத்துக் கொள்வார். அப்படி இதுவும் சேவை தான். மேலும் இந்த சேவை உணர்வு எண் முன்னுக்கு எடுத்துக் கொள்வதற்கு அதிகாரி ஆக்கி விடும். எனவே மாலையின் மணியாக ஆகி விடுவார். புரிந்ததா? எனக்கோ சொற்பொழிவு ஆற்றுவதற்கு வாய்ப்பே கிடைப்பதில்லை. பெரிய பெரிய சேவையின் வாய்ப்பு கிடைப்பதில்லை என்று ஒருபொழுதும் நினைக்காதீர்கள் ஆனால் இந்த சேவை உணர்வில் பொன்னான வாய்ப்பை எடுத்துக் கொள்ளும் வரிசையில் வந்து விடுவீர்கள். அதாவது விசேஷ ஆத்மா ஆகி விடுவீர்கள். எனவே இந்த வருடத்தில் சுப பாவனை மற்றும் உயர்ந்த உணர்வு இவற்றைக் கடைபிடிப்பதற்கான விசேஷ கவனம் வைக்க வேண்டும்.

அசுத்த உணர்வு மற்றும் அசுத்த பாவனையையும் தன்னுடைய நல்லுணர்வு மற்றும் நல்ல பாவனை மூலமாக மாற்றம் செய்ய முடியும். ரோஜா மலர் துர்நாற்றம் உள்ள உரத்திலிருந்து நறுமணத்தை எடுத்து நறுமணமிக்க ரோஜா மலராக ஆக முடிகிறது என்று ஏற்கனவே கூறியிருந்தோம். அப்படியானால் உயர்ந்த ஆத்மாக்கள் நீங்கள் தீய, வீணான, சாதாரண பாவனை மற்றும் உணர்வை உயர்ந்ததாக மாற்ற முடியாதா? அல்லது என்ன செய்வது, இவரிடம் இருப்பதே தீய பாவனை, எனக்காக இவருடைய உணர்வே மிகவும் மோசமானது, நான் என்ன செய்வது என்று அப்படி கூற மாட்டீர்கள் தானே. உலசுத்தை மாற்றுபவர் என்பது தான் உங்களுடைய பட்டம் இல்லையா. எப்பொழுது இயற்கையையும் கீழான நிலையிலிருந்து உயர்வான நிலைக்கு ஆக்க முடியும் என்றால் ஆத்மாக்களின் உணர்வுகள் மற்றும் பாவனையை மாற்றுபவராக ஆக முடியாதா என்ன? அப்படி இந்த

லட்சியம் தான் தந்தைக்குச் சமமாக அவ்யக்த பரிஷ்தா ஆவதின் லட்சணத்தை சுலபமாகவும் இயல்பாகவும் கொண்டு வரும். எப்படி அவ்யக்த வருடத்தை கொண்டாடுவது என்று புரிந்ததா? கொண்டாடுவது என்றால் ஆவது. இது தான் பிராமணர்களின் பாஷையின் சித்தாந்தம் ஆகும். ஆக வேண்டும் இல்லையா? அல்லது கொண்டாட மட்டும் வேண்டுமா? பிராமணர்களில் நிகழ்காலத்தில் இந்த முயற்சிக்கான விசேஷ அவசியம் இருக்கிறது மேலும் இந்த சேவை தான் மாலையில் மணிகளை அருகில் கொண்டு வந்து மாலையை பிரசித்தியாக்கும். மாலையின் மணிகள் தனித்தனியாக உருவாகிக் கொண்டிருக்கின்றன ஆனால் மாலை என்றால் மணிகள், மணிகளின் நெருக்கத்தில் இருப்பது. இந்த இரண்டு விஷயங்கள் மணிகளோடு மணிகள் நெருக்கத்தில் வருவதற்கான சாதனம் ஆகும். இதைத் தான் உண்மையானவர் அதாவது நிரூபணம் கொடுப்பவர் என்று கூறப்படுவது. நல்லது.

நாலாபுறமும் உள்ள அனைத்து அன்பின் நிரூபணம் கொடுக்கக்கூடிய உண்மையான குழந்தைகளுக்கு, எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக பரிஷ்தா ஆவதற்கான ஊக்கம் உற்சாகத்திலிருக்கும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அனைவர் மேலும் உயர்ந்த பாவனை மற்றும் உயர்ந்த உணர்வு வைக்கக்கூடிய வெற்றி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஒவ்வொரு ஆத்மாவையும் உயர்ந்த பாவனை மூலமாக மாற்றக்கூடிய உலகமாற்றம் செய்யக்கூடிய ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் வெற்றி அடைபவராகி வெற்றி மாலையில் அருகில் வரக்கூடிய வெற்றி இரத்தினங்களுக்கு பாப்தாதாவின் அவ்யக்த வருடத்திற்கான வாழ்த்துக்களின் கூடவே அன்பு நினைவுகளும் நமஸ்காரமும்.

வரதானம்: தன்னுடைய லட்சணம் மூலமாக அனேகரின் எதிர்காலத்தை உயர்ந்ததாக ஆக்கக்கூடிய உயர்ந்த சேவாதாரி ஆகுக!

வாய்மொழி சேவையோ சக்திக்கேற்றபடி தேவையான நேரத்தில் செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள் ஆனால் சங்கமயுகத்தின் எதிர்கால பரிஷ்தா சொரூபம் அது உங்களுடைய லட்சணங்கள் மூலமாகத் தென்படட்டும். அப்பொழுது சேவை சுலபமாக செய்ய முடியும். எட்டடி ஜடமூர்த்திகள் தன்னுடைய லட்சணம் மூலமாக

கடைசி ஜென்மம் வரை சேவை செய்து கொண்டிருக்கின்றன. அதே போல் உங்களுடைய லட்சணங்களில் எப்பொழுதும் சுகத்தின் அமைதியின், குஷியின் ஜொலிப்பு இருக்கிறது என்றால் உயர்ந்த சேவை செய்ய முடியும் உங்களுடைய லட்சணத்தைப் பார்த்து எப்பேர்பட்ட துக்கமான அமைதியற்ற பிரச்சனையுள்ள ஆத்மாவும் தன்னுடைய உயர்ந்த எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ளும்.

சுலோகன்: பாக்கியத்தை உருவாக்கும் தந்தையைத் தன்னுடைய அனைத்து சம்பந்தமாக ஆக்கிக் கொண்டீர்கள் என்றால் அனைத்து பிராப்திகளினால் நிரம்பியவர் உரியவராகி விடுவீர்கள்!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺

# 18.01.1993 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிரத்யக்ஷதாவின் (வெளிப்பாடு) ஆதாரம் திட பிரதிக்ஞை, திடத்தன்மையுடன் கூடிய வாக்குறுதி!

பரமாத்மா கழுத்தின் மாலையாக ஆகக் கூடிய வெற்றி ரத்தினங்களுக்காக சதா (ஸமர்த்) சக்திவானாக இருக்கும் பாப்தாதா கூறினார்: இன்று (ஸமர்த்) சக்திசாலி தந்தை தனது சக்திசாலி குழந்தைகளுடன் சந்திப்பு கொண்டாடிக் கொண்டிருக்கிறார். சக்திசாலி தந்தை ஒவ்வொரு குழந்தைக்கும் அனைத்து சக்திகளின் கஜானா அதாவது சர்வ ஸமர்த்திகளின் கஜானாக்களை பிராமண ஜென்மம் ஏற்பட்ட உடனேயே பிறப்புரிமையின் ரூபத்தில் கொடுத்து விட்டார். மேலும் ஒவ்வொரு பிராமண ஆத்மாவும் தனது இந்த அதிகாரத்தைபெற்று சுயம் சம்பன்னமாக ஆகி மற்றவர்களையும் சம்பன்னமாக ஆக்கி கொண்டிருக் கிறார்கள். இந்த அனைத்னது சமர்த்திகளின் கஜானா பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக் காகவும் மிகவும் அல்பமானதாகவும் ஒரே நொடியிலும் கொடுத்து விட்டார். எப்படி கொடுத்தார்? ஒரு நொடியில் நினைவூட்டினார். எனவே (ஸ்மிருதி) நினைவு தான் சர்வ ஸமர்த்திகளின் சாவி ஆகி விட்டது. என்னுடைய பாபா என்ற ஸ்மிருதி வந்த உடனேயே தந்தையும் என்னுடைய குழந்தைகளே என்று கூறினார். இதே ஆன்மிக ஸ்மிருதி (நினைவு) அனைத்து கஜானாக்களின் சாவி ஒரு செகண்டில் கொடுத்து விட்டார். என்னுடையவர் என்று ஏற்றுக் கொண்ட உடனேயே அனைத்து பிறப்புரிமைகளும் பிராப்தி ஆகியது. எனவே சுலபமாக கிடைத்தது அல்லவா! இப்பொழுது ஒவ்வொரு பிராமண ஆத்மா கூட தந்தையினுடைய பொக்கிஷம் எதுவோ, அதுவே என்னுடைய பொக்கிஷம் என்று நிச்சயம் மற்றும் போதையுடன் கூறுகிறார்கள். தந்தையினுடைய கஜானாவை தன்னுடையதாக ஆக்கிக் கொண்டு விட்டார்கள்.

# 1993 அவ்யக்த முரளி

இன்றைய நாளுக்கு கூட ஸ்மிருதி நினைவு நாள் என்றே கூறுகிறீர்கள் இந்த ஸ்மிருதி திவஸ் குழந்தைகளுக்கு சர்வ ஸமர்த்தி (சக்திகள்) கொடுப்பதற்கான நாள் ஆகும். அப்படியும் பிராமண பிறவியின் நாளே ஸமர்த்திகளை பெறுவதற்கான நாள் ஆகும் ஆனால் இன்றைய ஸ்மிருதி திவஸ், நினைவு நாளுக்கு விசேஷ மகத்துவம் இருக்கிறது. அது என்ன மகத்துவம்? இன்றைய (ஸ்மிருதி திவஸ்) நினைவு நாளன்று விசேஷமாக பிரம்மா தந்தை தன்னைத் தானே அவ்யக்தமாக ஆக்கி வ்யக்த -சாகார ரூபத்தில் விசேஷமாக குழந்தைகளை உலகத்திற்கு முன்னால் (பிரத்யக்ஷம் செய்வதற்கான) வெளிப்படுத்துவதற்கான விசேஷ வில்-பவர் சர்வ சக்திகளை (வில் செய்தார்) ஒப்படைத்து விட்டார். எப்படி ஆரம்பத்தில் தன்னை, சர்வ சம்மந்தங்களை, மற்றும் செல்வத்தை சேவையின் பொருட்டு சக்திகளுக்கு முன்னால் வில் செய்தார், அதே போல இன்றைய நினைவு நாளன்று பிரம்மா தந்தை சாகார உலகத்தில் சாகார ரூபத்தின் மூலமாக உலக சேவைக்கு நிமித்தமாக (கருவியாக) சக்தி சேனையை தங்களது சாகார ரூபத்தின் பாகத்தை ஏற்று நடிக்க வேண்டி அனைத்து வில் பவர் சக்திகளையும் குழந்தைகளுக்கு வில் செய்தார் ஒப்படைத்து விட்டார். சுயம் அவ்யக்த ரூபதாரி (மறை முகமான) ஆனார் மேலும் குழந்தைகளை வ்யக்த ரூபத்தில் உலக நன்மைக்காக (நிமித்தம்) கருவியாக ஆக்கினார் அதாவது சாகார ரூபத்தில் சேவையின் (வில் பவர்ஸ்) சக்திகளை அதாவது சாகர ரூபத்தில் சேவையின் (வில்-பவர்ஸ்) சக்திகளை வில் செய்தார் ஒப்படைத்தார். எனவே இந்த நாளை ஸ்மிருதி திவஸ் (நினைவு நாள் மற்றும் ஸமர்த்தி திவஸ் (சக்திகளின் நாள்) என்று கூறுகிறார்கள்.

அதே (ஸ்மிருதி) நினைவின் ஆதாரத்தில் தேச விதேசத்தில் நாலா புறங்களிலும் இருக்கும் குழந்தைகள் நிமித்தமாக ஆகி சேவையில் சதா முன்னேறிக் கொண்டே இருக்கிறார்கள் என்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். ஏனெனில் விசேஷமாக திரிமூர்த்தி வரதானம் குழந்தைகள் கூடவே இருக்கிறது. சிவபாபாவினுடையதோ இருக்கவே இருக்கிறது ஆனால் கூடவே பாக்கிய விதாதா பிரம்மா தந்தையினுடைய வரதானம் கூட இருக்கிறது. கூடவே ஜகதம்பா சரஸ்வதி தாயின் மதுர வாணியின் வரதானம் இருக்கிறது. எனவே

# 1993 அவ்யக்த முரளி

திரிமூர்த்தி வரதானங்களால் எளிதாக வெற்றியின் அதிகாரம் அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். இனி முன்னால் போகப்போக இன்னும் எளிய சாதனங்கள் மற்றும் சிறந்த வெற்றியின் அனுபவங்கள் ஆகத்தான் போகிறது. விரைவிலும் விரைவாக (பிரத்யக்ஷதா) வெளிப்பாடு ஆகி விட வேண்டும் என்று பாப்தாதாவை பிரத்யக்ஷம் செய்வதற்கான (வெளிப்படுத்துவதற்கான) ஊக்கம் உற்சாகம் நாலா புறங்களிலும் இருக்கிறது. எப்பொழுது ஆகி விடும் என்பதையே அனைவரும் விரும்புகிறீர்கள் அல்லவா? இங்கு அமர்ந்தபடியே பிரத்யச்தாவின் முழக்கத்தை கேட்கக் கூடிய வகையில் நாளைக்கே ஆகி விட வேண்டும் என்று விரும்புகிறீர்கள் அல்லவா? அவ்வாறு நடக்கத்தான் போகிறது அதற்காக என்ன செய்ய வேண்டும்? செய்து கொண்டும் இருக்கிறீர்கள் மேலும் செய்யவும் வேண்டி இருக்கிறது. சம்பூர்ண வெளிப்பாட்டின் முழக்கம் ஒலிக்க வேண்டும் என்றால் ஒரே ஒரு விசயம் செய்ய வேண்டும். பிரத்யக்ஷதாவின் ஆதாரம் குழந்தைகளாகிய நீங்கள் ஆவீர்கள் மேலும் குழந்தைகள் ஒரு விசயத்தை அண்டர் லைன் செய்ய வேண்டும். பிரத்யக்ஷதாவின் ஆதாரம் குழந்தைகளாகிய நீங்கள் ஆவீர்கள் மேலும் குழந்தைகள் ஒரு விசயத்தை அண்டர் லைன் செய்ய வேண்டும். பிரத்யக்ஷதா (வெளிப்பாடு) மற்றும் பிரதிக்ஞை (வாக்குறுதி) இவற்றின் பேலன்ஸ் (சமநிலை) அனைத்து ஆத்மாக்களுக்கும் பாப்தாதா மூலமாக (பிளெஸ்ஸிங்) ஆசிகள் பிராப்தி ஆவதற்கான ஆதாரம் ஆகும். (பிரதிக்ஞை) திட சங்கல்பமோ தினமும் செய்கிறீர்கள் பிறகு பிரத்யக்ஷதாவில் ஏன் தாமதம்: இப்பொழுதே ஆகி விட வேண்டும் அல்லவா?

பாப்தாதா பார்த்தார்: வாக்குறுதியை மனதார அன்பாக எடுக்கவும் செய்கிறீர்கள் ஆனால் ஒன்று இருப்பது பிரதிக்ஞை (வாக்குறுதி) மற்றொன்று (திட பிரதிக்ஞை) திடத்தன்மையுடன் கூடிய வாக்குறுதி. திட பிரதிக்ஞையின் அடையாளம் என்ன? உயிரே போனாலும் சரி ஆனால் வாக்குறுதி போய் விட முடியாது. பணயம் வைக்கும் விசயம் வந்தது என்றால்..... பின் சிறு சிறு பிரச்சனைகள் மற்றொரு உயிரையே அவ்வப்பொழுது வரக்கூடிய எவ்வளவு தான் பயங்கரமான ரூபம் கொண்ட நிலைமை (Circumstance) .ஆக உயிரினுடைய பந்தயத்திற்கு முன்னால் இது என்ன எனவே திட பிரதிக்ஞை என்று எதற்கு

கூறப்படுகிறது என்றால் எப்பேர்ப்பட்ட நிலைமைகளாக (பரிஸ்திதி) இருக்கலாம் ஆனால் பர-ஸ்திதி -வெளியிலிருந்து வரக் கூடிய நிலைமை சுய-ஸ்திதியை -சுயத்தின் நிலையை அசைத்து விட முடியாது. ஒருபொழுதும் எப்பேர்பட்ட நிலைமையிலும் தோற்று விட (ஹார்) முடியாது ஆனால கழுத்தின் (ஹார்) மாலையாக ஆகி விடுவார்கள் வெற்றி இரத்தினமாக ஆவார்கள். பரமாத்ம கழுத்தின் சிருங்காரம் ஆவார்கள். இதற்குத்தான் திட சங்கல்பம் அதாவது திட பிரதிக்ஞை என்று கூறப்படுகிறது. எனவே திடத்தன்மை என்ற வார்த்தையை அண்டர்லைன் அடிகோடிடுங்கள். பிரதிக்ஞை செய்வது என்றால் பிரத்யக்ஷ நிரூபணம் கொடுப்பது ஆனால் அவ்வப்போது ஒரு சில குழந்தைகள் பிரதிக்ஞையும் செய் கிறார்கள் ஆனால் கூடவே ஒரு விளையாட்டையும் மிகவும் நன்றாக செய்கிறார்கள். ஏதாவது ஒரு பிரச்சனை அல்லது சூழ்நிலை ஏற்படும்பொழுது அது பிரதிக்ஞையை பலவீனமாக ஆக்கும் காரணமாக இருக்கும். அந்த காரணத்திற்கு நிவாரணம் செய்வதற்குப் பதிலாக சாக்குப் போக்குகளின் விளையாட்டுகளை நிறைய செய்கிறார்கள். இதில் மிகவும் புத்திசாலியாக இருக்கிறார்கள்.

சாக்குப் போக்கு என்பதற்கான அடையாளம் என்னவாக இருக்கும். கூறுவார்கள் இப்படி இருக்கவில்லை, இப்படி இருந்தது இப்படி ஆகாமல் இருந்திருந்தது என்றால் அப்படி ஆகி இருக்காது. இவர் இப்படி செய்தால், சூழ்நிலையே இப்படி இருந்தது, விசயமே இதுபோல இருந்தது எனவே இப்படி மற்றும் அப்படி இந்த பாஷை சாக்குப் போக்கினுடையது ஆகும். மேலும் திட பிரதிக்ஞையின் பாஷையாவது (ஐஸா) இப்படி ஆனாலும் சரி (வைஸஷ்) அப்படி ஆனாலும் சரி ஆனால் நான் தந்தையைப் போல (ஜைஸா) ஆக வேண்டும். நான் ஆக வேண்டும். மற்றவர்களை நான் ஆக்க வேண்டி யதில்லை. நான் ஆக வேண்டும். மற்றவாகள் இப்படி செய்தார்கள் என்றால் நான் ஆக வேண்டும். மற்றவர்கள் இப்படி செய்தார்கள் என்றால் நான் நன்றாக இருப்பேன், கிடையாது. மற்றவர்கள் சகயோகம் (ஒத்துழைப்பு) அளித்தார்கள் என்றால் நான் சம்பன்னம் (நிறைந்தவர்) மற்றும் சம்பூர்ணம் (முழுமையானவர்) ஆவேன். இந்த பெறுவதற்கு பதிலாக மாஸ்டர் வள்ளல் ஆகி சகயோகம், சிநேகம் மற்றம் சஹானுபூதி- பரிவு அளிப்பது தான் பெறுவது ஆகும். பிராமண வாழ்க்கை என்பதன்

அர்த்தமே கொடுப்பதுவே பெறுவது ஆகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். கொடுப்பதில் தான் பெறுவது உள்ளது. எனவே திட பிதிக்ஞையின் ஆதாரம் ஆவது சுயத்தை பார்ப்பது, சுயத்தை மாற்றுவது, மற்றும் சுயமரியாதையில் இருப்பது. சுய மரியாதை என்பதே மாஸ்டர் வள்ளல் தன்மையினுடையது ஆகும். இந்த அவ்யக்த வருடத்தில் என்ன செய்வீர்கள்? மதுபனில் (பிரதிக்ஞை) வாக்குறுதி கொடுத்து விட்டு செல்வீர்கள் மற்றும் அங்கு சென்று சாக்குப்போக்கின் விளையாட்டு செய்வீர்களா?

பிரதிக்ஞை திடமாக இருப்பதற்கு பதிலாக பலவீனமாக ஆகி விடுவது அல்லது பிரதிக்ஞையில் தளர்வு (லூஸ்) ஏற்படுவதற்கான ஒரே ஒரு அடிப்படை காரணம் இருக்கிறது எப்படி எவ்வளவுதான் பெரிய இயந்திரமாக இருந்தாலும் சரி ஆனால் ஒரு சிறிய ஸ்குரூ கூட லூஸ் தளர்ந்ததாக இருந்தது என்றால் மூழு இயந்திரத்தையே பயனற்றதாக ஆக்கி விடுகிறது. அதே போல (பிரதிக்ஞையை) வாக்குறுதியை நிறை வேற்றுவதற்காக மிகவும் நல்ல நல்ல திட்டங்களை அமைக்கிறீர்கள். புருஷார்த்தம் முயற்சி கூட நிறைய செய்து கொண்டே இருக்கிறீர்கள் ஆனால் புருஷார்த்தம் மற்றும் பிளான் -முயற்சி மற்றும் திட்டத்தை பலவீனம் ஆவதற்கான ஸ்க்ரூ (screw) அலட்சியப்போக்கு என்ற தன்மையே ஆகும். ஆக பலவிதமான ரூபங்களில் வருகிறது மேலும் எப்பொழுதும் புது ரூபங்களில் வருகிறது. பழைய ரூபங்களில் வருவதில்லை. எனவே இந்த கவனக்குறைவு என்ற (லூஸ் ஸ்க்ரு) தளர்ந்த ஸ்க்ரூவை (tight டைட்) இறுக்கி விடுங்கள். இதுவோ நடந்தது கொண்டுதானிருக்கும், ஆகிக் கொண்டுதானிருக்கும். இது அலட்சியத்தன்மை ஆகும்; ஆகி விடும் பார்த்துக் கொள்ளுங்கள், நம்புங்கள், தாதி, தீதி என் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் ஆகி விடும்.. இல்லை. தந்தையைப் போல ஆகவே வேண்டும். இப்பொழுதே ஆக வேண்டும். மூன்றாவது விசயம் பிரதிக்ஞையை திடமான தன்மையிலிருந்து பலவீனமாக ஆக்குவதற்கான ஆதாரம் ஏற்கனவே கூட நகைச்சுவையாக கூறி இருந்தோம். ஒரு சில குழந்தைகளுடைய கிட்டப் பார்வை பலவீனமாக இருக்கிறது மேலும் தூரப் பார்வை மிக மிக கூர்மையாக இருக்கிறது. கிட்டப் பார்வை என்பது சுயத்தை பார்ப்பது, சுயத்தை மாற்றுவது மேலும் தூரத்து பார்வை என்பது மற்றவர்களை பார்ப்பது அதில் கூட பலவீனங்களை பார்ப்பது, விசேஷத்தன்மையை

பார்ப்பதில்லை எனவே ஊக்கம் உற்சாகத்தில் பலவீனம் ஏற்பட்டு விடுகிறது. பெரிய பெரியவர்கள் கூடத்தான் இப்படி செய்கிறார்கள். நாங்களோ இருப்பதே சிறியவர்களாக, எனவே தூரத்து பலவீனத்தை பார்ப்பதற்கான பார்வை ஏமாற்றி விடுகிறது. இது காரணமாக பிரதிக்ஞையை பிராக்டிகலில் (நடைமுறையில்) கொண்டு வர முடியாமல் இருக்கிறார்கள் புரிந்ததா, காரணம் என்ன என்று? எனவே இப்பொழுது ஸ்க்ரூ டைட் செய்ய வருமா இல்லையா? அறிவு என்ற ஸ்க்ரூ டிரைவர் இதுவோ இருக்கிறது தானே, யந்திரமோ இருக்கிறது அல்லவா.

இந்த வருடம் புரிந்து கொள்வது, விரும்புவது மற்றும் செயல்படுவது இந்த முன்றையுமே சமானமாக ஆக்குங்கள். மூன்றையுமே சமானமாக ஆக்குவது என்றால் (பாப்சமான்) தந்தைக்கு சமானமாக ஆவது. ஒருவேளை பாப்தாதா எல்லோரும் எழுதி கொடுங்கள் என்று கூறினால் ஒரு நொடியில் எழுதி விடுவீர்கள். காகிதத்தில் எழுதுவது ஒன்றும் பெரிய விசயம் கிடையாது. நெற்றியின் மீது திட சங்கல்பம் என்ற மை மூலமாக எழுதி விடுங்கள். எழுதத் தெரிகிறது தானே? நெற்றியில் எழுதத் தெரிகிறதா, இல்லை காகிதத்தில்தான் எழுதத் தெரிகிறதா? எல்லோரும் எழுதினீர்களா? பக்கா? திடமாக எழுதினீர்களா? அரை குறையாக (கச்சா) இரண்டு நாட்களில் அழிந்து விடுவது போல ஒன்றும் எழுதவில்லையே? செய்தே ஆக வேண்டும். உயிரே போனாலும் கூட பிரதிக்ஞை போகக் கூடாது. அப்பேர்ப்பட்ட திட சங்கல்பம்தான் பாப்சமான் தந்தைக்கு சமானமாக சுலபமாக ஆக்கும். இல்லை என்றால் சில நேரங்களில் உழைப்பு (மெஹனத்) சில நேரங்களில் (முஹப்பத்) அன்பு இதே விளையாட்டு நடத்திக் கொண்டே இருப்பீர்கள். இன்றைய நாள் தேச விதேசத்தின் அனைத்து குழந்தைகளும் உடலால் அங்கிருந்தாலும் சரி ஆனால் மனதால் மதுபனில் இருக்கிறார்கள். எனவே அனைத்து குழந்தைகளின் நினைவு நாளின் அலௌகீக அனுபவங்களில் நல்ல நல்ல அனுபவங்கள் செய்துள்ளார்கள், சேவையும் செய்துள்ளார்கள், என்பதை பாப்தாதா பார்த்தார். ஒவ்வொரு குழந்தைக்கும் அலௌகீக அனுபவங்களில் மற்றும் சேவைக்கான வாழ்த்துக்களை அளித்து கொண்டிருக்கிறார். அனைவரினுடைய சுத்த சங்கல்பங்கள், இனிமையிலும் இனிமையான ஆன்மீக உரையாடல்கள், மேலும் அன்பின் முத்துக்களின் மாலைகள் பாப்தாதாவிடம் வந்து

சேர்ந்து விட்டுள்ளன. அதற்குப் பதிலாக பாப்தாதா கூட சிநேகத்தின் மாலைகளை அனைத்து குழந்தைகளின் கழுத்தில் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு குழந்தைகயும் அவரவர் பெயரைக் கூறிக் கொண்டு விசேஷ அன்பு நினைவை ஏற்றுக் கொள்ளவும் பாப்தாதாவிடம் இருக்கக் கூடிய ஆன்மிக வயர்லெஸ் செட் கம்பியில்லா சாதனம் எவ்வளவு சக்திசாலியாக இருக்கிறது என்றால் அவரிடம் ஒரே நேரத்தில் அநேக குழந்தைகளின் இதயத்தின் குரல் வந்து சேர்ந்து விடுகிறது. குரல் மட்டும் வந்து சேருகிறது என்பதும் அல்ல ஆனால் அனைவருடைய சிநேகம் நிறைந்த உருவங்கள் கூட (இமர்ஜ்) வெளிப்பட்டு விடுகின்றன. எனவே அனைவரையும் முன்னால் பார்த்து விசேஷ அன்பு நினைவுகள் வழங்கி கொண்டிருக்கிறார். நல்லது.

அனைத்து (ஸமர்த்) சக்திசாலி ஆத்மாக்களுக்கு, அனைத்து திட பிரதிக்ஞை மற்றும் பிரத்யக்ஷதா (வெளிப்பாட்டின்) பேலன்ஸ் (சமநிலை) கொண்டிருக்கக்கூடிய சிறந்த ஆத்மாக்களுக்கு, சதா புரிந்து கொள்ளுதல், விரும்புதல் மற்றும் செயல்படுதல் இந்த மூன்றையும் சமானமாக ஆக்கி கொண்டு விடக்கூடிய பாப்சமான் தந்தைக்கு சமானமான குழந்தைகளுக்கு, சதா பிரச்சினைகளை தோற்கடித்து விடக்கூடிய (ஹார்-தோல்வி) பரமாத்ம கழுத்தின் (ஹார்-மாலை) மாலை ஆகி விடக்கூடிய வெற்றி இரத்தினங்களுக்கு (ஸமர்த்) சக்திவான் பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் நமஸ்காரம்!

தாதிகளுடன் சந்திப்பு: அனைவருமே இரண்டு விதமான வில் (சக்திகளுக்கு) பாத்திரம் ஆவீர்கள். ஆதியில் வில் மேலும் சாகார சொரூபத்தின் கடைசியின் வில் இரண்டிற்குமே பாத்திரம் ஆவீர்கள். வில் பவர் சக்திகள் வந்து விட்டது அல்லவா. வில் பவர்-ன் வில் வில்பவர் மூலமாக எப்பொழுதுமே சுயத்தின் புருஷார்த்தம் (முயற்சி) மூலமாக (extra) கூடுதலான காரியத்தை செய்விக்கிறது. இது தைரியத்தின் (பிரத்யக்ஷ பலன்) கண்கூடான பலனாக கோடி மடங்கு உதவிக்கு பாத்திரம் ஆனீர்கள். இந்த ஆத்மாக்கள் தான் ஏன் நிமித்தமாக (கருவியாக) ஆனார்கள் என்று ஒரு சிலர் நினைக்கிறார்கள். ஆக இதனுடைய இரகசியம், விசேஷ நேரத்தில் விசேஷ தைரியம் வைத்ததற்கான பிரத்யக்ஷ பலன் எப்பொழுதிற்குமான பலனாக ஆகி

விட்டது. எனவே ஒரு அடி தைரியத்தினுடையது மற்றும் கோடி அடிகள் தந்தையின் உதவியினுடையது என்று பாடப்பட்டுள்ளது. எனவே சதா அனைத்து விசயங்களையும் கடந்து செல்வதற்கான வில் பவர் மன உறுதி வில் உயிலின் ரூபத்தில் பிராப்தி ஆகியது, அப்படி இருக்கிறது அல்லவா? நீங்கள் அனைவரும் கூட துணையாளர்கள் ஆவீர்கள். நல்ல முறையில் துணையை ஏற்று கடைபிடித்து கொண்டிருக்கிறீர்கள். இது போல ஏற்று கடைபிடிப்பவர்களுக்கு தந்தை கூட தனது ஒவ்வொரு நேரமும் (சகயோகம்) ஒத்துழைப்பு அளிப்பதற்கான வாக்குறுதியை ஏற்று கடைப்பிடிக்கிறார். எனவே இந்த முழு குரூப் கூட இது போல ஏற்று கடைப்பிடிக்கக் கூடியவர்களினுடையதாக இருக்கிறது. (சபையை கேட்டபடியே) நீங்கள் அனைவரும் கூட இதுபோல நடத்தி வருபவர்கள் ஆவீர்கள் அல்லவா. இல்லை அன்பு மட்டும் செய்பவர்கள் ஆவீர்களா? செய்யவர்கள் அநேகம் இருப்பார்கள். மேலும் நடத்தி வருபவர்கள் யாரோ ஒரு சிலராகத்தான் இருக்கிறார்கள். எனவே, நீங்கள் எல்லோரும் எதில் இருக்கிறீர்கள்? கோடியில் ஒருவராக இருக்கிறீர்கள், அந்த ஒருவரிலும் ஒருவராக இருக்கிறீர்கள். பாருங்கள், உலகத்தில் குழப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும் நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள். (மௌஜ்) ஆனந்தம் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். இல்லை மூஞ்ஜ் குழம்பி உள்ளீர்களா? என்ன செய்ய வேண்டும், என்ன ஆகப் போகிறதோ என்று? எல்லோமே நன்றாக ஆகப் போகிறது என்று நீங்கள் கூறுகிறீர்கள். எனவே எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது? உலகத்தில் ஒவ்வொரு நேரமும் என்ன ஆகப் போகிறதோ என்ற கேள்விக்குறி இருக்கிறது. மேலும் உங்களிடம் என்ன இருக்கிறது. ஃபுல் ஸ்டாப் முற்றுப் புள்ளி, என்ன நடந்து முடிந்து விட்டதோ அது நன்றாகவே நடந்தது மேலும் என்ன ஆகப் போகிறதோ அது நம்மைப் பொறுத்தவரை நல்லதாகவே இருக்கும். உலகத்திற்கு அகால மரணம் ஆகிக் கொண்டிருக்கிறது மேலும் உங்களுக்கு ஆனந்தம் இருக்கிறது. பயம் ஏற்படுகிறதா? கொஞ்சம் கொஞ்சம் இரத்தம் சிந்துபவரை பார்க்கும் பொழுது பயம் ஏற்படுமா? உங்களுக்கு முன்னால் 7-8 பேருக்கு குண்டடி ஏற்பட்டது என்றால் பயப்படுவீர்களா? துக்கத்தில் ஒன்றும் தென்பட்டு விடாது அல்லவா? சக்தி சேனை என்றால் பயமற்றவர்கள் (நிர்பயமானவர்கள்) மாயையிடமும் பயம் இல்லை. இயற்கையின் குழப்பங்கள் காரணமாகவும் பயம் இல்லை. இது போல

நிர்பயமானவர்கள் ஆவீர்களா இல்லை சிறிது சிறிது பலவீனம் இருக்கிறதா? நல்லது.

**அவ்யக்த பாப்தாதாவின் (பர்சனல்) தனிப்பட்ட சந்திப்பு:**

**குரூப்-1: சர்வ சக்திகள் ஆர்டர் கட்டளைப்படி இருந்தன என்றால் மாயாஜீத் மாயையை வென்றவர் ஆகி விடுவீர்கள்!** அனைவரும் தங்களை சதா மாயாஜீத் பிரகிருதிஜீத் மாயையை இயற்கையை வென்றவர் என்ற அனுபவம் செய்கிறீர்களா? மாயாஜீத் ஆகிக் கொண்டு இருக்கிறீர்களா? இல்லை இனி மேல் தான் ஆக வேண்டி உள்ளதா? எந்த அளவிற்கு அனைத்து சக்திகளையும் தங்களது ஆர்டர் படி வைத்திருப்பீர்களோ மேலும் சமயத்தில் காரியத்தில் ஈடுபடுத்துவீர்களோ அந்த அளவிற்கு மாயாஜீத் ஆகி விடுவீர்கள். ஒருவேளை அனைத்து சக்திகளும் தங்களது (கண்ட்ரோல்) கட்டுப்பாட்டில் இல்லை என்றால் அங்கங்கு தோற்றுப் போக வேண்டி வரும்.

மாஸ்டர் சர்வ சக்திவான் என்றால் கண்ட்ரோலிங் பவர் அடக்கும் சக்தி இருக்க வேண்டும். எந்த நேரத்தில் எந்த சக்தியை அழைக்கிறீர்களோ அது ஆஜராகி விட வேண்டும். சகயோகி (ஒத்துழைப்பு அளிக்கக் கூடியதாக) ஆகி விட வேண்டும். இப்படி அவை ஆர்டரில் கட்டளைப்படி இருக்கின்றதா? சர்வ சக்திகள் ஆர்டரில் இருக்கிறதா? இல்லை முன்னால் பின்னால் ஆகிறதா? நீங்கள் இப்பொழுது கட்டளை இடுகிறீர்கள் ஆனால் அவை அரைமணி நேரத்திற்கு பிறகு வருகின்றன என்றால் அதற்கு மாஸ்டர் சர்வ சக்திவான் என்று கூறுவார்களா? உங்கள் அனைவருடைய பட்டம் (டைட்டில்) மாஸ்டர் சர்வசக்திவான் என்றிருக்கும் பொழுது எப்படி தலைப்போ அப்படியே கர்மம் இருக்க வேண்டும் அல்லவா? இருப்பது மாஸ்டர் தலைவனாக மேலும் சக்தி சமயத்தில் வேலைக்கு உதவவில்லை என்றால் பலவீனமானவர் என்று கூறுவார்களா? இல்லை மாஸ்டர் என்று கூறுவார்களா? எனவே எப்பொழுதும் செக் செய்யுங்கள், சோதித்துப் பாருங்கள் மேலும் பிறகு சேஞ்ச் -பரிவர்த்தனை செய்யுங்கள். எந்தெந்த சக்திகள் சமயத்தில் காரியத்தில் ஈடுபட முடிந்தவையாக இருக்கிறது மேலும் எந்த சக்தி சமயத்தில் ஏமாற்றி விடுகிறது? சர்வ சக்திகள் உங்களுடைய ஆர்டர்படி நடக்கவில்லை என்றால் விஷ்வ இராஜ்ய அதிகாரி ஆவீர்களா என்ன?

யாரிடம் (கண்ட்ரோலிங் பவர், ரூலிங் பவர்) அடக்கும் சக்தி மற்றும் ஆளும் சக்தி இருக்கிறதோ அவர்களே உலக இராஜ்ய அதிகாரி ஆக முடியும். முதலில் சுயத்தின் மீது இராஜ்யம் பிறகு உலகத்தின் மீது இராஜ்யம். சுய இராஜ்ய அதிகாரியால் எப்பொழுது வேண்டுமோ எப்படி வேண்டுமோ அப்படி கண்ட்ரோல் செய்ய முடியும் (கட்டுப்படுத்த முடியும்). இந்த வருடத்தில் என்ன புதுமை செய்வீர்கள்? என்ன கூறுகிறீர்களோ, அதை செய்து காண்பிப்பீர்களா? கூறுவது மற்றும் செய்வது, இரண்டுமே சமமாக இருக் கட்டும். எப்படி கூறுவது மாஸ்டர் சர்வ சக்திவான் என்று மேலும் செய்வதில் சில நேரம் வெற்றி சில நேரம் குறைவு என்று இருந்தால் சொல்வது மற்றும் செய்வதில் வித்தியாசம் ஏற்பட்டு விட்டது அல்லவா. இப்பொழுது இந்த வித்தியாசத்தை நீக்கி விடுங்கள். என்ன கூறுகிறீர்களோ அது (பிராக்டிகல்) நடைமுறை வாழ்க்கையில் சுயம் தானும் அனுபவம் செய்யுங்கள் மேலும் மற்றவர்களும் அனுபவம் செய்ய வேண்டும். இந்த ஆத்மாக்கள் சிறிது வித்தியாசமானவர்கள் தனிப்பட்டவர்கள் என்று மற்றவர்களும் புரிந்து கொள்ள வேண்டும். ஆயிரம் பேர் இருந்தாலும் சரி ஆனால் ஆயிரம் பேர்களுக்கு இடையிலும் நீங்கள் தனிப்பட்டவர்களாக தென்பட வேண்டும், சாதாரணமானவர்களாக அல்ல. ஏனெனில் பிராமணர் என்றால் அலௌகீகமானவர். இது அலௌகீக பிறவி ஆகும் அல்லவா. எனவே, பிராமண வாழ்க்கை என்றால் அலௌகீக வாழ்க்கை சாதாரண வாழ்க்கை அல்ல. இப்படி அனுபவம் செய்கிறீர்களா? இவர்கள் தனிப்பட்டவர்கள் என்று மனிதர்கள் நினைக்கிறார்களா? இல்லை நாம் எப்படி இருக்கிறோமோ அதே போலத்தான் இவர்களும் இருக்கிறார்கள் என்று புரிந்திருக்கிறார்களா?

நியாரா -தனிப்பட்டவராக ஆவதற்கான அடையாளம் எந்த அளவு நியாரா தனிப்பட்டவர்களாக ஆவார்களோ அந்த அளவிற்கு அனைவருக்கும் பியாரா பிரியமானவர்களாக ஆவார்கள். எப்படி தந்தை எல்லோரையும் விட நியாரா தனிப்பட்டு இருக்கிறார் மேலும் அமனவருக்கும் பியாரா பிரியமானவராகவும் இருக்கிறார். எனவே விலகிய தனிமையே (நியாராபன்) பிரியமானவராக (பியாரா) ஆக்கி விடுகிறது. எனவே இது போல விலகியும் ஆத்மாக்களுக்கு பிரியமானவர்களாகவும் எதுவரை ஆகி உள்ளீர்கள் என்பதை செக்

செய்யுங்கள். லௌகீக வாழ்க்கையில் கூட அலௌகீகத் தன்மையை அனுபவம் செய்யுங்கள். விலகி இருப்பதற்கான யுக்தி வழி முறையோ அறிந்துள்ளீர்கள் தானே! எந்த அளவிற்கு தங்களைத் தேக உணர்விலிருந்து விலகியவராக (நியாரா) ஆகிக் கொண்டே செல்வீர்களோ? அந்த அளவிற்கு (பியாரா) பிரியமானவர்களாகப்படுவீர்கள். தேக உணர்விலிருந்து விலகி இருத்தல். எனவே அலௌகீகமானதாக ஆகியது அல்லவா? எனவே தேக உணர்விலிருந்து விலகியவராக இருக்கிறேனா? என்று எப்பொழுதும் உங்களைப் பாருங்கள். திரும்பத் திரும்ப தேக உணர்வில் ஒன்றும் வந்து விடுவதில்லையே? தேக உணர்வில் வருவது என்றால் லௌகீக வாழ்க்கை. இடையிடையே பயிற்சி செய்யுங்கள். தேகத்தில் பிரவேசம் செய்து கர்மம் செய்தேன் மேலும் இப்பொழுதே (நியாரா) விலகியவனாக ஆகி விட்டேன். எனவே விலகிய நிலையில் நிலைத்து விடுவதால் கர்மம் கூட நன்றாக ஆகும் மேலும் தந்தை மற்றும் அனைவருக்கும் பிரியமானவராகவும் ஆகி விடுவீர்கள். இரட்டை லாபம் இருக்கிறது அல்லவா? பரமாத்ம அன்பிற்கு அதிகாரி ஆவது இது எவ்வளவு பெரிய லாபம் ஆகும். இதுபோல் அதிகாரி ஆவது. இது எப்பவுமே பெரிய லாபம் ஆகும். இது போல அதிகாரி ஆகி விடுவோம் என்று எப்பொழுதாவது நினைத்திருந்தீர்களா? கனவில் கூட நினைத்திருக்க மாட்டீர்கள் ஆனால் அப்பேர்ப்பட்ட அதிகாரி ஆகி விட்டீர்கள். அதிகாரியால் எப்பொழுது வேண்டுமோ எப்படி வேண்டுமோ அப்படி கண்ட்ரோல் (கட்டுப்படுத்த) செய்ய முடியும்.

இந்த வருடத்தில் என்ன புதுமை செய்வீர்கள்? என்ன கூறுகிறீர்களோ, அதை செய்து காண்பிப்பீர்களா? கூறுவது மற்றும் செய்வது, இரண்டுமே சமமாக இருக்கட்டும். எப்படி கூறுவது மாஸ்டர் சர்வச க்திவான் என்று மேலும் செய்வதில் சில நேரம் வெற்றி சில நேரம் குறைவு என்று இருந்தால் சொல்வது மற்றும் செய்வதில் வித்தியாசம் ஏற்பட்டு விட்டது அல்லவா. இப்பொழுது இந்த வித்தியாசத்தை நீக்கி விடுங்கள். என்ன கூறுகிறீர்களோ அது (பிராக்டிகல்) நடைமுறை வாழ்க்கையில் சுயம் தானும் அனுபவம் செய்யுங்கள் மேலும் மற்றவர்களும் அனுபவம் செய்ய வேண்டும். இந்த ஆத்மாக்கள் சிறிது வித்தியாசமானவர்கள் தனிப்பட்டவர்கள் என்று மற்றவர்களும் புரிந்து கொள்ள வேண்டும். ஆயிரம் பேர் இருந்தாலும் சரி ஆனால் ஆயிரம் பேர்களுக்கு

இடையிலும் நீங்கள் தனிப்பட்டவர்களாக தென்பட வேண்டும். சாதாரணமானவர்களாக அல்ல. ஏனெனில் பிராமணர் என்றால் அலௌகீகமானவர். இது அலௌகீக பிறவி ஆகும் அல்லவா. எனவே, பிராமண வாழ்க்கை என்றால் அலௌகீக வாழ்க்கை சாதாரண வாழ்க்கை அல்ல. இப்படி அனுபவம் செய்கிறீர்களா? இவர்கள் தனிப்பட்டவர்கள் என்று மனிதர்கள் நினைக்கிறார்களா? இல்லை நாம் எப்படி இருக்கிறோமோ அதே போலத்தான் இவர்களும் இருக்கிறார்கள் என்று புரிந்திருக்கிறார்களா?

எனவே பரமாத்ம அன்பிற்கு பாத்திரமான ஆத்மாக்கள் ஆவோம் என்பதை எப்பொழுதும் நினைவில் எடுத்து வாருங்கள். உலகமோ தேடிக் கொண்டே இருக்கிறது மேலும் நீங்கள் பாத்திரமாக ஆகி விட்டீர்கள். எனவே எப்பொழுதும் ஆகா எனது சிறந்த பாக்கியம் இந்த பாடலை பாடிக் கொண்டே இருங்கள் மற்றும் பறந்து கொண்டே இருங்கள். பறக்கும் கலையினால் (கலா அனைவருக்கும் (பலா) நன்மை, நீங்கள் பறக்கும் பொழுது அனைவருக்கும் நன்மை ஏற்பட்டு விடுகிறது. உலகத்திற்கு நன்மை ஏற்பட்டு விடுகிறது. நல்லது. எல்லோரும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? எப்பொழுதுமே குஷியாக இருங்கள் மேலும் மற்றவர்களையும் குஷிபடுத்துங்கள். யார் எப்படி இருந்தாலும் சரி, ஆனால் குஷியாக இருக்க வேண்டும் மற்றம் குஷிப்படுத்த வேண்டும். நல்லது.

**குரூப்-2: விஷ்வ கல்யாணகாரி -உலக நன்மை செய்பவராக ஆகி சேவையில் இருந்தீர்கள் என்றால் சேவையின் பலன் மற்றும் பலம் கிடைத்துக் கொண்டே இருக்கும்!** தங்களது முழு கல்பத்தினுடைய சிறந்த பாக்கியத்தை அறிந்துள்ளீர்களா? அரை கல்பம் இராஜ்ய அதிகாரி ஆகிறீர்கள், மேலும் அரைகல்பம் பூஜைக்குரிய அதிகாரி ஆகிறீர்கள் ஆனால் முழு கல்பத்திற்கான பாக்கியத்தை அமைப்பதற்கான நேரம் எது? இப்பொழுது தான் ஆகும் அல்லவா? எனவே பாக்கியம் அமைப்பதற்கான நேரம் எவ்வளவு என்பது நினைவில் இருக்கிறதா? இல்லை (மர்ஜ்) உள்ளடங்கி இருக்கிறதா? ஏனெனில் எந்த அளவு (இமர்ஜ்) வெளிப்பட்டு இருக்குமோ அவ்வளவு நேரம் குஷி இருக்கும் மேலும் (மர்ஜ்) உள்ளடங்கி இருந்தது என்றால் குஷி இருக்காது. பாண்டவர்களுக்கு வேலைக்கு செல்லும் பொழுது நினைவு இருக்கிறதா

இல்லை வேலை செய்யும் நேரத்தில் நான் இன்னார் ஆவேன் என்று வேலையினுடைய போதை மட்டுமே இருக்கிறதா? கிளார்க் ஆனாலும் சரி, பிஸினெஸ்மேன் ஆனாலும் சரி. என்ன ஆனாலும் சரி அது நினைவில் இருக்கிறதா? இல்லை நான் கல்பகல்பமாக பாக்கியவான் ஆவேன் என்பது நினைவில் இருக்கிறதா? ஏனெனில் உங்களது உண்மையான (ஆக்யுபேஷன்) தொழில் -விஷ்வ கல்யாணகாரி என்பதாகும். இது நினைவில் இருக்கிறதா இல்லை எல்லைக்குட்பபட வேலை நினைவில் இருக்கிறதா? தாய்மார்களுக்கு உணவு சமைக்கும் பொழுது என்ன நினைவில் இருக்கிறது? விஷ்வ கல்யாணகாரி ஆவேன் என்பது நினைவில் இருக்கிறதா, இல்லை சமையல் செய்பவர் ஆவேன் என்பது நினைவில் இருக்கிறதா?

எது வேண்டுமானாலும் செய்யுங்கள் ஆனால் உங்களது (ஆக்யுபேஷன்) தொழிலை மறக்காதீர்கள். எப்படி உங்களுடைய நினைவார்த்தங்களில் கூட பாண்டவர்கள் மறைமுகமான வேடத்தில் வேலை செய்தார்கள் என்று காண்பித்துள்ளார்கள் ஆனால் போதை என்னவாக இருந்தது. வெற்றியினுடைய போதை இருந்தது. எனவே நீங்கள் கூட அரசாங்க ஊழியர்கள் (கவர்ன்மென்ட் சர்வென்ட்) ஆகிறீர்கள் அல்லவா? உத்தியோகம் பார்க்கிறீர்கள் ஆனால் விஷ்வ கல்யாணகாரி ஆவேன் என்ற போதை இருக்கட்டும். ஆக இந்த ஸ்மிருதி நினைவு மூலமாக இயல்பாகவே (ஸமர்த்) சக்திசாலியாக இருப்பீர்கள் மேலும் சதா சேவையின் பாவம் (ஈடுபாடு) இருக்கும் காரணத்தால் சேவையின் பலன் மற்றும் பலம் கிடைத்துக் கொண்டே இருக்கும். பலனும் கிடைத்து விடுதல், மேலும் பலமும் கிடைத்து விடுதல், ஆக இரட்டை லாபம் இருக்கிறது அல்லவா? அப்படி இன்றி துணிகளை துவைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் துணி துவைப்பவர்கள் ஆவோம் என்று நினைப்பதல்ல. விஷ்வ கல்யாணகாரி என்ற சங்கல்பம் வைத்தீர்கள் என்றால் உங்களுடைய இந்த பாவனை அநேக ஆத்மாக்களுக்கு பலன் கொடுக்கும். பாவனையின் பலன் கிடைக்கிறது என்று பாடப்பட்டுள்ளது அல்லவா. எனவே உங்களுடைய பாவனை ஆத்மாக்களுக்கு பலனை கொடுக்கும், சாந்தி, அமைதி, சக்தியை கொடுக்கும் இந்த பலன் கிடைக்கும். இப்படி சேவை செய்கிறீர்களா? இல்லை நேரம் கிடைப்பதில்லையா? தங்களது குடும்பம் மிகவும் பெரியதாக இருக்கிறதா? நடத்தி செல்ல வேண்டி இருக்கிறது

எல்லைக்கப்பாற்பட்டது இருக்கும்பொழுது எல்லைக்குட்பட்ட உணர்விலிருந்து சுலபமாகவே வெளியேறிக் கொண்டே செல்வீர்கள். கிருஹஸ்தி தன்மையின் உணர்வு இருப்பது என்பது எல்லைக்குட்பட்டது மேலும் டிரஸ்டி தன்மையின் உணர்வு இருப்பது என்பது எல்லைக்கப்பாற்பட்டது. கொஞ்சம் கொஞ்சம் கிருஹஸ்தி, கொஞ்சம் கொஞ்சம் டிரஸ்டி என்று இருப்பதல்ல. கிருஹஸ்தியின் சுமை ஒருவேளை இருந்தது என்றால் ஒருபொழுதும் பறக்கும் கலையின் அனுபவம் செய்ய முடியாது. (நிமித்த பாவம்) கருவி என்ற உணர்வு சுமையை நீக்கி விடுகிறது. என்னுடைய பொறுப்பு, நான் தாள் நிர்வகிக்க வேண்டும். நான் தான் சிந்திக்க வேண்டி உள்ளது.... என்றால் சுமை ஏற்படுகிறது. பொறுப்பு தந்தையினுடையது மேலும் தந்தை டிரஸ்டி அதாவது கருவியாக ஆக்கி உள்ளார். எனது என்று நினைத்தீர்கள் என்றால் சுமை, உங்களுடையது உனது என்றால் தந்தையினுடையது. இதில் ஒரு சிலர் தந்திரமும் செய்கிறார்கள் உனது என்று கூறுவார்கள் ஆனால் எனது என்று செய்து கொள்வார்கள். ஒருபொழுதும் ஏதாவதொரு காரியத்தில் சுமை என்று அனுபவம் ஆகிறது என்றால் உனது என்பதற்கு பதிலாக எனது என்று கூறுகிறீர்கள் என்பதற்கான அடையாளம் ஆகும்.

**குரூப்-3: பிராமணர் என்பதன் பொருள் -நடக்க முடியாததை நடக்குமாறு செய்து விடுபவர்கள்!** சதா ஒரு பலம் ஒரு நம்பிக்கை, இந்த அனுபவம் செய்து கொண்டே இருக்கிறீர்களா? எந்த அளவிற்கு ஒரு தந்தை மீது நம்பிக்கை அதாவது நிச்சயம் இருக்கிறதோ அந்த அளவிற்கு பலம் கூட கிடைக்கிறது. ஏனெனில் ஒரு தந்தை மீது நிச்சயம் வைப்பதால் புத்தி ஒருமுகப்பட்டு விடுகிறது அலைவதிலிருந்து விடுபட்டு விடுகிறது. ஒருமுக நிலையின் சக்தி மூலமாக என்ன காரியம் செய்தாலும் கூட அதில் சுலபமாக வெற்றி கிடைக்கிறது. எங்கு ஒருமுக நிலை இருக்கிறதோ அங்கு நிர்ணயம் கூட மிகவும் சுலபமாக ஆகி விடும். எங்கு குழப்பம் இருக்குமோ அங்கு நிர்ணயம் சரியானதாக இருப்பதில்லை. எனவே ஒரு பலம் ஒரு நம்பிக்கை என்றால் ஒவ்வொரு காரியத்திலும் எளிதாக வெற்றியை அனுபவம் செயதல் எவ்வளவு தான் கடினமான காரியமாக இருந்தாலும் சரி ஆனால் ஒரு பலம் ஒரு நம்பிக்கை உடையவர்களுக்கு ஒவ்வொரு செயலும் ஒரு விளையாட்டு போல தோன்றுகிறது. வேலை என்று தோன்றுவதில்லை.

விளையாட்டு என்று படுகிறது. எனவே விளையாடுவதில் மகிழ்ச்சி ஏற்படுகிறது அல்லவா. எவ்வளவு தான் உழைப்பு செய்ய வேண்டிய விளையாட்டாக இருந்தாலும் சரி ஆனால் விளையாட்டு என்றால் மகிழ்ச்சி பாருங்கள் மல்யுத்தம் செய்கிறார்கள் என்றால் அதில் கூட எவ்வளவு உழைப்பு செய்ய வேண்டி இருக்கிறது. இருந்தாலும் விளையாட்டு என்று நினைத்து செய்யும் பொழுது மகிழ்ச்சி அடைகிறார்கள். உழைப்பு என்று தோன்றுவதில்லை. குஷி குஷியுடன் செய்யும் பொழுது காரியம் சுலபமாக வெற்றிகரமாகவும் ஆகி விடுகிறது. ஒருவேளை ஏதாவது காரியமும் செய்கிறார்கள், குஷி இல்லை சிந்தனை அல்லது கவலையில் இருக்கிறார்கள் என்றால் கஷ்டமாக படும் அல்லவா? ஒரு பலம் ஒரு நம்பிக்கை இதனுடைய அடையாளமாவது மகிழ்ச்சியாக இருப்பார்கள், உழைப்பு என்று தோன்றாது. ஒரு பலம் ஒரு நம்பிக்கை மூலமாக எவ்வளவு தான் முடியாத காரியமாக இருந்தாலும் கூட அது நடக்கக் கூடியதாக தென்படும்.

பிராமண வாழ்க்கையில் எந்த ஒரு ஸ்தூல காரியமாகட்டும் ஆன்மிக (புருஷார்த்தம்) முயற்சியினுடையதாகட்டும் நடக்க முடியாது என்று இருக்கவே முடியாது. பிராமணர் என்பதற்கான அர்த்தமே நடக்க முடியாததை நடக்கக்கூடியதாக ஆக்கி விடுபவர்கள். பிராமணர்களின் அகராதியில் நடக்க முடியாதது என்ற வார்த்தையே கிடையாது. கடினம் என்ற வார்த்தையே கிடையாது. உழைப்பு என்ற வார்த்தையே கிடையாது. அப்பேர்ப்பட்ட பிராமணர்கள் ஆவீர்கள் அல்லவா. இல்லை அவ்வப்போது முடியாது என்று தோன்றுகிறதா? இது மிகவும் கடினம் இவர் மாறுவதே இல்லை, நிந்தனை செய்து கொண்டே இருக்கிறார். இந்த வேலை நடப்பதே இல்லை. என்னுடைய பாக்கியம் என்னவென்றே தெரியவில்லை... இவ்வாறு நீங்கள் நினைப்பதில்லை அல்லவா? இல்லை ஏதாவது காரியம் கடினமாகப் படுகிறதா? தந்தையுடைய துணையை விட்டு விடும்பொழுது நீங்கள் தனியாகவே செய்ய வேண்டும் என்று நினைத்து தனியாக செய்யும்பொழுது சுமை என்றும் தோன்றும். கடினம் மற்றும் முடியாதது என்றும் தோன்றும். மேலும் தந்தையை துணையாக கொண்டீர்கள் என்றால் மலை கூட கடுகு ஆக ஆகி விடும். இதற்கு ஒரு பலம் ஒரு நம்பிக்கையில் இருப்பவர்கள் என்று கூறப்படுகிறது. யார் ஒரு பலம் ஒரு

நம்பிக்கையில் இருப்பார்களோ அவர்கள் ஒருபொழுதும் எண்ணத்தளவில் கூட என்ன ஆகுமோ எப்படி ஆகுமோ என்று சிந்திக்க மாட்டார். ஏனெனில் ஒருவேளை கேள்விக்குறி இருக்கிறது என்றால் புத்தி சரியாக முடிவெடுக்காது. கிளியர் தெளிவாக இல்லை ஒருவேளை எந்த ஒரு வேலை செய்யும்பொழுதும் என்ன ஆகுமோ எப்படி ஆகுமோ தெரியவில்லை என்ற கேள்வி வருகிறது என்றால் இதற்கு யுத்தத்தினுடய ஸ்திதி என்று கூறப்படுகிறது. எனவே பிராமணர் ஆவீர்களா, இல்லை க்ஷத்திரியரா? ஏனெனில் இதுவரையும் காலத்திற்கேற்ப ஒருவேளை யுத்தத்தின் சம்ஸ்காரம் இருக்கிறது என்றால் சூரிய வம்சத்தில் போய் சேருவீர்களா இல்லை சந்திரவம்சத்திலா? சந்திரவம்சத்தில் ஒன்றும் போக வேண்டாம் அல்லவா? யோகத்தில் கூட அமருகிறீர்கள் என்றால் சிறிது நேரம் யோகம் வருகிறது மேலும் சிறிது நேரம் யுத்தம் செய்து கொண்டே இருக்கிறீர்கள். அதே நேரத்தில் ஒருவேளை சரீரம் விடுபட்டு விட்டது என்றால் எங்கே செல்வீர்கள்? அந்த் மதி சோ கதி -கடைசியில் புத்தி என்னவோ அதே போல கதி என்பது என்னவாக இருக்கும்? எனவே எப்பொழுதுமே வெற்றியின் தன்மையின் சம்ஸ்காரத்தை தாரணை செய்யுங்கள். சர்வ சக்திவான் தந்தை கூட இருக்கிறார் என்றால் எங்கு பகவான் இருக்கிறாரோ அங்கு யுத்தம் இருக்குமா இல்லை வெற்றி இருக்குமா? எனவே அப்பேர்பட்ட வெற்றி இரத்தினம் ஆகுங்கள். இதற்குத்தான் ஒரு பலம் ஒரு நம்பிக்கை என்று கூறுவார்கள். நல்லது.

**குரூப்-4: அட்டென்ஷன் (கவனம்) மற்றும் செக்கிங் (சோதித்தல்) என்ற காவல்காரர்கள் சரியாக இருந்தார்கள் என்றால் கஜானா (safe, ஸேஃப்) பாதுகாப்பாக இருக்கும்!** சதா தங்களை தந்தையின் சர்வ கஜானாக்களுக்கு எஜமானன் ஆவேன் இப்படி அனுபவம் செய்கிறீர்களா? எஜமானன் ஆகி விட்டீர்களா? இல்லை ஆகிக் கொண்டு இருக்கிறீர்களா? அனைவரும் பாலகன் மற்றும் எஜமானராக ஆகி விட்டீர்கள் என்றிருக்கும்பொழுது தந்தை அனைவருக்கும் ஒன்று போல் கஜானா வழங்கி இருக்கிறார். இல்லை ஒருவருக்கு குறைவாக கொடுத்தார். ஒருவருக்கு அதிகமாக வழங்கி உள்ளாரா என்ன? ஒன்று போல தான் அளித்திருக்கிறார். எனவே ஒரே மாதிரி கஜானாக்கள் கிடைத்திருக்கும் பொழுது பிறகு வரிசைக்கிரமமாக ஏன் ஆகிறீர்கள்? கஜானா அனைவருக்கும் ஒன்று போல கிடைத்தது. பிறகும் ஒருவர்

நிரம்பியவராக மற்றும் ஒருவர் குறைவாக பெற்றவராக ஏன் ஆகிறீர்கள்? இதற்கான காரணமாவது கஜானாவை பராமரிக்க தெரிவதில்லை. ஒரு சில குழந்தைகள் கஜானாவை அதிகரிக்கிறார்கள் மேலும் ஒரு சில குழந்தைகள் இழக்கிறார்கள். அதிகரிப்பதற்கான வழியாவது பகிரிந்து கொடுத்தல்! எந்த அளவு பகிர்ந்து கொடுப்பீர்களோ அந்த அளவிற்கு அதிகரிக்கும், யார் பகிர்ந்து கொள்வதில்லையோ அவர்களுடையது அதிகரிப்பது இல்லை. அவினாஷி (அழியாது) கஜானா ஆகும். இந்த கஜானாவை எவ்வளவு அதிகரிக்க விரும்புகிறீர்களோ அந்த அளவிற்கு அதிகரித்து கொள்ள முடியும். அனைத்து கஜானாக்களையும் பராமரிப்பது என்றால் திரும்ப திரும்ப கஜானாக்களை செக் செய்வது. எப்படி கஜானாக்களை பார்த்துக் கொள்வதற்காக யாராவது ஒருவரை காவல்காரனாக வைப்பார்கள். ஆக இந்த கஜானாவை சதா பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக அட்டென்ஷன் மற்றும் செக்கிங் இந்த காவல்காரர்கள் இருக்க வேண்டும். எனவே யாருக்கு அட்டென்ஷன் வைக்க மற்றும் செக்கிங் செய்யத் தெரிகிறதோ அவர்களுடைய கஜானாவை ஒருபொழுதும் யாரும் எடுத்து செல்ல முடியாது, யாரும் இழந்து விட முடியாது. எனவே காவலகாரர்கள் உஷாராக இருக்கிறார்களா, இல்லை கவனக்குறைவு என்ற உறக்கத்தில் உறங்கி விடுகிறார்காளா? காவல்காரர்கள் கூட உறங்கி விட்டார்கள் என்றால் கஜானாவை இழந்து விடுகிறார்கள். எனவே அட்டென்ஷன் மற்றும் செக்கிங் சரியாக இருந்து என்றால் ஒருபொழுதும் கஜானாவை யாரும் தொடக் கூட முடியாது. எனவே கணக்கற்ற குறையாத இடையறாத கஜானா சேமிப்பில் இருக்கிறது அல்லவா? கஜானாக்களை பார்த்து எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? ஒருபொழுதும் எந்த ஒரு நிலைமையிலும் துக்கத்தின் அலைகள் ஒன்றும் வருவதில்லையே? கனவில் கூட துக்கத்தில் அலை இருக்கக் கூடாது. துக்கத்தில் அலைகள் வந்து விடும்பொழுது குஷி குறைந்து போகிறது. அந்த நேரத்தில் தந்தையை சுகத்தின் கடல் என்ற சொரூபத்தில் நினைவு செய்யுங்கள். தந்தை சுகத்தின் கடலாக இருக்கும்பொழுது குழந்தைகளுக்குள் துக்கத்தின் அலைகள் எப்படி வர முடியும்! ஆத்மாக்களாகிய உங்களுடைய அனாதி ஆதி சொரூபம் கூட சுக சொரூபம் ஆகும். பரந்தாமத்தில் இருக்கும்பொழுது கூட சுக சொரூபம் ஆவீர்கள் மேலும் ஆதி தேவதை ஆகும் பொழுது கூட சுக சொரூபமாக இருந்தீர்கள்

எனவே தங்களது அனாதி மற்றும் ஆதி சொரூபத்தை நினைவில் கொண்டீர்கள் என்றால் ஒருபொழுதும் துக்கத்தின் அலைகள் வராது.

நல்லது. பாண்டவர்களுக்கு எப்பொழுதாவது துக்கத்தின் அலைகள் வருகிறதா? எப்பொழுதாவது கோபப்படுகிறீர்களா? கோபப்படுவது என்றால் துக்கம் கொடுப்பது, துக்கம் எடுப்பது. யாருக்கு ஒருபொழுதும் கோபம் வருவதில்லையோ, அவர்கள் கை உயர்த்துங்கள். வீட்டிலிருப்பவர்களுடைய சான்றிதழ் கூட வேண்டும். எப்பொழுதாவது யாராவது நிந்தனை செய்தாலும் சரி, அவமதித்தாலும் சரி அப்பொழுது கூட கோபம் வரக் கூடாது. எல்லாருடைய புகைப்படம் (ஃபோட்டோ) எடுக்கப்பட்டு கொண்டிருக்கிறது. கோபம் வருவது இல்லை என்றால் மிகவும் நல்லது ஆனால் மேற்கொண்டு கூட எப்பேர்ப்பட்ட நிலைமையில் கூட மாயையை வர விடாதீர்கள் இதுவரையும் (ஸேஃப்) பாதுகாப்பாக இருக்கிறீர்கள் என்றால் அதற்கான வாழ்த்துக்கள் ஆனால் இனி மேற்கொண்டும் கூட அவினாசி நிலையாக இருங்கள். நல்லது. தாய் மார்களுக்கு மோகம் வருகிறதா? பாண்டவர்களிடம் இருப்பது (ரோப்) ஆணவம் அது கோபத்தினுடையதே அம்சம் ஆகும் மேலும் தாய்மார்களிடம் இருப்பது மோகம். எனவே இந்த வருடம் என்ன செய்வீர்கள்? கோபம் முற்றிலுமே வரக்கூடாது. இப்படி ஒன்றும் கூற மாட்டீர்களே கோபப்பட வேண்டிய வருகிறது. இல்லை என்றால் வேலை நடக்காது? தற்காலத்தினுடைய நேரப்படி கூட கோபத்தினால் வேலை கெட்டுத்தான் போகிறது மேலும் ஆன்மிக அன்பினால் அமைதியினால் கெட்டுப்போன காரியம் கூட சரியாகி விடுகிறது. எனவே இது கூட ஒரு மிகப் பெரிய விகாரம் ஆகும். எனவே கோபத்தை வென்றவராக ஆவது பிராமண வாழ்க்கைக்கு மிகவும் அவசியம் ஆகும். தாய்மார்கள் (மோஹஜீத்) மோகத்தை வென்றவர் ஆக வேண்டும். அநேக முறை மோகத்தின் காரணமாக கோபம் கூட வந்து விடுகிறது. எல்லோரும் என்ன லட்சியம் வைத்துள்ளீர்கள்? பாப்சமான் தந்தைக்கு சமமாக ஆக வேண்டும் என்பது பின் தந்தையிடம் கோபம் அல்லது மோகம் இருக்கிறதா என்ன? எனவே சமானமாக ஆக வேண்டி இருக்கிறது அல்லவா? எப்பேர்பட்ட நிலைமை வந்து விட்டாலும் சரி ஆனால் மாயாஜீத் மாயையை வென்றவர் ஆவது என்றால் பிராமண வாழ்க்கையின் சுகத்தை பெறுவது. எனவே அண்டர்லைன் அடிக் கோடிட்டு இந்த வருடத்தில் கோபத்தை முடித்து விடுங்கள். நல்லது.

**குரூப்-5: யார் தனது கர்ம இந்திரியங்களை ஆர்டர் கட்டளைப்படி நடத்துகிறார்களோ அவர்களே இராஜயோகி ஆவார்கள்!** அனைவரும் ஒரு நொடியில் அசரீரி நிலையை அனுபவம் செய்யக் கூடியவர் களாக இருக்கிறீர்களா? இல்லை நேரம் பிடிக்குமா? நீங்கள் இராஜயோகி ஆவீர்கள். இராஜயோகி என்பதன் பொருள் என்ன? இராஜா ஆவீர்கள் அல்லவா? எனவே சரீரம் உங்களுடையது என்னவாக இருக்கிறது. சேவகன் ஆகும் அல்லவா? எனவே ஒரு நொடியில் என் அசரீரி ஆக முடியாது? (ஆர்டர்) கட்டளையிடுங்கள் இப்பொழுது சரீர உணர்வில் வரக் கூடாது என்று. பின் சரீரம் கட்டளையை ஏற்றுக் கொள்ளாதா? இராஜயோகி என்றால் மாஸ்டர் சர்வசக்திவான். மாஸ்டர் சர்வ சக்திவான் கர்ம பந்தனத்தைக் கூட துண்டிக்க முடியாதவராக இருக்கிறார் என்றால் மாஸ்டர் சர்வ சக்திவான். என்று எப்படி அழைத்துக் கொள்ள முடியும்? நாங்கள் மாஸ்டர் சர்வ சக்திவான் ஆவோம் என்று தானே கூறுகிறீர்கள். எனவே இதே பயிற்சியை அதிகரித்துக் கொண்டே செல்லுங்கள். இராஜயோகி என்றால் இராஜா ஆகி இந்த கர்ம இந்திரியங்களை தனது கட்டளைப்படி நடத்துபவர்கள் ஏனெனில் ஒருவேளை இந்த அப்பியாசம் இருக்கவில்லை என்றால் கடைசி நேரத்தில் பாஸ் ஆக வேண்டுமா இல்லை பாஸ்வித் ஆனர் ஆக வேண்டுமா? எப்படி சரீரத்தில் வருவது சுலபமாக இருக்கிறது, ஒரு நொடி கூட நேரம் பிடிப்பத்தில்லை, ஏனெனில் வெகுகாலத்தின் அப்பியாசம் உள்ளது. அதே போல சரீரத்திலிருந்து அப்பாற்பட்டு சென்று விடுவதற் கான அப்பியாசம் கூட தேவை. மேலும் வெகு காலத்திற்கான அப்பியாசம் வேண்டும். லட்சியம் சிறந்ததாக இருக்கிறது என்றால் லட்சியத்திற்கேற்ப (புருஷார்த்தம்) முயற்சி கூட சிறந்ததாக செய்ய வேண்டும். நாள் முழுவதிலும் இது திரும்ப திரும்ப பயிற்சி செய்யுங்கள் இப்பொழுதே சரீரத்தில் இருக்கிறேன் இப்பொழுதே சரீரத்திலிருந்து விலகி அசரீரியாக இருக்கிறேன் 'லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட் மற்றும் ஃபாஸ்ட்' கடைசியில் வந்தாலும் வேகமாக சென்று முதலில் வருவதற்காக ஃபாஸ்ட் புருஷார்த்தம் செய்ய வேண்டி இருக்கும். எல்லோரையும் விட அதிகமாக மகிழ்ச்சி யாருக்கு இருக்கிறது? எந்த விசயத்தினுடைய குஷி இருக்கிறது? எப்பொழுதும் நீங்கள் அடைந்திருக்கக் கூடிய பாக்கியத்தின் பட்டியலை (லிஸ்ட்) முன்னால் வையுங்கள் எவ்வளவு பாக்கியம் கிடைத்துள்ளது? எவ்வளவு பாக்கியம்

கிடைத்துள்ளது என்றால் இப்பொழுது கல்பத்தின் முடிவில் கூட பக்த ஜனங்கள் உங்களது பாக்கியத்திற்கு மகிமை செய்து கொண்டிருக்கிறார்கள் எப்பொழு தாவது ஏதாவது கீர்த்தனை கேட்கும்பொழுது என்ன தோன்றுகிறது? யாருடைய மகிமை ஆகும்? (டபுள் ஃபாரினர்ஸ்) இரட்டை வெளிநாட்டினருக்காக கீர்த்தனை பாடுகிறார்களா? சங்கமத்தில் பாக்கியவான் ஆகி உள்ளீர்கள் மேலும் சங்கமத்தில் தான் இதுவரையும் தங்களது பாக்கியம் வர்ணிக்கப்பட்டு கொண்டிருப்பதை கேட்டுக் கொண்டு இருக்கிறீர்கள். சைதன்ய (உயிரோட்டமான) ரூபத்தில் உங்களுடையதே ஜட சித்திரத்தை பார்த்து மகிழ்ச்சி அடைகிறீர்களா? நல்லது.

**குரூப்-6: அலௌகீக வாழ்க்கை அமைப்பதற்காக எல்லா விசயங்களிலும் (கம் கர்ச்சா பாலா நஷின்) குறைந்த செலவில் அதிக பலன் பெறுபவர்கள் ஆகுங்கள்! மதுபன் நிவாசிகளுடன் சந்திப்பு:** மதுபனின் மகிமை நாலாபுறங்களிலும் பிரசித்தமாக இருக்கவே இருக்கிறது. மதுபனின் மகிமை என்றால் மதுபன் நிவாசி களின் மகிமை. மதுபனின் மகிமை அதிகமா இல்லை மதுபன் நிவாசிகளின் மகிமை அதிகமா? மதுபன் என்று எதற்கு கூறப்படுகிறது? இந்த கட்டிடங்களுக்குத்தான் மதுபன் என்று கூறப்படுகிறதா? மதுபன் நிவாசிகளால் மதுபன் இருக்கிறது. மதுபனிற்கு மகிமை எதுவோ அதுவே மதுபன் நிவாசிகளுக்கான மகிமை ஆகும். மதுபனின் மகிமை என்பதே நம்முடைய மகிமை ஆகும். மதுபனின் மகிமை என்பதே நம்முடைய மகிமை என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். யார் மகான் ஆக இருப்பார்களோ அவர்களுக்குத்தான் மகிமை பாடப்படுகிறது. சாதாரணமானவர்களுக்கு மகிமை இருப்பதில்லை. மகான் தன்மைக்கு (உயர்ந்த நிலை) மகிமை ஆகிறது. எனவே மதுபன் நிவாசி மகான் ஆகி விட்டீர்கள் அல்லவா. இல்லை சில நேரங்களில் சாதாரணமானவர்களாகவும் ஆகி விடுகிறீர்களா மதுபன் நிவாசி என்றால் தலை சிறந்தவர்கள், மகான்கள், அலௌகீக தன்மையே உயர்வுடைமை ஆகும். லௌகீக தன்மைக்கு மகான் தன்மை என்று கூற மாட்டார்கள். எனவே மதுபன் நிவாசி என்றால் ஒவ்வொரு செயல், ஒவ்வொரு சொல், ஒவ்வொரு சங்கல்பம் கூட அலௌகீகமாக இருத்தல். மதுபன் நிவாசி என்றால் சாதாரண தன்மையிலிருந்து அப்பாற்பட்டு இருத்தல். அவர்களுடைய திருஷ்டி (பார்வை)

அவர்களுடைய விருத்தி (உள்ளுணர்வு அவர்களுடைய ஸ்மிருதி (நினைவு) க்ருதி (செயல்) அனைத்துமே அலௌகீகமானது அதாவது மகான் இது தான் மதுபன் நிவாசிகளின் மகிமை ஆகும். புரிந்ததா? எனவே மதுபனில் சுவர்களின் மகிமை இல்லை. உங்களுடையது மகிமை ஆகும்.

மதுபன் நிவாசி ஒவ்வொரு செயலிலும் ஃபர்ஸ்ட் முதலில் வரக் கூடியவர்கள் ஆவீர்கள் அல்லவா? எனவே அவ்யக்த வருடத்தில் எந்த விசயத்தில் ஃபர்ஸ்ட் முதலில் செல்ல வேண்டும். பாப்சமான் தந்தைக்கு சமமாக ஆவதில் அலௌகீகத் தன்மையில் முதலில் வர வேண்டும். எனவே மதுபனில் இப்பொழுது முதற் கொண்டே சாதாரண நடத்தை, சாதாரண சொற்கள் என்பதன் பெயர் அடையாளம் இல்லாமலிருந்தது என்றால் மதுபனில் இருப்பவர்களுக்கு விசேஷ பரிசு கிடைக்கும். வருடம் முழுவதும் ஒவ்வொரு மாதத்தின் ரிஸல்ட் முடிவு பார்ப்பவை எனவே ஒவ்வொரு மாதத்திலும் சிறிதளவும் சாதாரண தன்மை இல்லாதிருக்கட்டும் மகான் தன்மை இருக்கட்டும். உணர்வுடையை இது தான் ஃபர்ஸ்ட் முதலாவது விசயம் ஆகும் அல்லவா. சாதாரண தன்மைக்கு (ஃபர்ஃஸ்ட்) முதலாவது விசயம் ஆகும் அல்லவா. சாதாரண தன்மைக்கு (ஃபர்ஸ்ட்) என்று கூற மாட்டார்கள். எனவே முதல் பரிசு மதுபனில் யார் பெறப் போகிறார்கள் என்பதை பார்ப்போம். எனவே இந்த பரிசு பெறுபவர்கள் தானே? யார் பரிசு பெறுகிறார்கள் என்று பார்ப்போம் ஏனெனில் மதுபன் நிவாசிகளுக்கு விசேஷமாக நாடகப்படி வரதானங்களின் பிராப்தி இருக்கிறது. மதுபன் நிவாசி என்ன செய்வார்களோ அது நாலா புறங்களிலும் இயல்பாகவும் எளிதாகவும் நடந்து விடுகிறது. எனவே மதுபனிற்கு இந்த வரதானத்தின் ஆசிகள் கிடைக்கும். ஏனெனில் மதுபன் லைட் ஹவுஸ் (கலங்கரை விளக்கம், சக்தியின் இருப்பிடம்) ஆகும் கலங்கரை விளக்கத்தின் லைட் நாலா புறங்களிலும் பரவுகிறது அல்லவா? பல்ப்-ன் லைட் நாலா புறங்களிலும் பரவுவது இல்லை. லைட்ஹவுஸ் ஆகி அவ்யக்த ஸ்திதி அவ்யக்த நடத்தையின் லைட் நாலா புறங்களிலும் பரப்புங்கள். பிடித்திருக்கிறதுதானே? மதுபனில் இருப்பவர்கள் அனுபவம் உடையவர்கள் ஆவார்கள். மதுபனில் இருப்பவர்களுக்கு என்ன கஷ்டம்! எது வேண்டுமோ அவர்களால் செய்ய முடியும் ஏனெனில் சாதனையின் வாயுமண்டலம் கூட இருக்கிறது மேலும் சாதனங்கள் கூட

இருக்கின்றது மதுபனின் எவ்வளவு சாதனங்கள் இருக்கின்றதோ அந்த அளவிற்கு சேவா கேந்திரங்களில் சாதனங்கள் இல்லை. எப்படி மதுபனில் சாதனைக்கான வாயுமண்டலம் இருக்கிறதோ அது போல வாயு மண்டலம் சேவா கேந்திரத்தில் அமைக்க வேண்டி வருகிறது. இங்கோ இயல்பாகவே உள்ளது.

புருஷார்த்தம் (முயற்சி) ஒவ்வொருவரினுடையதும் தனிப்பட்டது ஆகும். எண்ணிக்கை எவ்வளவு இருந்தாலும் கூட சரி ஆனால் புருஷார்த்தம் ஒவ்வொருவரும் சுயம் தாங்கள் தான் செய்ய வேண்டி உள்ளது. அலௌகீக தன்மையை எடுத்து வருவதற்கு ஒரு சுலோகன் எப்பொழுதும் நினைவில் கொள்ளுங்கள். அது பிரம்மாதந்தைக்கு சதா பிரியமாக இருந்த சுலோகன். அது என்ன சுலோகன்? கம் கர்ச்சா பாலா நஷீன் அதாவது குறைந்த செலவில் அதிக பலன் பெறுவது. இந்த சுலோகன் சதா நினைவில் கொள்ளுங்கள். குறைந்த செலவிலும் அதிக பலனை எடுத்து வந்து காண்பியுங்கள். அப்படி இன்றி குறைந்த செலவு செய்ய வேண்டும் என்றால் குறைவு தென்பட்டு விடுவது அல்ல. செலவு குறைவாக இருக்கட்டும் ஆனால் அதன் மூலமாக பெறப்படும் பிராப்தி பெருமைக்குரியதாக இருக்கட்டும். குறைந்த செலவில் பெருமைக்குரிய (ரிஸல்ட்) பலன் இருக்கட்டும் இதற்கு தான் குறைந்த செலவில் அதிக பலன் என்பார்கள். எனவே அலௌகீக வாழ்க்கையை அமைப்பதற்காக எல்லாவற்றிலுமே குறைந்த செலவு அதிக பலன் என்று ஆக வேண்டும். சொல்லில் கூட, செயலில் கூட குறைந்த செலவு என்றால் எனர்ஜி (சக்தி) சங்கல்பம் அதிகமாக செலவிடக் கூடாது. குறைந்த செலவில் அதிகமான காரியங்கள் செய்தல் அப்படி இன்றி வேலைகளையே குறைத்து விடுவது என்பதல்ல. குறைந்த நேரத்தில் அதிகமான செயல்கள் செய்ய வேண்டும். குறைந்த வார்த்தைகளாக இருக்கலாம் ஆனால் அந்த குறைந்த சொற்களில் விளக்கம் தெளிவு அதிகமாக இருக்க வேண்டும், எண்ணங்கள் குறைவாக இருக்க வேண்டும், ஆனால் சக்திசாலியாக இருக்க வேண்டும். இதற்குத்தான் குறைந்த செலவில் அதிக பலன் என்பார்கள். அனைத்து கஜானாக்களிலும் குறைந்த செலவில் அதிக பலன் செய்து காண்பியுங்கள். மதுபன் நிவாசிகளோ நிரம்பியவர்களாக இருக்கிறீர்கள். கூறினார் அல்லவா. மதுபனின் பண்டாரா (உண்டியல்) கூட நிரம்பி உள்ளது. னவே மதுபன் நிவாசிகளினுடையதும் கூட சர்வ சக்திகளின்

கஜானாக்கள் மூலம் பண்டாரா நிரம்பி உள்ளது. (பாபா, அட்வான்ஸ் பார்ட்டியினுடைய பங்கு இப்பொழுது என்னவாக இருக்கிறது). உங்களுடைய (role) பாகம் எதுவோ அதுவே அவர்களுடைய பாகமாக இருக்கிறது. நீங்கள் சுபபாவனையுடன் சேவை செய்கிறீர்கள் அல்லவா? சண்டை சச்சரவுகளுக்கிடையில் ஒன்றும் போய் செய்து கொண்டு இருப்பதில்லை அல்லவா? எனவே அவர்கள் கூட தங்கள் வைப்ரேஷன் (அதிர்வலைகள்) மூலம் எல்லாமே செய்து கொண்டிருக்கிறார்கள்.

**மாநாட்டிற்கான (conference) செய்தி:** மாநாட்டில் முதலில் அந்த அளவிற்கு அமைதியின் வைப்ரேஷன் கொடுங்கள். அப்போது தான் வரக் கூடியவர்கள் வர முடியும். இப்பொழுது இதனுடைய அவசியம் உள்ளது மேலும் யோகம் செய்யுங்கள். இது கூட பிராமணர்களுக்கு (கோல்டன் சான்ஸ்) பொன்னான வாய்ப்பு ஆகி விடுகிறது. எப்பொழுதாவது இதுபோல ஏதாவது விசயம் வந்தால் என்ன கூறுகிறீர்கள். யோகம் செய்யுங்கள், அகண்ட யோகம் செய்யுங்கள் எனவே உலகத்தின் அசாந்தி மேலும் பிராமணர்களுக்கு கோல்டன் சான்ஸ். ஆக இது கூட நடு நடுவில் புத்தியை இன்னும் ஒருமுகப்படுத்துவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. (curfew -ஊரடங்கு நேரத்தில் வகுப்பிற்கு வர முடிவதில்லை) ஆனால் மாணவர்கள் என்றால் ஸ்டடி (study) அவசியம் கல்வி பயிலுவார்கள். வீட்டில் கூட செய்ய முடியும் தானே. ஆசிரியருடைய வேலையே தனது யோக சக்தி மூலமாக தங்களது ஏரியாவில் கர்ஃப்யூ ஊரடங்கை நீக்கி விடுமாறு செய்விப்பது. இந்த காட்சியைக் கூட பார்ப்பதால் பயமின்மை அதிகரித்து கொண்டே போகிறது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 18.02.1993 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பிராமண வாழ்க்கையின் மூச்சு எப்பொழுதும் ஊக்கம் மற்றும் உற்சாகமாக இருப்பது!

இன்று திரிமூர்த்தி சிவதந்தை அனைத்துக் குழந்தைகளையும் விசேஷமாக மூன்று சம்மந்தத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார். அனைத்தையும் விட பிரியமான முதல் சம்மந்தம் அனைத்து பிராப்திகளின் அதிகாரியான வாரிசு குழந்தைகள். நீங்கள் வாரிசின் கூடவே ஈஸ்வரிய மாணவர்கள். கூடவே ஒவ்வொரு அடியிலும் பின்பற்றி நடக்கக்கூடிய சத்குருவின் பிரியமானவர்களாகவும் இருக்கிறீர்கள். திரிமூர்த்தி சிவதந்தை குழந்தைகளின் இந்த மூன்று சம்மந்தங்களையும் விசேஷ ரூபத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறார். பார்க்கப்போனால் அனைத்து சம்மந்தத்தையும் வைத்திருக்கும் அனுபவி ஆத்மாக்கள் நீங்கள் ஆனால் இன்று விசேஷமாக மூன்று சம்மந்தத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இந்த மூன்று சம்மந்தங்களும் அனைவருக்கும் பிரியமானது. இன்று முக்கியமாக திரிமூர்த்தி சிவஜெயந்தியைக் கொண்டாடும் ஊக்கத்தில் அனைவரும் ஓடோடி வந்து சேர்ந்து விட்டீர்கள். தந்தைக்கு வாழ்த்து கூறுவதற்காக வந்திருக்கிறீர்களா? அல்லது தந்தையிடமிருந்து வாழ்த்தைப் பெறுவதற்காக வந்திருக்கிறீர்களா? இரண்டு காரியத்தையும் செய்ய வந்திருக்கிறீர்களா? எப்பொழுது பெயரே சிவஜெயந்தி மற்றும் சிவராத்திரி என்றால் திரிமூர்த்தி என்னும் வார்த்தை எதை நிரூபணம் செய்கிறது? பிரஜாபிதா பிரம்மா மூலமாக என்ன செய்கிறார்? பிராமணர்கள் உங்களின் படைப்டைப் படைக்கிறார் இல்லையா? பின்பு அவர்களின் பாலனை நடக்கிறது. அப்படியானால் தந்தையின் கூடவே பிராமணக் குழந்தைகள் நீங்களும் உடன் இருக்கிறீர்கள் என்பதை திரிமூர்த்தி வார்த்தை நிருபனம் செய்கிறது. தனியாகத் தந்தை என்ன செய்வார். எனவே தந்தையின் ஜெயந்தி என்றாலே குழந்தைகள்

பிராமணர்கள் உங்களின் ஜெயந்தியும் தான். எனவே தந்தை குழந்தைகளுக்கு இந்த அலௌகீக தெய்வீக ஜென்மம் மற்றும் இந்த வைர விழாவிற்காகவும் பல கோடி மடங்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கிறார். உங்கள் அனைவரின் வாழ்த்துக்களின் கடிதங்கள், வாழ்த்து அட்டைகள் தந்தையிடம் வந்து சேர்ந்து விட்டன. மேலும் இப்பொழுது கூட அனேகக் குழந்தைகள் எதிரில் இருந்தாலும் அல்லது தூரத்தில் இருந்தாலும், உள்ளத்திலிருந்து வாழ்த்துப் பாடல் பாடிக் கொண்டே இருக்கிறார்கள். தூரத்தில் இருப்பவர்களின் வாழ்த்துப் பாடலைக் கூட காதுகளால் கேட்க முடிகிறது. பாப்தாதாவும் இதற்கு பிரதி உபகாரமாக உள்நாடு மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த அனைத்துக் குழந்தைகளுக்கும் பல கோடி மடங்கு பாராட்டுக்களைத் தெரிவிக்கிறார்.

பிராமண வாழ்க்கையில் ஏதாவது பண்டிகை கொண்டாடுவது என்றால் எப்பொழுதும் ஊக்கம் உற்சாகம் நிறைந்த வாழ்க்கையை உருவாக்குவது என்று அனைத்து குழந்தைகளும் தெரிந்தே இருக்கிறீர்கள். பிராமணர்களின் ஆன்மீக அகராதியில் கொண்டாடுவதின் அர்த்தம் அப்படி ஆவதாகும். அப்படியானால் இன்று பண்டிகையை கொண்டாட மட்டும் செய்வீர்களா? கூடவே எப்பொழுதும் உற்சாகம் நிறைந்த வாழ்க்கையையும் உருவாக்குவீர்களா? எப்படி இந்த ஸ்தூல உடலில் மூச்சு இருக்கிறது என்றால் வாழ்க்கை இருக்கிறது. ஒருவேளை மூச்சு நின்று விட்டால் என்னவாகும்? வாழ்க்கையும் முடிந்து விடும். அப்படி பிராமண வாழ்க்கையின் மூச்சு எப்பொழுதும் ஊக்கம் உற்சாகமாக இருப்பது பிராமண வாழ்க்கையில் ஒவ்வொரு விநாடியும் ஊக்கம் உற்சாகம் இல்லையென்றால் பிராமண வாழ்க்கை இல்லை. மூச்சின் வேகம் கூட இயல்பானதாக இருக்க வேண்டும். ஒருவேளை மூச்சின் வேகம் அதிகமாகி விட்டது என்றால் கூட வாழ்க்கையும் சரியாக இல்லை. மேலும் மெதுவாகி விட்டது என்றால் கூட சரியான வாழ்க்கை என்று கூற முடியாது. அதிகமான இரத்த அழுத்தம் மற்றும் குறைவான இரத்த அழுத்தம் ஆகி விடுகிறது அல்லவா. இதை இயல்பு வாழ்க்கை என்று கூற முடியாது. அம்மாதிரி என்னுடைய பிராமண வாழ்க்கையில் ஊக்கம் உற்சாகத்தின் வேகம் இயல்பாக இருக்கிறதா? அல்லது எப்பொழுதாவது அதிவேகமாகவும், எப்பொழுதாவது மெதுவாகவும் ஆகி விடுகிறதா? ஒரே நிலையில் இருக்கிறதா? என்று இதையும் சோதனை செய்யுங்கள். ஒரே நிலையில்

இருக்க வேண்டும் இல்லையா. சில நேரம் அதிகமாகவும் சில நேரம் குறைவாகவும் இருப்பது நல்லது இல்லை தானே. எனவே சங்கமயுகத்தின் ஒவ்வொரு நேரமும் பண்டிகை நாள். இதையோ (இன்று) விசேஷமாக பொழுதுபோக்கிற்காக கொண்டாடுகிறார்கள். ஏனென்றால் பிராமண வாழ்க்கையில் வேறு எங்கு சென்று பொழுதுபோக்கைக் கொண்டாடுவார்கள்? இங்கே தான் கொண்டாடுவார்கள் இல்லையா? எங்காவது கடற்கரைக்கோ அல்லது தோட்டத்திற்கோ அல்லது கிளப்பிற்கோ செல்ல மாட்டார்கள் இல்லையா? இங்கேயே கடற்கரையும் இருக்கிறது. தோட்டமும் இருக்கிறது என்றால் கிளப்பும் இருக்கிறது. இந்த பிராமண கிளப் நன்றாக இருக்கிறது இல்லையா? அப்படி பிராமண வாழ்க்கையின் மூச்சு ஊக்கம் உற்சாகம் ஆகும். மூச்சின் வேகம் சரியாக இருக்கிறது இல்லையா அல்லது எப்பொழுதாவது மேலே கீழே சென்று விடுகிறதா? பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் சோதனை செய்து கொண்டே இருக்கிறார். இதற்காக காதுகளில் மாட்டிக் கொண்டு சோதிக்க வேண்டியது இல்லை. இன்றைய நாட்களில் கூட அறிவியல் அனைத்தையும் தானாக தெரிவிக்கும்படியாக (ஆட்டோமெடிக்) ஆக்கி விட்டார்கள்.

அப்படி சிவஜெயந்தி மற்றும் சிவராத்திரி இரண்டின் இரகசியத்தை நன்றாகத் தெரிந்து கொண்டீர்கள் இல்லையா? இரண்டின் இரகசியத்தை நீங்களும் தெரிந்து கொண்டீர்கள் மேலும் மற்றவர்களுக்கும் தெளிவாகச் சொல்ல முடியும். ஏனென்றால் தந்தையின் ஜெயந்தியின் கூடவே உங்களுடைய ஜெயந்தியும் இருக்கிறது. உங்களுடைய பிறந்த நாளின் இரகசியத்தை சொல்ல முடியும் அல்லவா? ஞாபகார்த்தமாக பக்தர்கள் கூட மிகவும் பாவனையோடு கொண்டாடுகிறார்கள் ஆனால் வித்தியாசம் என்னவென்றால் அவர்கள் ஒவ்வொரு வருடமும் சிவராத்திரி அன்று விரதத்தைக் கடைப்பிடிக்கிறார்கள் மேலும் நீங்களோ பிக்னிக் செய்கிறீர்கள். ஏனென்றால் நீங்கள் அனைவரும் பிறந்த உடனேயே நிரந்தரமாக அதாவது முழு பிராமண வாழ்க்கைக்காக ஒரு தடவை விரதத்தை எடுத்துக் கொண்டு விட்டீர்கள். எனவே அடிக்கடி செய்ய வேண்டியது இல்லை. அவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் விரதத்தைக் கடைபிடிக்க வேண்டியதாக இருக்கிறது. நீங்கள் அனைவருமே ஜென்மம் எடுத்தவுடனேயே நாங்கள்

எப்பொழுதும் தந்தைக்குச் சமமாக சம்பன்னமாகவும் சம்பூர்ணமாகவும் இருப்போம் என்ற விரதத்தை எடுத்துக் கொண்டு விட்டீர்கள். இந்த விரதத்தை உறுதியாக எடுத்து இருக்கிறீர்களா அல்லது கொஞ்சம் கச்சாவா (உறுதியற்ற நிலை)? எப்பொழுது ஆத்மா மற்றும் பரமாத்மாவின் சம்மந்தம் அழியாதது என்றால் விரதம் கூட அழியாதது தான் இல்லையா. உலகத்தினர் உணவு விஷயத்தில் மட்டும் விரதம் இருக்கிறார்கள். இதன் மூலம் கூட என்ன நிரூபணம் ஆகிறது? நீங்கள் பிராமண வாழ்க்கையில் நிரந்தரமாக உணவுப் பழக்கவழக்கத்தில் விரதம் எடுத்திருக்கிறீர்கள் தான் இல்லையா, அல்லது என்ன விரும்புகிறீர்களோ அதைச் சாப்பிட முடியும் என்ற சுதந்திரம் இருக்கிறதா? மேலும் எப்பொழுதாவது களைப்படைந்து விட்டீர்கள் என்றால் விரதத்தை கைவிட்டு விடுவதா? எப்பொழுதாவது நேரம் கிடைக்கவில்லை என்றால் என்ன சமைப்பது வெளியிலிருந்து வரவழைத்து சாப்பிட்டு விடலாமே என்று எப்பொழுதாவது சோர்ந்து விடுகிறீர்களா? பாருங்கள் உங்களுடைய பக்தர்கள் விரதம் வைத்துக் கொள்கிறார்கள். வருடத்தில் ஒரு முறை என்றால் கூட மரியாதையைக் கடைபிடிக்கிறார்கள் தானே. அப்படி எப்பொழுது உங்களுடைய பக்தர்கள் விரதத்தில் உறுதியாக இருக்கிறார்கள் என்றால் நீங்கள் எவ்வளவு உறுதியானவர்களாக இருக்கிறீர்கள்? உறுதியாக இருக்கிறீர்களா? அல்லது இன்று இல்லையென்றால் நாளை 'போக்' வைத்துக் கொள்ளலாம் என்று சோர்வடைந்து விடுகிறீர்களா? இது கூட பிராமண ஆத்மாக்கள் உங்களின் வாழ்க்கையின் எல்லைக்கப்பாற்பட்ட விரதத்தின் ஞாபகார்த்தமாகத் தான் வைக்கப்பட்டிருக்கிறது.

விசேஷமாக இந்த நாளில் தூய்மையாக இருப்பதின் விரதம் கூட வைத்துக் கொள்கிறார்கள். ஒன்று தூய்மையின் விரதத்தைக் கடைப்பிடிக்கிறார்கள், இரண்டாவது உணவு விஷயத்தில் விரதம் இருக்கிறார்கள். மூன்றாவது முழு நாளும் யாருக்கும் எந்த விதமான துக்கம் அல்லது ஏமாற்றமும் கொடுக்காத விரதமும் இருக்கிறார்கள் ஆனால் உங்களின் இந்த பிராமண வாழ்க்கையின் விரதம் எல்லைக்கப்பாற்பட்டது. அவர்களுடையது ஒரு நாளுக்கானது தூய்மையின் விரதத்தையோ பிராமணனாக பிறந்ததிலிருந்தே தாரணை செய்து விட்டீர்கள் தான் இல்லையா? பிரம்மச்சரியம் மட்டும்

இல்லை ஆனால் 5-விகாரங்களின் மேலும் வெற்றி இருக்க வேண்டும். இதைத் தான் தூய்மையின் விரதம் என்று கூறுவது. அப்படியானால் தூய்மையின் விரதத்தில் எது வரை வெற்றி அடைந்திருக்கிறோம் என்று சிந்தியுங்கள். எப்படி பிரம்மச்சர்யம் அதாவது மிகப் பெரிய எதிரியான காமத்தின் மேல் வெற்றி அடைவதற்காக முக்கிய கவனம் வைக்கிறீர்கள் அதே போல் காமத்தின் மற்ற நான்கு துணைவர்கள் அவர்கள் மேலும் அதே அளவு கவனம் இருக்கிறதா? அல்லது கொஞ்சம் கொஞ்சம் கோபப்படலாம் என்று அதற்கு அனுமதி இருக்கிறதா? அனுமதி கிடையாது ஆனால் உங்களுக்கு நீங்களே அனுமதி கொடுத்து விடுகிறீர்கள். கோபத்தின் குழந்தை குட்டிகள் இருக்கிறார்கள் இல்லையா, அவர்களுக்கு அனுமதி கொடுத்து விட்டீர்கள் என்று பார்க்க முடிகிறது. பெரிய பூதமாகிய கோபத்தையோ விரட்டி விட்டீர்கள் ஆனால் அதனுடைய குழந்தைக் குட்டிகள் இருக்கிறார்கள் இல்லையா அவர்கள் மேல் சொஞ்சம் அன்பு இப்பொழுதும் கூட வைக்கிறீர்கள். எப்படி சின்ன குழந்தைகள் பார்ப்பதற்கு மிகவும் பிரியமானவர்களாக இருக்கிறார்கள் இல்லையா, அதேபோல் கோபத்தின் குழந்தை குட்டிகள் எப்பொழுதாவது மிகவும் பிரியமானவர்களாகத் தென்படுகிறார்கள். விரதம் என்றால் சம்பூர்ணத் தூய்மையின் விரதம் வைப்பது. அனேகக் குழந்தைகள் மிக மிக நல்ல விஷயங்களை வந்து கூறுகிறார்கள். எனக்கு கோபம் வரவில்லை ஆனால் கோபத்தை இன்னொருவர் வரவழைத்தார் என்றால் என்ன செய்வது? என்று கூறுகிறார்கள். எனக்கு வரவில்லை மற்றவர்கள் உருவாக்குகிறார்கள் என்று மிகவும் சுவாரஸ்யமான விஷயங்களைப் பேசுகிறார்கள், நீங்களும் அந்த நேரம் இருந்தீர்கள் என்றால் உங்களுக்கும் கோபம் வந்து விடும் என்றும் கூறுகிறார்கள். பாப்தாதா இதற்கு என்ன கூறுவார். பாப்தாதாவும் உங்களை மன்னித்தாகி விட்டது ஆனால் மீண்டும் செய்யாதீர்கள் என்று கூறுகிறார்.

சிவராத்திரியின் அர்த்தமே இருளை நீக்கி ஒளியைக் கொண்டு வரும் இராத்திரி ஆகும். மாஸ்டர் ஞான சூரியன் உதயமானார், இது தான் சிவராத்திரி. நீங்கள் கூட மாஸ்டர் ஞான சூரியன் ஆகி உலகின் இருளை நீக்கி ஒளியை கொண்டு வருபவர்கள். யார் உலகிற்கே ஒளியைக் கொடுப்பவரோ அவர் சுயம் எப்படி இருப்பார்? சுயம் இருளில் இருக்க மாட்டார் இல்லையா. விளக்கு மாதிரி நீங்கள் இல்லையே? விளக்கின்

கீழே இருள் இருக்கிறது மேலே வெளிச்சம் இருக்கிறது. நீங்கள் மாஸ்டர் ஞான சூரியன் ஆவீர்கள். அப்படி மாஸ்டர் ஞான சூரியன் தானும் பிரகாசமாக இருக்கிறார், ஒளி மற்றும் சக்தி சொரூபமாக இருக்கிறார் மேலும் மற்றவர்களுக்கும் ஒளி மற்றும் ஈக்தி கொடுப்பவராக இருக்கிறார். எங்கு எப்பொழுதும் வெளிச்சம் இருக்கிறதோ அங்கு இருள் இருப்பதற்கான கேள்விக்கே இடம் இல்லை. இருள் இருக்கவே முடியாது. அப்படி சம்பூர்ணத் தூய்மை என்றால் வெளிச்சம் இருளை நீக்கக்கூடிய ஆத்மாக்களிடம் இருள் இருக்க முடியாது. இருக்க முடியுமா? வர முடியுமா? சரி இருக்கவில்லை ஆனால் வந்து போய் விடுகிறது. இப்படி இருக்க முடியுமா? ஒருவேளை ஏதாவது விகாரத்தின் அம்சம் இருக்கிறது என்றால் அதை வெளிச்சம் என்று கூறலாமா அல்லது இருள் என்று கூறலாமா? இருள் முற்றிலும் அகன்று விட்டது இல்லையா. சிவராத்திரியின் படத்தையும் காண்பிக்கிறீர்க்ள் தான் இல்லையா, அதில் என்ன காண்பிக்கிறீர்கள்? இருள் ஓடிக் கொண்டிருக்கிறது அல்லது கொஞ்சம் கொஞ்சம் இருந்து விட்டதா? இந்த சிவராத்திரியில் விசேஷமாக என்ன செய்வீர்கள்? ஏதாவது செய்வீர்களா அல்லது கொடி மட்டும் ஏற்றிப் பறக்க விடுவீர்களா? எப்பொழுதும் உறுதிமொழி எடுக்கிறீர்கள், நாங்கள் இதை செய்ய மாட்டோம், இதை செய்ய மாட்டோம் என்று, பிறகு அதைச் செய்யவும் செய்வீர்கள். அந்த மாதிரி இல்லையே? உறுதிமொழியின் அர்த்தமே உயிரே போனாலும் உறுதிமொழியிலிருந்து விலகக் கூடாது என்று ஏற்கனவே கூறியிருந்தோம். எதையும் தியாகம் செய்வதாக இருந்தாலும், எதையும் கேட்க வேண்டியதாக இருந்தாலும் உறுதிமொழி உங்களிடம் இருந்து செல்ல வேண்டாம். எப்பொழுது ஏதாவது பிரச்சனை இல்லை என்றால் அந்த நேரம் உறுதிமொழி சரியாக இருக்கிறது. ஒருவேளை ஏதாவது பிரச்சனை வந்து விட்டது என்றால் பிரச்சனை சக்திசாலியாகி விட்டது மேலும் உறுதிமொழி அதன் எதிரில் பலஹீனமாக ஆகி விடுவது என்று அப்படி இருக்க வேண்டாம். இதை உறுதிமொழி என்று கூறப்படுவதில்லை. வார்த்தை என்றால் வார்த்தை. அப்படி அந்த மாதிரியான உறுதிமொழியை மனதால் சொல்லுங்கள். வெறும் வார்த்தைகளால் மட்டும் அல்ல. வார்த்தைகளால் செய்பவர் அந்த நேரமோ சக்திசாலியான எண்ணத்தைச் செய்கிறார். வார்த்தைகளால் செய்பவரிடம் சக்தி என்னவோ இருக்கிறது ஆனால் அனைத்து சக்திகளும் இருப்பதில்லை.

எப்பொழுது மனதால் உறுதிமொழி செய்கிறீர்களோ மேலும் யாருக்கு உறுதிமொழி கொடுத்தீர்கள்? தந்தையிடம்! அப்பொழுது தந்தையிடம் மனதால் உறுதிமொழி செய்வதென்றால் மனதை மன்மனாபவ என்று ஆக்குவது. மேலும் மன்மனாபவ என்பதன் அர்த்தம் எப்பொழுதும் எந்தவொரு சூழ்நிலையிலும் அது ஒரு ஆயுதம் ஆகி விடுகிறது ஆனால் மனதால் செய்வதினால் இவை ஏற்படும். நான் இதை செய்யவே கூடாது என்று மனதில் வருகிறது. ஒருவேளை மனதில் இந்த எண்ணம் இருக்கிறது. அதாவது முயற்சி செய்வோம். செய்யத்தான் வேண்டும். ஆகத்தான் வேண்டும். அந்த மாதிரி செய்யவில்லை என்றால் என்னவாகும். என்ன செய்வது எனவே செய்து விடுவோம் என்று மனதில் எண்ணம் இருக்கிறது என்றால் இதை கொஞ்சம் கொஞ்சம் நிர்பந்தம் என்று கூறப்படும். யார் மனதால் செய்பவராக இருப்பாரோ அவர் செய்து தான் ஆக வேண்டும் என்று நினைக்க மாட்டார். அவர் தந்தை கூறியிருக்கிறார் என்றால் அது நடந்தே முடிந்த மாதிரி தான் என்று யோசிப்பார். நிச்சயம் மற்றும் வெற்றியில் கவலையற்றிருப்பார். இது தான் முதல் நம்பரின் உறுதிமொழியாகும் இரண்டாம் நம்பரில் வரும் உறுதிமொழி எப்படி இருக்கும் என்றால் ஆகத்தான் வேண்டும், செய்து தான் ஆக வேண்டும், எப்பொழுது நடக்கும் என்று தெரியவில்லை என்று கூறுவது. பாப்தாதாவிடம் ஒவ்வொருவரும் எத்தனை தடவை உறுதிமொழி செய்திருக்கிறார்கள் என்ற முழு கோப்பும் இருக்கிறது. கோப்பு மிகப் பெரியதாக ஆகி விட்டது இப்பொழுது ஃபைலை நிரப்ப வேண்டாம் ஃபைனல் செய்யுங்கள். எப்பொழுது யாராவது உறுதிமொழிக் கடிதம் எழுதி வைக்கலாமா என்று பாப்தாதாவிடம் கூறுகிறார் என்றால் பாப்தாதாவின் எதிரில் முழு கோப்பும் வந்து விடுகிறது. இப்பொழுது கூட அப்படி செய்வீர்களா? ஃபைலின் பேப்பரை அதிகப்படுத்துவீர்களா அல்லது ஃபைனல் உறுதிமொழி செய்வீர்களா? உறுதிமொழி பலஹீனம் ஆகுவதற்கான ஒரேவொரு காரணம் என்னவென்று பாப்தாதா பார்த்தார். அந்த வார்த்தை விதவிதமான ராயல் ரூபத்தில் வருகிறது மேலும் பலஹீனப்படுத்துகிறது. ஒரேவொரு வார்த்தை தேகஅபிமானத்தின் 'நான்'! இந்த 'நான்' என்ற வார்த்தை தான் ஏமாற்றம் கொடுக்கிறது. நான் இப்படி புரிந்து கொள்கிறேன். 'நான்' தான் இதைச் செய்ய முடியும். 'நான்' என்ன கூறுகிறேனோ அது தான் சரி, நான் என்ன யோசித்தேனோ அது தான் சரி, அப்படி விதவிதமான ராயல் ரூபத்தில் 'இந்த 'நான்' என்பது

உறுதிமொழியை பலஹீனமாக்கி விடுகிறது. கடைசியில் பலஹீனமாகி மனமுடைந்து நான் இவ்வளவு சகித்துக் கொள்ள முடியாது என்று கூறுகிறார்கள். தன்னை இவ்வளவு பணிவானவராக முற்றிலும் ஆக்கி விடுவது, அந்தளவு என்னால் முடியாது. இவ்வளவு பிரச்சனைகளைக் கடந்து செல்ல முடியாது கடினம் என்று கூறுகிறார்கள். இந்த நான் என்பது பலஹீனம் ஆக்குகிறது. மிக நல்ல ராயல் ரூபத்தில் வருகிறது. உங்களுடைய வாழ்க்கையைப் பாருங்கள். இதே 'நான்' என்பது சம்ஸ்காரத்தின் ரூபத்தில் சுபாவத்தின் ரூபத்தில், உணர்வின் ரூபத்தில், பாவனையின் ரூபத்தில் வார்த்தைகளின் ரூபத்தில், சம்மந்தம் நெருக்கத்தின் ரூபத்தில் மேலும் மிக இனிமையான ரூபத்தில் வருகிறதா? என்று பாருங்கள். சிவராத்திரியில் இந்த 'நான்' 'நான்' என்பதை பலி கொடுங்கள். பாவம் பக்தர்களோ அந்த மே மே என்று கூறும் ஆட்டைப் பலி கொடுக்கிறார்கள். நான், நான் என்று கத்துவதைப் பலி கொடுக்கிறார்கள் ஆனால் நான் நான் என்பதை பலி கொடுங்கள். உங்களுடைய ஞாபகார்த்தமாக வேறு ரூபத்தில் கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். பலி கொடுத்து விட்டீர்களா அல்லது இப்பொழுது கொஞ்சம் நான் என்பதின் பலி கொடுப்பது மிச்சம் இருக்கிறதா, என்ன ரிசல்ட்? உறுதிமொழி செய்கிறோம் என்றால் சம்பூர்ண உறுதிமொழி செய்யுங்கள். எப்பொழுது தந்தை மேல் அன்பு இருக்கிறது. அன்பிலோ அனைவரும் பாஸாகி விட்டீர்கள். யாராவது எனக்கு தந்தை மேல் 75-சதவிகிதம் அன்பு இருக்கிறது. 50-சதவிகிதம் அன்பு இருக்கிறது என்று கூறுவார்களா? அன்பிற்காக அனைவரும் கூறுவார்கள் 100-சதவிகிதத்தையும் விட அதிகமான அன்பு இருக்கிறது என்று. பாபாவும் கூறுகிறார் அனைவரும் அன்பு செய்பவர்கள். இதில் அனைவரும் பாஸ். அன்பில் தியாகம் செய்வது என்ன பெரிய விஷயமா? அப்படி மனதால் உறுதிமொழி கொடுங்கள் மேலும் திடமாக இருங்கள். அடிக்கடி உறுதிமொழி சக்திசாலியாக இருக்கிறதா அல்லது சோதனை சக்திசாலியாக இருக்கிறதா என்று உங்களை நீங்களே பரிசோதனை செய்யுங்கள். ஏதாவது ஒரு சோதனை உறுதிமொழியைப் பலஹீனம் ஆக்கி விடுகிறது.

இரட்டை வெளிநாட்டினரோ உறுதிமொழி செய்வதில் மிகவும் திறமைசாலிகள் தான் இல்லையா? உடைப்பதில் இல்லை, இணைப்பதில் திறமைசாலிகளாக இருக்கிறீர்கள். பாப்தாதா அனைத்து

## 1993 அவ்யக்த முரளி

இரட்டை வெளிநாட்டு குழந்தைகளின் பாக்கியத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். தந்தையைத் தெரிந்து கொண்டீர்கள். இது தான் அனைத்தையும் விட பெரியதிலும் பெரிய அதிசயக் காரியம். இரண்டாவது அதிசயம் விதவிதமான மரத்தின் கிளைகளாக இருந்தும் கூட ஒரு தந்தையின் சந்தன மரத்தின் கிளைகளாகி விட்டீர்கள். நீங்கள் இப்பொழுது ஒரே மரத்தின் கிளைகளாக இருக்கிறீர்கள் பல விதத்தில் ஒற்றுமையைக் கொண்டு வந்தீர்கள். வேறு வேறு நாடுகள். வேறு வேறு மொழிகள். வேறு வேறு கலாச்சாரம் ஆனால் நீங்கள் பல வகையை ஒற்றுமையில் கொண்டு வந்திருக்கிறீர்கள். இப்பொழுது அனைவரின் கலாச்சாரம் எது? பிராமணக் கலாச்சாரம். உங்களுடைய வெளிநாட்டின் கலாச்சாரம் இப்படி கூறுகிறது என்று ஒருபொழுதும் சொல்லாதீர்கள் அல்லது எங்களுடைய பாரதத்தின் கலாச்சாரம் இப்படி இருக்கிறது என்று பாரதவாசிகளும் கூற வேண்டாம். பாரதத்தினுடையதும் அல்ல, வெளிநாட்டினருடையதும் அல்ல, பிராமணக் கலாச்சாரம். அப்படி பல வகையில் ஒற்றுமை -இது தான் அதிசயக் காரியம் மேலும் என்ன அதிசயம் செய்தீர்கள்? தந்தையின் குழந்தையாக ஆகி விட்டீர்கள் என்றால் அனைத்து விதமான வேறு வேறு பழக்கவழக்கங்கள் தினசரி நடவடிக்கை அனைத்தையும் ஒன்றாக்கி ஒன்று என்று செய்து விட்டீர்கள். அமெரிக்காவில் இருந்தாலும் லண்டனில் இருந்தாலும் எங்கு இருந்தாலும் பிராமணர்களின் தினசரி நடவடிக்கை ஒன்றே தான். அல்லது வேறு வேறா? வெளிநாட்டின் தினசரி நடவடிக்கை வேறாகவும் பாரதத்தின் தினசரி நடவடிக்கை வேறாகவும் இருக்க முடியாது. அனைவருக்கும் ஒன்றே ஒன்று தான். அப்படி இந்த விதவிதங்களின் தியாகம் இந்த அதிசயத்தை செய்திருக்கிறீர்கள். புரிந்ததா, என்ன அதிசயம் செய்தீர்கள் என்று. எப்படி நீங்கள் தந்தை அதிசயம் செய்தார் என்று தந்தையின் மஹிமையைப் பாடுகிறீர்கள் இல்லையா, தந்தையும் குழந்தைகள் அதிசயம் செய்தார்கள் என்று பாடுகிறார். பாப்தாதா பார்த்துப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார். தந்தை மகிழ்ச்சி அடைகிறார் மேலும் குழந்தைகள் குஷியில் ஆடிக் கொண்டிருக்கிறார்கள்.

சேவையும் நாலாபுறமும் உள்நாட்டிலும் மற்றும் வெளிநாட்டிலும் நடப்பதைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இருவரும் சேவையில் பந்தயம் செய்து கொண்டிருக்கிறார்கள். அனைத்து நிகழ்ச்சிகளும் மிகவும் நன்றாக நடந்தன. மேலும் வருங்காலத்திலும் நடந்து

கொண்டிருக்கும். இந்த உறுதியான எண்ணத்தை உபயோகிப்பது என்றால் வெற்றி அடைவது என்பதாகும். எவ்வளவு உறுதியான எண்ணத்தை பயனுள்ளதாக ஆக்கிக் கொண்டே செல்வீர்களோ அவ்வளவு சுலபமாக வெற்றியின் அனுபவத்தை செய்து கொண்டே இருப்பீர்கள்.

ஒருபொழுதும் இது எப்படி நடக்கும்? என்று நினைக்காதீர்கள். எப்படி என்பதற்குப் பதிலாக அப்படி நடக்கும் என்று நினையுங்கள். சங்கமயுகத்தில் அசம்பவத்தை சம்பவமாக்குவது தான் விசேஷ தானமாகக் கிடைத்திருக்கிறது. அப்படி எப்படி என்ற வார்த்தை வரவே முடியாது. இது நடப்பது கடினம் என்று இல்லவே இல்லை. நிச்சயம் வைத்து நடந்து கொண்டீர்கள் என்றால் அது ஏற்கனவே நடந்து இருக்கிறது, நடைமுறையில் மட்டும் கொண்டு வர வேண்டும். இதை ரிபீட் (repeat) செய்ய வேண்டும். உருவாக்கப்பட்டிருக்கிறது. உருவாக்கப்பட்டதை உருவாக்குவது அதாவது ரிபீட் செய்வது, சுலபமான வெற்றியின் ஆதாரம். உறுதியான எண்ணத்தின் பொக்கிஷத்தை பயனுள்ளதாக உபயோகியுங்கள் என்பது தான் கூறப்படுகிறது. புரிந்ததா? என்ன நடக்கும் எப்படி நடக்கும் என்று அப்படி இல்லை. நடக்கும் மேலும் எளிதாக நடக்கும். எண்ணத்தின் குழப்பம் இருக்கிறது என்றால் அது வெற்றியையும் குழப்பத்தில் கொண்டு வரும். நல்லது.

நாலாபுறமும் உள்ள எப்பொழுதும் பண்டிகையை கொண்டாடிக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு, எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்தில் பறந்து கொண்டிருக்கக்கூடிய குழந்தைகளுக்கு, எப்பொழுதும் சம்பூர்ணத் தூய்மைக்கு பாத்திரமான அதிகாரி ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அசம்பவத்தை சுலபமாக சம்பவமாக்கக்கூடிய குழந்தைகளுக்கு, சதா ஒவ்வொரு விதமான சோதனைகளை பலஹீனமாக்கி உறுதிமொழியை சக்திசாலியாக ஆக்கக்கூடிய குழந்தைகளுக்கு, எப்பொழுதும் தந்தையின் அன்பிற்கு பிரதிபலனாக எதை தியாகம் செய்ய வேண்டியது இருந்தாலும் அதை தைரியமாக செய்யக்கூடிய குழந்தைகளுக்கு, அந்த மாதிரி திரிமூர்த்தி சிவதந்தையின் உடன் பிறப்பாகிய பிராமண ஆத்மாக்களுக்கு. ஆன்மீக

# 1993 அவ்யக்த முரளி

பிறந்த நாளின் அன்பு நினைவுகளும் வாழ்த்துக்களும். பாப்தாதாவினுடைய விசேஷ உயர்ந்த ஆத்மாக்களுக்கு நமஸ்காரம்.

வரதானம்: தெய்வீக புத்தியின் வாகனம் மூலமாக மூன்று உலகங்களையும் சுற்றி வரக்கூடிய ஞான சொரூப வித்யாபதி ஆகுக!

தெய்வீக புத்தி என்றால் புனித அன்னப்பறவை புத்தி என்பதாகும். அன்னப்பறவை என்றால் பால் மற்றும் நீரை, முத்து மற்றும் கல்லை பகுத்தறிந்து பாலையும் முத்தையும் கிரகணம் செய்யக்கூடியவர்கள். எனவே புனித அன்னப்பறவை சங்கமயுக ஞான சொரூப வித்யாதேவி சரஸ்வதியின் வாகனமாக இருக்கிறது. நீங்கள் அனைவரும் ஞான சொரூபமானவர்கள் எனவே வித்யாபதி மற்றும் வித்யாதேவிகளாக இருக்கிறீர்கள். இந்த வாகனம் தெய்வீக புத்தியின் அடையாளம் ஆகும். இந்த தெய்வீக புத்தியின் வாகனம் மூலமாக நீட்கள் மூன்று உலகத்தையும் சுற்றி வருகிறீர்கள். இந்த வாகனம் அனைத்து வாகனங்களையும் விட மிக வேகமாகச் செல்லக்கூடியது ஆகும்.

சுலோகன்: தன்னுடைய அனைத்து சக்திகளையும் மற்ற ஆத்மாக்களுக்காக வில் (எழுதிக் கொடுப்பது) செய்வது தான் அனைத்தையும் விட உயர்ந்த சேவை ஆகும்!

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

## 07.03.1993 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஹோலி கொண்டாடுவது என்றால் மிக உயர்ந்தவராக மற்றும் புனிதமானவராக ஆவது!

இன்று பாப்தாதா தன்னுடைய அனைத்து மிக உயர்ந்த மற்றும் புனிதமான குழந்தைகளைப் பார்த்துச் கொண்டிருக்கிறார். அனைத்து குழந்தைகளும் இந்த எல்லைக்கட்பாற்பட்ட நாடகத்தினுள் மற்றும் சிருஷ்டி சக்கரத்தினுள் மிக உயர்ந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் மேலும் அனைவரையும் விட அதிக புனிதமானவர்களாகவும் இருக்கிறீர்கள். ஆரம்பத்திலிருந்து இப்பொழுது சங்கமயுக நேரம் வரை ஆத்மாக்கள் உங்களைப் போன்று யாருமே உயர்ந்தவர்களாக ஆவதில்லை என்பதை பாருங்கள். எவ்வளவு நீங்கள் உயர்ந்த நிலையை உயர்ந்த பதவியை அடைகிறீர்களோ அவ்வளவு வேறு எந்த ஆத்மாவும் தர்ம தந்தைகளாக இருந்தாலும் மஹான் ஆத்மாக்களாக இருந்தாலும் யாருமே இந்தளவு உயர்ந்தவர்களாக இருக்கவில்லை. ஏனென்றால் நீங்கள் உயர்ந்ததிலும் உயர்ந்த பகவான் மூலமாக நேரடி வளர்ப்பு படிப்பு மற்றும் உயர்ந்த வாழ்க்கையின் ஸ்ரீமத்தை அடையக்கூடிய ஆத்மாக்களாக இருக்கிறீர்கள். உங்களை நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? உங்களுடைய அனாதி (பரந்தாமம்) காலத்தைப் பாருங்கள். அனாதி காலத்தில் கூட பரந்தாமத்தில் தந்தையின் அருகில் இருக்கக்கூடியவர்கள். உங்களுடைய ஸ்தானம் நினைவிருக்கிறதுதானே? அப்படி அனாதி காலத்தில் கூட உயர்ந்தவர்களாக இருக்கிறீர்கள், அருகில் உடன் இருப்பவர்களாக இருக்கின்றீகள் மேலும் ஆதி காலம் (சத்யுகம்) ஆதிகாலத்தில் கூட சிருஷ்டி சக்கரத்தின் சத்யுக காலத்தில் தேவ பதவி பிராப்தத்தை அடையக்கூடிய ஆத்மாக்களாக இருக்கிறீர்கள். தேவ ஆத்மாக்களின் காலம் "ஆதிகாலம்" கூட மிக உயர்ந்தது. மேலும் சாகார மனித வாழக்கையில் அனைத்து பிராப்திகள் நிரம்பியவர்களாக

உயர்ந்தவர்களாக இருக்கிறீர்கள். சிருஷ்டி சக்கரத்தினுள் இந்த தேவ பதவி அதாவது தேவதா வாழ்க்கை தான் அந்த மாதிரியான வாழ்க்கை -அங்கு உடல், மனம், செல்வம், மக்கள் இந்த நான்கு விதமான அனைத்து பிராப்திகளும் பிராப்தியாகிறது. உங்களுடைய தேவ வாழ்க்கை நினைவிருக்கிறதா? அல்லது மறந்து விட்டீர்களா? அனாதி காலமும் நினைவு வந்து விட்டது. ஆதி காலமும் நினைவு வந்து விட்டது. மிகவும் நன்றாக நினைவு செய்யுங்கள். அப்படி இரண்டு காலத்திலும் உயர்ந்தவர்களாக இருந்தீர்கள் தான் இல்லையா?

அதற்கு பிறகு மத்திய காலத்தில் வாருங்கள். துவாபர யுகத்தில் ஆத்மாக்கள் உங்களுடைய ஜடச்சிலைகள் உருவாகின்றன, அதாவது பூஜைக்குரிய ஆத்மாக்களாக ஆகுகிறீர்கள். பூஜையிலும் கூட பார்த்தால் மிக அதிகமாக விதிப்பூர்வமான பூஜை தேவ ஆத்மாக்களுக்குத்தான் நடக்கிறது. உங்கள் அனைவரின் கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. வெளி நாட்டினருக்கு கோயில்கள் கட்டப்பட்டிருக்கின்றனவா? அல்லது பாரத வாசிகளுக்கு மட்டும் கட்டப்பட்டிருக்கின்றனவா? கட்டப்பட்டிருக்கின்றன தான் இல்லையா. எப்படி தேவ ஆத்மாக்களின் பூஜை நடக்கிறதோ அதே போல் வேறு எந்த ஆத்மாக்களுக்கும் பூஜை நடப்பதில்லை. ஏதாவது மகாத்மா போன்றவர்களை கோயிலில் அமரவோ வைக்கிறார்கள், ஆனால் அந்த மாதிரி பாவனை மற்றும் விதிப்பூர்வமாக ஒவ்வொரு காரியத்திற்கும் பூஜை நடப்பதில்லை. அப்படி மத்திய காலத்தில் கூட பூஜ்ய ரூபத்தில் சிரேஷ்டமானவர்களாக, உயர்ந்தவர்களாக இருக்கிறீர்கள்.

இப்பொழுது கடைசியில் வாருங்கள். இப்பொழுது சங்கமயுகத்தில் கூட உயர்ந்ததிலும் உயர்ந்த பிராமண ஆத்மாக்கள், "பிராமணரிலிருந்து பரிஷ்தா" ஆத்மாக்களாக ஆகுகிறீர்கள். அப்படி அனாதி ஆதி, மத்திய காலம் மற்றும் கடைசியில் கூட உயர்ந்தவர்களாக ஆகி விட்டீர்கள் தான் இல்லையா? இந்தளவு போதை இருக்கிறதா? ஆன்மீக போதை இருக்கிறதல்லவா? அபிமானம் இல்லை ஆனால் சுவமானம் இருக்கிறது. சுவமானத்தின் போதை இருக்கிறது. சுவ என்றால் ஆத்மாவின், உயர்ந்த ஆத்மாவின் ஆன்மீக போதை இருக்கிறது. அப்படி முழு சக்கரத்திலும் உயர்ந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் மேலும் கூடவே ஹோலியஸ்ட் (புனிதமானவர்களாகவும்) ஆகவும்

இருக்கிறீர்கள். மற்ற ஆத்மாக்களும் ஹோலி அதாவது தூய்மை ஆகுகிறார்கள் என்றாலும் உங்களுடைய நிகழ்காலத்தின் தூய்மை மற்றும் தேவதா வாழ்க்கையின் தூய்மை அனைத்தையும் விட உயர்ந்தது மற்றும் வித்தியாசமானது. இந்த நேரத்தில் கூட சம்பூர்ணத் விய்மை அதாவது ஹோலியாக ஆகுகிறீர்கள்.

சம்பூர்ணத் தூய்மையின் விளக்கம் மிக உயர்ந்தது மற்றும் சுலபமானதும் கூடத்தான். சம்பூர்ணத் தூய்மையின் அர்த்தமே கனவில் கூட தூய்மையின்மை மனம் புத்தியை தொட வேண்டாம். இதைத் தான் உண்மையான வைஷ்ணவன் என்று கூறப்படுவது. இப்பொழுது வரிசைக்கிரமமான முயற்சி செய்பவர்களாக இருந்தாலும் முயற்சியின் லட்சியம் சம்பூர்ணத் தூய்மை ஆவதற்கானது தான். மேலும் சகஜமாக தூய்மையை தாரணை செய்யக்கூடிய ஆத்மாக்கள் நீங்கள். ஏன் சுலபமானது? ஏனென்றால் தைரியம் குழந்தைகளினுடையது மேலும் உதவி சர்வ சக்திவான் தந்தையினுடையது. எனவே கடினம் மற்றும் அசம்பவம் கூட சம்பவமாகி விடுகிறது மேலும் வரிசைக்கிரமமாக அது ஆகிக் கொண்டிருக்கிறது. அப்படி ஹோலி அதாவது தூய்மையின் உயர்ந்த ஸ்திதியின் அனுபவம் பிராமண ஆத்மாக்கள் உங்களுக்கு இருக்கிறது. சுலபமாக இருக்கிறதா? அல்லது கடினமாகப் படுகிறதா? சம்பூர்ணத்தூய்மை கடினமானதா? அல்லது சகஜமானதா? எப்பொழுதாவது கடினம் எப்பொழுதாவது சகஜம் அப்படியா? சம்பூர்னமாக ஆகியே தான் தீர வேண்டும். இந்த லட்சியம் இருக்கிறது இல்லையா? லட்சியமோ மிக உயர்ந்ததாக இருக்கிறது அல்லது லட்சியமே தொய்வாக இருக்கிறதா? எல்லாம் நடக்கிறது அப்படி ஒன்றும் பெரிய விஷயமில்லை அப்படியா? இல்லை. இந்த மாதிரி கொஞ்சம் இருக்கத்தான் செய்யும் என்று நீங்கள் யோசிக்கவில்லையே. கொஞ்சம் கொஞ்சம் அப்படி இப்படி என்று இருக்கும், யாருக்குத் தெரியும், யார் மனதில் உள்ள எண்ணங்களை பார்க்கிறார்கள். கர்மத்திலோ வருவதில்லை என்று அப்படி நினைக்கவில்லையே ஆனால் மனதின் வைப்ரேஷன்ஸ் கூட மறைத்து வைக்க முடியாது. இந்த மாதிரி மனதில் எண்ணத்தை ஓட்டுபவர்களை பாப்தாதா மிக நன்றாக தெரிந்திருக்கிறார். பொதுவாக இதை வெளியில் சொல்வதில்லை இல்லையென்றால் பெயரைக்கூட சொல்ல முடியும் ஆனால் இப்பொழுது சொல்லதில்லை. அந்த மாதிரி எண்ணத்தை

ஓட்டுபவர்கள், தானே அந்த மாதிரி செய்து செய்து திரேதா யுகம் வரை சென்றடைந்து விடுவார்கள் ஆனால் அனைவரின் லட்சியம் சம்பூர்ணத் திய்மையாவதற்கானது தான்.

முழு சக்கரத்தையும் பாருங்கள். தேவ ஆத்மாக்களுக்கு மட்டும் தான் உடலும் தூய்மையாக இருக்கிறது, ஆத்மாவும் தூய்மையாக இருக்கிறது. மற்ற யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ அவர்களுடைய ஆத்மா தூய்மையானாலும் உடல் தூய்மையாக இருப்பதில்லை. ஆத்மாக்கள் நீங்கள் பிராமண வாழ்க்கையில் அந்த மாதிரி தூய்மையாக ஆகுகிறீர்கள், உடலையும் இயற்கையையும் கூட தூய்மையாக ஆக்கி விடுகிறீர்கள். எனவே உடலும் தூய்மையாக இருக்கிறது என்றால் ஆத்மாவும் தூய்மையாக இருக்கிறது ஆனால் உடலாலும் ஆத்மாவாலும் இரண்டினாலும் தூய்மையாக ஆகக்கூடிய ஆத்மாக்கள் யார்? அவர்களை பார்த்திருக்கிறீர்களா? எங்கிருக்கிறார்கள் அந்த ஆத்மாக்கள்? நீங்கள் தானே அந்த ஆத்மாக்கள். நீங்கள் அனைவருமா அல்லது கொஞ்சம் பேர் தானா? உறுதியாக இருக்கிறீர்கள் தானே நாங்கள் தான் இருந்தோம், நாங்கள் தான் ஆகிக் கொண்டிருக்கிறோம் என்று உறுதியாக இருக்கிறீர்கள் தானே. அப்படி உயர்ந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் மேலும் புனிதமானவர்களாகவும் இருக்கிறீர்கள். இரண்டுமாகத்தான் இருக்கிறீர்கள் இல்லையா? எப்படி ஆனீர்கள்? மிக ஆன்மீக தெய்வீக ஹோலியை கொண்டாடுவதினால் ஹோலி (தூய்மை) ஆகி விட்டீர்கள். எந்த விதமான ஹோலியை விளையாடினீர்களோ அதன் மூலம் புனிதமானவர்களாகவும் ஆகியிருக்கிறீர்கள் மற்றும் உயர்ந்தவர்களாகவும் ஆகியிருக்கிறீர்கள்?

அனைத்தையும் விட நல்லதிலும் நல்ல உயர்ந்த வர்ணம் எது? அனைத்தையும் விட அழியாத வர்ணம் தந்தையின் சங் (துணை) என்ற வர்ணம். எப்படி சங்கமோ அதே போல் வர்ணம் ஏற்படுகிறது. அதாவது யாருடன் இருக்கிறார்களோ அவர்கள் போல் ஆகி விடுவார்கள். உங்களுக்கு யாருடைய வர்ணம் பூசப்பட்டு இருக்கிறது? தந்தையினுடையது தான் இல்லையா? அப்படி தந்தையின் சங்கத்தின் வர்ணம் எவ்வளவு உறுதியாக பூசப்பட்டிருக்கிறதோ அந்த அளவே ஹோலி (தூய்மை) ஆகி விடுகிறீர்கள். சம்பூர்ண பவித்ரமாகி விடுகிறீர்கள். சங்கத்தின் வர்ணமோ சுலபமாகத்தான் இருக்கிறது

இல்லையா. அவருடைய சங்கத்திலேயே இருங்கள், வர்ணம் தானாகவே பூசப்பட்டு விடும். கஷ்டப்படுவதற்கா அவசியமே இல்லை. அவருடைய சங்கத்தில் இருக்கத் தெரியுமா? அல்லது வெளிநாட்டினருக்கு தனியாக இருப்பது. தனிமையை அனுபவம் செய்வது விரைவில் வந்து விடுகிறதா? நான் என்னை தனிமையாக இருப்பதாக அனுபவம் செய்கிறேன் என்று சில நேரம் புகார் வருகிறது இல்லையா? ஏன் தனியாக இருக்கின்றீர்கள்? ஏன் தனிமையை அனுபவம் செய்கின்றீர்கள்? பழக்க தோஷம். அதனால் தான் பிராமண ஆத்மாக்கள் ஒரு வினாடி கூட தனிமையாக இருக்க முடியாது. இருக்க முடியுமா? (இல்லை) இருக்க கூடாது ஆனால் அப்படி ஆகி விடுகிறார்கள். பாப்தாதா அவரே உங்களை அவருடைய துணைவர்களாக ஆக்கியிருக்ககிறார் பின்பு தனிமையாக எப்படி நீங்கள் ஆக முடியும்? தந்தையை துணைவனாகவோ ஆக்கியிருக்கிறோம் ஆனல் எப்பொழுதும் அவருடைய துணை இருப்பதில்லை என்று அனேகக் குழந்தைகள் கூறுகிறார்கள். ஏன்? துணைவலனாக ஆக்கி இருக்கிறீர்கள் இதுவோ சரிதான். உங்களுடைய துணைவன் யார் என்று அனைவரிடமும் கேட்டால் அனைவரும் பாபாதான் என்று கூறுவர்கள் இல்லையா?

எப்பொழுது துணைவனாக ஆக்குவதில் கூட காரியம் நடக்கவில்லையோ, சில நேரம் தனிமையாக ஆகி விடுகிறீர்கள் என்று பாப்தாதா பார்க்கிறார். இப்பொழுது வேறு என்ன வழியை கடைபிடிப்பது? துணைவனாக ஆக்கியிருக்கின்றீர்கள் ஆனால் இணைந்திருப்பவர்களாக ஆகவில்லை. இணைந்த சொரூபம் பிரிய முடியாது. துணைவனிடமிருந்து எப்பொழுதாவது ஒரு ஊடல் கூட ஏற்பட்டு விடும். அதனால் தனிமையாக ஆகி விடுகின்றீர்கள். சில நேரம் அந்த மாதிரியான விஷயம் ஏற்பட்டு விடுகிறது இல்லையா, அதனால் தந்தையிடமிருந்து தனியாக ஆகி விடுகின்றீர்கள். அப்படி துணைவனாக ஆக்கியிருக்கின்றீர்கள் ஆனால் துணைவனை இணைந்த ரூபத்தில் அனுபவம் செய்யுங்கள். பிரியவே முடியாது. என்னை இந்த இணைந்த ரூபத்தில் இருந்து பிரிப்பதற்கு யாருக்கும் சக்தி இல்லை. அந்த மாதிரி அனுபவத்தை அடிக்கடி நினைவில் கொண்டு வந்து கொண்டு வந்து நினைவு சொரூபமாக ஆகி.விடுங்கள். எனவே இணைந்த ரூபத்தில் இருக்கின்றேனா, ஒதுங்கி விடவில்லையே,

தந்தையை ஒதுக்கி விடவில்லையே என்று அடிக்கடி சோதனை செய்யுங்கள். எவ்வளவு இணைந்த ரூபத்தின் அனுபவத்தை அதிகரிப்பீர்களோ அவ்வளவு பிராமண வாழ்க்கை மிக மிகப் பிரியமானதாக, சுவாரஸ்யமான வாழ்க்கையாக அனுபவம் ஆகும். அந்த மாதிரியான ஹோலி கொண்டாடுவதற்காக வந்திருக்கிறீர்கள் இல்லையா? அல்லது வர்ணம் பூசுவதின் ஹோலி கொண்டாடி விட்டு ஹோலி ஆகி விட்டது என்று கூறுவீர்களா? தந்தையின் சங்கத்தின் வர்ணத்தின் ஹோலி மூலமாக ஹோலியஸ்ட் (holiest புனிதமானவராக) மற்றும் ஹையஸ்ட் (highest உயர்ந்தவராக) சுலபமாக ஆகி விடுகிறீர்கள் என்று எப்பொழுதும் நினைவு வைத்துக் கொள்ளுங்கள். கஷ்டமானதில்லை சுலபமானது. பரமாத்மாவின் சங்கம் ஒருபோதும் கஷ்டத்தை அனுபவம் செய்விப்பதில்லை. பாப்தாதாவிற்கும் குழந்தைகளின் கஷ்டம் மற்றும் கடின அனுபவம் செய்வது பிடிப்பதில்லை. மாஸ்டர் சர்வ சக்திவாள் மற்றும் சர்வ சக்திவானின் இணைந்த ரூபம் மேலும் எப்படி கஷ்டம் இருக்க முடியும். அவசியம் ஏதாவது ஒரு அலட்சியம் அல்லது சோம்பேறித்தனம் அல்லது பழைய கடந்த வாழ்க்கையின் சம்ஸ்காரம் வெளிப்படுகிறது. அப்போது தான் கஷ்டம் அனுபவம் ஆகிறது. எப்பொழுது உயிரோடு இருந்தே இறந்தவர்கள் ஆகி விட்டீர்கள் என்றால் பழைய சம்ஸ்காரத்தின் மரணமும் ஏற்பட்டு விட்டது. பழைய சம்ஸ்காரம் வெளிப்பட முடியாது. எனவே இது பழைய ஜென்மத்தினுடையது. பிராமண ஜென்மத்தினுடையது இல்லை என்பதை முற்றிலும் மறந்து விடுங்கள். எப்பொழுது பழைய ஜென்மம் முடிந்து விட்டதோ, புது ஜென்மம் எடுத்து விட்டீர்கள் என்றால் புது ஜென்மம், புது சம்ஸ்காரம்.

ஒருவேளை மாயா பழைய சம்ஸ்காரத்தை வெளிப்படுத்த செய்கிறது என்றால் கூட, ஒருவேளை யாராவது மற்றவர்களின் பொருளை உங்களிடம் வந்து கொடுக்கிறார்கள் என்றால் நீங்கள் என்ன செய்வீர்கள்? வைத்து கொள்வீர்களா? ஏற்றுக் கொள்வீர்களா? இது என்னுடைய பொருள் இல்லை. மேலும் மற்றவர்களின் பொருளை நான் எப்படி வாங்குவது என்று யோசிப்பீர்கள் தான் இல்லையா. ஒருவேளை மாயா பழைய ஜென்மத்தின் சம்ஸ்காரத்தை வெளிப்படுத்தும் ரூபத்தில் வந்தால் கூட உங்களுடைய பொருளோ வரவில்லை, எனவே இது என்னுடைய பொருள் இல்லை, இது மற்றவரின் பொருள் என்று

யோசியுங்கள். மற்றவரின் பொருளை எண்ணத்தில் கூட தன்னுடையது என்று ஏற்றுக் கொள்வீர்களா? ஏற்றுக்கொள்வீர்களா? மற்றவர்களின் பொருள் அவசியம் ஏமாற்றத்தைக் கொடுக்கும் துக்கத்தைக் கொடுக்கும் என்று யோசியுங்கள். யோசித்து அந்த வினாடியே மற்றவரின் பொருளை விட்டு விடுங்கள். எரிந்து விடுங்கள். அதாவது புத்தியிலிருந்து விலக்கி விடுங்கள். மற்றவரின் பொருளை உங்களுடைய புத்தியில் வைத்துக் கொள்ளாதீர்கள். இல்லையென்றால் மிகுந்த தொந்தரவு ஏற்படும். பிராமண வாழ்க்கையில் தந்தை என்னென்ன கொடுத்திருக்கிறார். பிராமண வாழ்க்கையின் அதாவது என்னுடைய இயற்கையான சுபாவம், சம்ஸ்காரம், உள்உணர்வு, பார்வை நினைவு என்ன என்று எப்பொழுதுமே யோசியுங்கள். இது என்னுடையது இது மற்றவர்களுடையது. மற்றவர்களுடைய பொருள் பிடித்தமானதாக இருக்கிறதா? அல்லது தன்னுடைய பொருள் மிக நன்றாக பிடித்திருக்கிறதா? இது இராவணனின் பொருள் மேலும் இது தந்தையின் பொருள். இதில் எது உங்களுக்கு நன்றாக பிடித்திருக்கிறது? ஒருபொழுதும் தவறாக கூட எண்ணத்தில் கூட "என்ன செய்வது, என்னுடைய சுபாவமே அப்படித்தான், என்னுடைய சம்ஸ்காரமே அப்படித்தான்" என்று கொண்டு வராதீர்கள். என்ன செய்வது இந்த சம்ஸ்காரத்தை நீக்குவது கடினமாக இருக்கிறது என்று நினைக்காதீர்கள். உங்களுடையது இல்லவே இல்லை. என்னுடையது என்று ஏன் கூறுகிறீர்கள். என்னுடையதே இல்லை. இராவணனுடைய பொருளை என்னுடையது என்று கூறுகிறீர்கள். என்னுடையதாக ஆக்குகிறீர்கள் தான் இல்லையா? அப்பொழுது தான் அந்த சம்ஸ்காரங்கள் கூட இவர் என்னை தன்னுடையவராகவோ ஆக்கி விட்டார், நன்றாக உபசரியுங்கள் என்று நினைக்கிறது. தன்னுடைய இயற்கையான சம்ஸ்காரம், என்றால் இப்பொழுது இயல்பான சுபாவத்தை வெளிப்படுத்தினீர்கள் என்றால் அவைகள் தானாகவே உள்ளடங்கிப் போய் விடும். புரிந்ததா என்ன செய்ய வேண்டும் என்று?

அப்படி அந்த மாதிரி ஹோலி கொண்டாடுவதற்கு வந்திருக்கிறீர்கள் தான் இல்லையா. அவர்கள் ஹோலி என்று ஒரு நாள் கூறுவார்கள். இரண்டாவது நாள் ஹோலி முடிந்து விட்டது என்று கூறுவார்கள் ஆனால் நீங்கள் என்ன சொல்வீர்கள்? நாங்கள் எப்பொழுதுமே தந்தையின் சங்கத்தின் வர்ணத்தின் ஹோலி கொண்டாடிக்

கொண்டிருக்கிறோம் மேலும் ஹோலி (தூய்மை) ஆகி விட்டோம் என்று கூறுவீர்கள். ஹோலி கொண்டாடி கொண்டாடி ஹோலி ஆகி விட்டீர்கள். ஹோலி கொண்டாடி விட்டீர்களா? அல்லது கொண்டாட வேண்டுமா? எப்பொழுதிலிருந்து பிராமணனாக ஆனீர்களோ அப்பொழுதிலிருந்தே ஹோலி கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். ஏனென்றால் சங்கம யுக நேரமே எப்பொழுதும் பண்டிகைக்கான நேரம் ஆகும். உலகத்தினரோ அதிகப்படியாக செலவு செய்து மகிழ்ச்சியை கொண்டாடுகிறார்கள் ஆனால் நீங்கள் எப்பொழுதுமே ஒவ்வொரு வினாடியும் மகிழ்ச்சியைக் கொண்டாடுபவர்கள். ஒவ்வொரு வினாடியும் ஆடிக் கொண்டும் பாடிக் கொண்டும் இருக்கிறீர்கள். எப்பொழுதும் குஷியில் ஆடுகிறீர்கள் அல்லது எப்பொழுது கல்சரல் புரோகிராம் இருக்கிறதோ அப்பொழுது தான் ஆடுகிறீர்களா? எப்பொழுதுமே ஆடிக் கொண்டேயிருக்கிறீர்கள் தான் இல்லையா! எப்பொழுதும் தந்தையின் மஹிமை மற்றும் உங்களுடைய பிராப்திகளின் பாடலைப் பாடிக் கொண்டே இருங்கள். அனைவருக்கும் பாடத் தெரியும் இல்லையா. அனைவரும் பாட முடியுமா? அனைவரும் ஆட முடியுமா? எப்பொழுதும் ஆடுவதும் பாடுவதும் கடினமா என்ன? சகஜமானது. மேலும் எப்பொழுதும் சகஜமாக அனுபவம் செய்து சம்பன்னமானவர்களாக ஆகவேத்தான் வேண்டும். தெரியவில்லை நான் சம்பன்னம் ஆவேனா? அல்லது இல்லையா? என்று ஒருபொழுதும் நினைக்காதீர்கள். இந்த பலஹீனமான எண்ணத்தை ஒருபொழுதும் வர விடாதீர்கள். அனேக தடவை நான் தான் ஆகியிருக்கிறேன். மேலும் நான் தான் ஆக வேண்டும் என்று இதை நினையுங்கள் நல்லது.

நாலாபுறமும் உள்ள எப்பொழுதும் பரமாத்வின் சங்கத்தின் வர்ணத்தில் ஹோலி கொண்டாடக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, சிருஷ்டி சக்கரத்தினுள் எப்பொழுதும் உயர்ந்த பங்கை ஏற்று செய்யக்கூடிய உயர்ந்த ஆத்மாக்களுக்கு, அனைத்து ஆத்மாக்களை விட உயர்ந்த புனிதமான ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் இணைந்திருக்கக்கூடிய பல கோடி மடங்கு பாக்கியவான் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் அனைவரின் கஷ்டத்தையும் சகஜமாக ஆக்கக்கூடிய பிராமண ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் புதிய ஜென்மத்தின் புதிய சுபாவம் சம்ஸ்காரம் புதிய ஊக்கம் உற்சாகத்தில் இருக்கக்கூடிய புறக்கும்

## 1993 அவ்யக்த முரளி

கலையின் அனுபவி ஆதமாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்.

வரதானம்: புத்தி என்ற விமானம் மூலமாக ஒரு நொடியில் மூன்று உலகங்களையும் சுற்றி வரக்கூடிய சகஜயோகி ஆகுக!

பாப்தாதா குழந்தைகளை எண்ணம் என்ற சுவிட்சை ஆன் செய்யுங்கள் மேலும் வதனத்தை வந்தடைந்து சூரியனின் கிரணங்களை எடுத்துக் கொள்ளுங்கள், சந்திரனின் நிலவொளியை எடுத்துக் கொள்ளுங்கள், பிக்னிக்கும் செய்யுங்கள் மற்றும் விளையாடவும் செய்யுங்கள் என்று குழந்தைகளுக்கு அழைப்பு விடுக்கிறார். இதற்காக புத்தி என்ற விமானத்தில் டபுள் ரிபைன் செய்யப்பட்ட பெட்ரோலின் அவசியம் இருக்கிறது. டபுள் ரிபைன் என்றால் ஒன்று நிராகார நிச்சயத்தின் போதை அதாவது நான் ஆத்மா தந்தையின் குழந்தை, இரண்டாவது சாகார ரூபத்தில் அனைத்து உறவுகளின் போதை. இந்த போதை மற்றும் குஷி சகஜ யோகியாகவும் ஆக்கி விடுகிறது மேலும் மூன்று உலகத்தினை சுற்றவும் செய்து விடுகிறது.

சுலோகன்: உயர்ந்த காரியத்தின் ஞானம் தான் உயர்ந்த பாக்கியத்தின் கோடு போடுவதற்கான எழுதுகோல் ஆகும்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 26.03.1993 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# அவ்யக்த வருடத்தில் லட்சியம் மற்றும் லட்சணத்தை சமமாக ஆக்குங்கள்!

இன்று நிராகார மற்றும் ஆகார பாப்தாதா அனைத்து உயர்ந்த பிராமண ஆத்மாக்களை ஆகார ரூபத்திலும் மற்றும் சாகார ரூபத்திலும் பார்த்துக் கொண்டிருக்கிறார். சாகார ரூபமுடைய நீங்கள் அனைத்து ஆதமாக்களும் தந்தையின் எதிரில் இருக்கிறீர்கள் மேலும் ஆகார ரூப குழந்தைகளும் எதிரில் இருக்கிறார்கள். இருவரையும் பாப்தாதா பார்த்து மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார். அனைவரின் உள்ளத்தில் நாம் அனைவரும் தந்தைக்குச் சமமாக சாகாரத்திலிருந்து ஆகாரியாகவும் மேலும் ஆகாரத்திலிருந்து நிராகார நிலைக்கும் தந்தைக்குச் சமமாக ஆகுவோம் என்ற ஒரே ஒரு எண்ணம் மற்றும் ஊக்கம் இருக்கிறது. பாப்தாதா அனைவரின் இந்த லட்சியம் மற்றும் லட்சணத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். என்ன தென்பட்டது?

பெரும்பான்மையோரின் லட்சியம் மிக நன்றாக உறுதியாக இருக்கிறது ஆனால் லட்சணம் சில நேரம் உறுதியாக இருக்கிறது, சில நேரம் சாதாரணமாக இருக்கிறது. லட்சியம் மற்றும் லட்சணத்தில் சமநிலை வருவது இது தான் சமமாக ஆவதின் அடையாளம் ஆகும். லட்சியத்தை தாரணை செய்வதில் 99-சதவிகிதம் கூட சிலர் இருக்கிறார்கள். மற்றவர்கள் வரிசைக்சிரமமாக இருக்கிறார்கள். ஆனால் சதா, தலபமாக மற்றும் இயற்கையான இயல்பில் லட்சணத்தை தாரணை செய்வதில் எதுவரை இருக்கிறார்கள் -இதில் சிறுபான்மையினர். 90-சதவிகிதம் வரை இருக்கிறார்கள். மீதமுள்ளவர்கள் வரிசைக்கிரமமாக இருக்கிறார்கள். அப்படி லட்சியம் மற்றும் லட்சணத்திலும் மேலும் லட்சணத்தை இயற்கையானதாகவும் இயல்பானதாகவும் ஆக்குவதிலும் வித்தியாசம் ஏன் இருக்கிறது? சமயத்திற்குத் தகுந்தாற்போல், சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல், பிரச்சனைகளுக்குத் தகுந்தாற்போல் அனேக குழந்தைகள் முயற்சி மூலமாக தன்னுடைய

லட்சியம் மற்றும் லட்சணத்தைச் சமமாகவும் ஆக்குகிறார்கள் ஆனால் இது இயற்கையான இயல்பாக ஆகி விடட்டும். அதில் இன்னும் கவனம் தேவையாக இருக்கிறது. இந்த வருடத்தை அவ்யக்த பரிஸ்தா நிலையில் நிலைத்திருப்பதற்காகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். இதைப் பார்த்து பாப்தாதா குழந்தைகளின் அன்பு மற்றும் முயற்சி இரண்டையும் பார்த்துப் பார்த்து குஷி அடைகிறார். ஆஹா குழந்தைகளே ஆஹா இந்த பாடலையும் பாடுகிறார். கூடவே இப்பொழுது இன்னும் அதிகமான குழந்தைகளின் லட்சியம் மற்றும் லட்சணத்தில் சமநிலையைப் பார்க்க விரும்புகிறார். நீங்கள் அனைவரும் கூட இதைத் தான் விரும்புகிறீர்கள் இல்லையா? தந்தையும் விரும்புகிறார். நீங்களும் விரும்புகிறீர்கள் பின்பு இடையில் வேறென்ன பாக்கி இருக்கிறது? அதையும் நன்றாகத் தெரிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள் கலந்துரையாடல் ஒர்க்ஷாப் (workshop) கூட செய்கிறீர்கள் தான் இல்லையா?

பாப்தாதா லட்சியம் மற்றும் லட்சணத்தில் வித்தியாசம் இருப்பதற்காக முக்கியமான ஒரே ஒரு காரணத்தைப் பார்த்தார். ஆகார பரிஸ்தாவாக இருந்தாலும் சரி, நிரந்தர நிராகார நிலையில் இருந்தாலும் சரி இயற்கையான இயல்பாகி விடட்டும். இதற்கான மூல ஆதாரம் அஹங்காரமற்றவராக ஆவது. ஆஹங்காரம் அனேக விதமாக இருக்கிறது. மிக முக்கியமாகச் சொல்வதானால் ஒரே ஒரு வார்த்தையில் தேக அபிமானம் எனலாம் ஆனால் தேக அபிமானத்தின் விஸ்தாரம் அதிகமாக இருக்கிறது, ஒன்று சாதாரணமாகச் சொல்லும் தேக அபிமானம், இது சில குழந்தைகளில் இல்லாமலும் இருக்கிறது, தன்னுடைய உடலாக இருந்தாலும் சரி, மற்றவர்களுடைய உடலாக இருந்தாலும் சரி, ஒருவேளை மற்றவர்களின் உடலிலும் கவர்ச்சி இருக்கிறது என்றாலும் அதுவும் கூட தேக அபிமானம் தான். அனேகக் குழந்தைகள் இந்த சாதாரண ரூபத்தில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். சாதாரண ரூபத்தில் உடல் மேல் ஈடுபாடு மற்றும் அபிமானம் இல்லை ஆனால் இதன் கூடவே உடலின் சம்மந்தத்தில் தன்னுடைய சம்ஸ்காரம் விசேஷமாக இருக்கிறது, புத்தி விசேஷமாக இருக்கிறது, குணம் விஷேமாக இருக்கிறது, சில கலைகள் விசேஷமாக இருக்கின்றன, சில சக்தி விசேஷமாக இருக்கிறது -இவைகள் அனைத்தின் அபிமானம் அதாவது அகங்காரம் போதை இவைகள்

சூட்சும தேக அபிமானம், ஒருவேளை இந்த குட்சும அபிமானங்களிலிருந்து ஏதாவது ஒரு அபிமானம் இருக்கிறது என்றால் ஆகார பரிஷ்தா இயற்கையாக ஆக முடியாது. மேலும் நிராகாரியாகவும் ஆக முடியாது ஏனென்றால் ஆகார பரிஷ்தாவிலும் கூட தேக ஈர்ப்பு இல்லை, டபுள் லைட்டாக இருக்கிறார்கள். தேக அஹங்காரம் நிராகாரியாக ஆக விடுவதில்லை. அனைவரும் இந்த வருடம் நன்றாக கவனம் வைத்திருந்தீர்கள், ஊக்கம் உற்சாகமும் இருக்கிறது, விருப்பமும் மிக நல்லதாக இருக்கிறது ஆனால் வரக்கூடிய நாட்களில் இன்னும் கவனம் வேண்டும். சோதனை செய்யுங்கள் -எந்த விதமான அபிமானம் மற்றும் அஹங்காரம் இயற்கையான சொரூபத்திலிருந்து முயற்சி செய்வதின் சொரூபத்திலோ ஆக்கி விடவில்லையே? ஏதாவதொரு சூட்சும அபிமானம் அம்சம் அளவில் கூட இருந்து விடவில்லையே? இது நேரத்திற்கு தகுந்தாற்போல் மற்றும் சேவைக்குத் தகுந்தாற்போல் எமர்ஜ் ஆகி விடுகிறதா? ஏனென்றால் அம்சம் மாத்திரம் தான் அந்த நேரத்தில் ஏமாற்றம் கொடுக்கக்கூடியது. எனவே, இந்த வருடத்தில் என்ன லட்சியம் வைத்திருக்கிறீர்களோ அந்த லட்சியம் சம்பன்னம் ஆகியே தான் தீர வேண்டும் என்று பாப்தாதாவும் விரும்புகிறார்?

பொதுவாக காரியங்கள் செய்து கொண்டிருக்கும்போது ஏதாவது விசேஷ ஸ்தூல ரூபத்தில் அந்த நாள் அந்த நேரம் ஏதாவதொரு தவறும் செய்வதில்லை ஆனால் சில நேரங்களில் இன்று இப்பொழுது என்னவென்றே தெரியவில்லை எப்படி குஷி இருக்க வேண்டுமோ அப்படி இல்லை. தனிமை மற்றும் நம்பிக்கையின்மை மற்றும் வீணான சங்கல்பங்களின் புயல் திடீரென்று ஏன் வருகிறது என்று தெரியவில்லை என்று அனுபவம் செய்கிறீர்கள் இல்லையா? அமிர்தவேளையும் யோகா செய்தோம். முரளி வகுப்பும் கேட்டோம். என்ன காரணமாக இருக்கும்? சேவையும், வேலையும் செய்தோம் ஆனால் இது ஏன் நடந்து கொண்டிருக்கிறது? என்று அனுபலம் செய்கிறீர்கள் தானே! மேலோட்டமாகவோ சோதனை செய்கிறீர்கள். மேலும் அதில் எந்தவொரு தவறும் செய்யவில்லை என்று நினைக்கிறீர்கள் ஆனால் சூட்சும அபிமானத்தின் சொரூபத்தின் அம்சம் சூட்சுமத்தில் வெளிப்படுகிறது. எனவே எந்தவொரு வேலையிலும் மனம் ஈடுபடுவதில்லை. வைராக்கியம், சோர்வு அனுபவம் ஆகிறது

அல்லது ஏதாவது ஒரு ஏகாந்தமான தனிமையான இடத்திற்கு சென்று விடலாம் என்று நினைக்கிறீர்கள் அல்லது தூங்கி விடலாம். ஓய்வு எடுக்கலாம் அல்லது குடும்பத்திலிருந்தும் கொஞ்ச நேரத்திற்காக விலகியிருக்கலாம் என்றும் நினைக்கிறீர்கள். இந்த அனைத்து நிலைகளின் காரணம் ஒரு எழுத்தின் அதிசயம் தான். கமால் (அதிசயம்) என்று சொல்லாமல் தமால் (குழப்பம்) என்று தான் சொல்லலாம். அப்படி சம்பூர்ண நிர்அகங்காரி ஆவது என்றால் ஆகாரி மற்றும் நிராகாரியாக சுலபமாக ஆவதாகும். எப்படி சில நேரங்களில் எப்பொழுதும் ஒரே நடவடிக்கைகளில் தான் இருக்க வேண்டுமா, இது மாறாதா என்று உங்கள் மனம் கூறுகிறதல்லவ? விரும்பாவிட்டாலும் இந்த நிலை வந்து விடுகிறது.

எப்பொழுது நிர்அஹங்காரி ஆகி விடுகிறீர்கள் என்றால் ஆகாரி மற்றும் நிராகரி ஸ்திதியிலிருந்து கீழே வருவதற்கு மனமே வராது. அதிலேயே அன்பில் ஐக்கியமான நிலையை அனுபவம் செய்வீர்கள் ஏனென்றால் உங்களுடைய உண்மையான அனாதி நிலையோ நிராகாரி தான் இல்லையா. நிராகார ஆத்மா இந்த உடலில் பிரவேசம் செய்திருக்கிறது. உடல் ஆத்மாவில் பிரவேசம் செய்யவில்லை. ஆத்மா உடலில் பிரவேசம் ஆகியிருக்கிறது. அப்படி அனாதி உண்மையான சொரூபமோ நிராகாரி தான் இல்லையா அல்லது உடலா? உடலை ஆதாரமாக எடுத்திருத்தோம் ஆனால் எடுத்தது யார்? நீங்கள் ஆத்மாக்கள், நிராகாரமானவர் சாகார உடலை ஆதாரமாக எடுத்திருக்கிறீர்கள், அப்படியானால் உண்மை என்ன? ஆத்மாவா அல்லது உடலா? ஆத்மா. இது உறுதியாகத் தான் இருக்கிறது இல்லையா? அப்படி உண்மையான நிலையில் நிலைத்திருப்பது சுலபமா? அல்லது ஆதாரம் எடுக்கும் நிலை சுலபமா?

அகங்காரம் வருவதற்கான வாசல் ஒரு வார்த்தை அது என்ன? நான்! எப்பொழுதெல்லாம் நான் என்ற வார்த்தை வருகிறது என்றால் உண்மையான சொரூபத்தினை எதிரில் கொண்டு வாருங்கள். நான் யார்? இந்த பயிற்சியை செய்யுங்கள் நான் ஆத்மாவா அல்லது இன்னார், இன்னாரா? நான் என்ற வார்த்தை தான் மேலே கொண்டு செல்வது. நான் என்ற வார்த்தை தான் கீழே கொண்டு வருவது என்று மற்றவர்களுக்கு ஞானம் கொடுக்கிறீர்கள் தானே. நான் என்று சொன்னவுடன்

உண்மையான நிராகார சொரூபம் நினைவில் வந்து விடட்டும். மேலும் இது இயற்கையானதாக ஆகி விடுகிறது என்றால் இந்த முதல் பாடம் சுலபம் தான் இல்லையா. அப்படியானால் இதை சோதனை செய்புங்கள். நான் என்று நினைத்தால் நிராகார சொரூபம் நினைவில் வந்து விடட்டும் இந்த பழக்கத்தை ஏற்படுத்துங்கள். எத்தனை தடவைகள் நான் என்ற வார்த்தையைக் கூறுகிறீர்கள். நான் இதைச் சொன்னேன், இதைச் செய்வேன், நான் இதை நினைக்கிறேன் அனேக தடவைகள் நான் என்ற வார்த்தையை உபயோகிக்கிறீர்கள். அப்படி எப்பொழுதெல்லாம் நான் என்ற வார்த்தையை உபயோகிக்கிறீர்களோ அப்போது உடனே என்னுடைய நிராகார உண்மையான சொரூபத்தை எதிரில் கொண்டு வாருங்கள். இது தான் நிராகார மற்றும் ஆகார நிலை ஆவதற்கான சுலபமான விதி ஆகும். இது கடினமா அல்லது சுலபமா? பின்போ லட்சியமும் லட்சணமும் சமமாக ஆகியே தான் இருக்கிறது. நிராகாரி ஆவதற்கான சுலபமான இந்த வழியை உபயோகித்துப் பாருங்கள். இந்த தேகப் பற்றுதலின் நான் என்ற வார்த்தை இல்லாமல் ஆகி விடட்டும். ஏனென்றால் நான் என்ற வார்த்தை தான் தேக அஹங்காரத்தில் கொண்டு வருகிறது மேலும் ஒருவேளை நான் நிராகார ஆத்மா சொரூபமானவன் -இந்த நிலையைக் கொண்டு வந்தீர்கள் என்றால் இந்த நான் என்ற வார்த்தையே தேகப் பற்றுதலிலிருந்து விலக்கிச் செல்லக் கூடியதாகும். சரி தான் இல்லையா? முழு நாளிலிலும் 25- முதல் 35-தடவைகள் அவசியம் கூறுவீர்கள். சொல்லவில்லை என்றாலும் நினைக்கவாவது செய்வீர்கள் –நான் இதைச் செய்வேன், எனக்கு இதைச் செய்ய வேண்டும். திட்டம் போடுகிறீர்கள் என்றாலும் கூட நினைக்கிறீர்கள் தான் இல்லையா. அப்படி இத்தனை தடவைக்கான பயிற்சி ஆத்ம சொரூபத்தின் நினைவு என்னவாக்கி விடும்? நிராகார நிலை, நிராகாரியாகி, ஆகாரி பரிஷ்தாவாகி காரியம் செய்தோம். மீண்டும் பின்பு நிராகார நிலை. கர்ம சம்மந்தத்தின் சொரூபத்தின் சம்மந்தத்தின் வாருங்கள். சம்மந்தத்தை பந்தனத்தில் கொண்டு வராதீர்கள், தேக அபிமானத்தில் வருவது என்றால் கர்ம பந்தனத்தில் வருவது. தேக சம்பந்தத்தில் வருவது என்றால் கர்ம சம்மந்தத்தில் வருவது இரண்டிற்கும் வித்தியாசம் இருக்கிறது. உடலின் ஆதாரம் எடுப்பது அடுத்து உடலின் வசமாவது, இரண்டிலும் வித்தியாசம் இருக்கிறது. பரிஷ்தா மற்றும் நிராகாரி ஆத்மா உடலின் ஆதாரம் எடுத்து உடலின் பந்தனத்தில் வருவதில்லை.

சம்மந்தம் வைப்பார்கள் ஆனால் பந்தனத்தில் வர மாட்டார்கள். பின்பு பாப்தாதா இந்த வருடமே நிர்அஹங்காரி, ஆகாரி, பரிஷ்தா மற்றும் நிராகாரி நிலையில் லட்சியம் மற்றும் லட்சணத்தில் எவ்வளவு சமமாக ஆனது? என்ற ரிசல்ட்டைப் பார்ப்பார்.

மஹான் தன்மையின் அடையாளம் பணிவு. எவ்வளவு பணிவோ அவ்வளவு அனைவரின் மனதில் மஹான் என்று இயல்பாகவே வந்து விடும். பணிவு இல்லாமல் அனைவருக்கும் மாஸ்டர் சுகம் கொடுக்கும் வள்ளலாக ஆக முடியாது. பணிவு அஹங்காரமற்றவமாக சுலபமாக ஆக்கி விடுகிறது. பணிவின் விதை மஹான் தன்மையின் பலனை இயல்பாகவே பிராப்தி செய்விக்கிறது. பணிவு அனைவரின் இதயத்தின் ஆசீர்வாதங்களைப் பிராப்தி செய்வதற்கான சுலபமான சாதனமாகும். பணிவு அனைவரின் மனதில் பனிவான ஆத்மாவிற்காக எளிதாக அன்பின் ஸ்தானத்தை உருவாக்கி விடுகிறது. பணிவு மஹிமைக்குரியவராக இயல்பாகவே ஆக்கி விடுகிறது. நிர்அஹங்காரி ஆவதின் விசேஷமான அடையாளம் பணிவு ஆகும். உள்உணர்விலும் பணிவு, பார்வையிலும் பணிவு, வார்த்தையிலும் பணிவு, உறவு நெருக்கத்திலும் பணிவு. என்னுடைய உள்உணர்வில் இருக்கவில்லை ஆனால் வார்த்தைகளில் வந்து விட்டது என்று அப்படி இருக்க வேண்டாம். என்ன உள்உணர்வாக இருக்குமோ அது தான் பார்வையிலும் இருக்கும், என்ன பார்வையில் இருக்குமோ அது தான் வார்த்தைகளாக வெளி வரும். என்ன வார்த்தைகளில் வருமோ அவை தான் உறவு, நெருக்கத்தில் செயலில் வரும். அதனால் நான்கிலும் பணிவு தேவையாக இருக்கிறது. மூன்றில் இருக்கிறது. ஒன்றில் இல்லை என்றாலும் கூட அகங்காரம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதைத்தான் பரிஷ்தா என்று கூறுவது. அப்படி பாப்தாதா என்ன விரும்புகிறார் என்று புரிந்து கொண்டீர்களா மேலும் நீங்கள் என்ன விரும்புகிறீர்கள்? விருப்பம் இருவருக்கும் ஒன்றாக இருக்கிறதா? இப்பொழுது செய்வது கூட ஒன்று செய்யுங்கள். நல்லது.

வரக்கூடிய நாட்களுக்காக சேவைக்கான புதுப்புது திட்டங்கள் என்ன உருவாக்கப் போகிறீர்கள்? ஏதாவது செய்திருக்கிறீர்களா அல்லது ஏதாவது செய்வீர்களா? இந்த வருடத்திற்கானாலும் சரி அடுத்த வருடத்திற்கானாலும் சரி. எப்படி மற்ற சேவைகளைப் பற்றி

# 1993 அவ்யக்த முரளி

சொற்பொழிவு நிகழ்த்துவோம், உறவு நெருக்கத்தை அதிகரிப்போம், பெரிய பெரிய நிகழ்ச்சிகளைச் செய்வோம் சின்ன நிகழ்ச்சிகளையும் செய்வோம் என்று இதை நினைக்கத்தான் செய்கிறீர்கள் ஆனால் நிகழ்காலத்தில் நேரத்தின் வேகத்தின் அனுசாரம் இப்பொழுது சேவையில் வேகம் அதிகரிக்க வேண்டியதாக இருக்கிறது. அது எப்படி ஏற்படும்? வாய்மொழி மூலமாக உறவு நெருக்கத்தின் மூலமாகவோ சேவை செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள். மளம் மூலமான சேவையும் செய்கிறீர்கள் ஆனால் இப்பொழுது குறைந்த நேரத்தில் சேவையில் வெற்றி அதிகமாக இருக்க வேண்டும் என்பது தேவையாக இருக்கிறது.

வெற்றி என்றால் ரிசல்ட் அதன் விதி வாய்மொழியின் கூடவே முதலில் தன்னுடைய மனநிலையையும் மேலும் ஸ்தானத்தின் அதிர்வலைகளையும் (வைப்ரேஷன்) சக்திசாலியாக ஆக்குங்கள். எப்படி உங்களுடைய ஜடச்சிலைகள் என்ன சேவை செய்து கொண்டிருக்கின்றன? வைப்ரேஷன் மூலமாக எத்தனை பக்தர்களை மகிழ்ச்சி செய்விக்கின்றன. வெளிநாட்டவர்கள் கோயில்களை பார்த்திருக்கிறார்களா? உங்களுடைய கோயில்கள் தானே அல்லது பாரதவாசிகளின் கோயில் மட்டுமா? உங்களுடைய சிலைகள் சேவை செய்து கொண்டிருக்கின்றன அல்லவா? அப்படி வாய்மொழி மூலமாகச் செய்யுங்கள் ஆனால் இப்பொழுது அந்த மாதிரி திட்டம் போடுங்கள். வாய்மொழியின் கூடவே வைப்ரேனுக்காக அந்த மாதிரியான விதியை உபயோகியுங்கள். வாய்மொழி மற்றும் வைப்ரேஷன் இரட்டை வேலை செய்யட்டும். வைப்ரேஷன் வெகு காலம் இருக்கிறது. வாய்மொழி மூலமாக கேட்டது, சில நேரங்களில் அனேகருக்கு மறந்தும் விடுகிறது ஆனால் வைப்ரேஷனின் முத்திரை அதிக காலம் இருக்கிறது. எப்படி நீங்கள் உங்களுடைய வாழ்க்கையிலும் அனுபவியாக இருக்கிறீர்கள்; யாருடைய தவறான வைப்ரேஷன் ஒருவேளை உங்களுடைய மனதில் அல்லது புத்தியில் இருந்து விட்டது என்றால் அந்த தவறான வைப்ரேஷன் எவ்வளவு காலம் இருக்கிறது. வைப்ரேஷன் உள்ளே அமர்ந்து விடுகிறது இல்லையா ஆனால் வார்த்தைகளை அந்த நேரத்திலேயே மறந்து விடுவீர்கள் ஆனால் வைப்ரேஷன் மனம், புத்தியில் முத்திரை பதித்து விடுகிறது. மேலும் எவ்வளவு காலம் அதே வைப்ரேஷனில் வசமாகி அந்த நபருடன் தொடர்பில் வருகிறீர்கள்?

தலைகீழாக ஆனதாக இருந்தாலும் அல்லது நேர்மறையாக ஆனதாக இருந்தாலும் வைப்ரேஷன் கடினமாகத்தான் விலகுகிறது ஆனால் இந்த ஆன்மீக வைப்ரேஷன்களைப் பரப்புவதற்காக தன்னுடைய மனதில் புத்தியில் வீணான வைப்ரேஷன்கள் இல்லாமல் இருக்கட்டும், அப்பொழுது தான் ஆன்மீக வைப்ரேஷனைப் பரப்ப முடியும். யாரைப் பற்றியும் ஏதாவது வீணான வைப்ரேஷன்கள் தாரணை செய்திருக்கிறீர்கள் என்றால் ஆன்மீக வைப்ரேஷனை பரப்ப முடியாது வீணான வைப்ரேஷன் ஆன்மீக வைப்ரேஷனிற்கு முன்பு ஒரு சுவர் ஆகி விடுகிறது. சூரியன் எவ்வளவுதான் பிரகாசமானதாக இருந்தாலும் ஒருவேளை எதிரில் சுவர் வந்து விட்டது மேகம் வந்து விட்டது என்றால் சூரியனின் பிரகாசத்தை அந்த மாதிரி பிரகாசமானதாக ஆக்க விடுவதில்லை. எது உறுதியான வைப்ரேஷனோ அது தான் சுவர் மேலும் எது லேசான வைப்ரேஷனோ அவை லேசான மேகங்கள் அல்லது கருப்பு மேகங்கள். அவை ஆன்மீக வைப்ரேஷனை ஆத்மாக்கள் வரை சென்றடையச் செய்வதில்லை. எப்படி கடலில் சிலர் வலை போட்டு அனேக பொருட்களை ஒன்றாக சேர்த்து விடுகிறார்கள் அல்லது எங்காவது தன்னுடைய வலையை விரித்து ஒரே நேரத்தில் அனேகர்களை தன்னுடையவர்களாக ஆக்கி விடுகிறார்கள். அப்படி வைப்ரேஷன் ஒரே நேரத்தில் அமைக ஆத்மாக்களைக் கவர முடியும். வைப்ரேஷன் வாயுமண்டலத்தை உருவாக்குகிறது. எனவே வரக்கூடிய காலங்களில் சேவையில் உள்உணர்வு மூலமாக, ஆன்மீக வைப்ரேஷன் மூலமாக சேர்த்தே சேவை செய்யுங்கள். அப்பொழுது தான் சேவை மிக வேகமாக நடக்கும். வைப்ரேஷன் மற்றும் வாயுமண்டலத்தின் கூடவே வாய்மொழியின் சேவை செய்தீர்கள் என்றால் ஒரே நேரத்தில் அனேக ஆத்மாக்களுக்கு நன்மை செய்ய முடியும்.

மற்றபடி நிகழ்ச்சிகளுக்காக ஏற்கனவே தயாரிக்கப்பட்டு தயாராக இருக்கும் மேடையில் அதிகமாக செய்யுங்கள். இதை இன்னும் அதிகரியுங்கள். நெருக்கத்தில் வருபவர்கள் மூலமாக இந்த உதவியை எடுத்து இந்த சேவையில் வளர்ச்சியை பிராப்தி செய்ய முடியும். சகயோகிகளின் யோகத்தை ஏதாவது ஒரு விதியில் அதிகரித்துக் கொண்டே சென்றீர்கள் என்றால் இயல்பாகவே சேவையில் சகயோகி ஆவதால் சகஜயோகி ஆகி விடுவார்கள். அந்த மாதிரி அனேக ஆத்மாக்கள் இருக்கிறார்கள். நேரடியாக சகஜயோகியாக ஆவதில்லை

ஆனால் சகயோகத்தை எடுத்துக் கொண்டே செல்லுங்கள். சகயோகிகளாக ஆக்கிக் கொண்டே செல்லுங்கள். அப்படி சகயோகத்தில் முன்னேறிச் சென்று கொண்டே சகயோகம் அவர்களை யோகியாக்கி விடுகிறது. அப்படி சகயோகி ஆத்மாக்களை இன்னும் மேடையில் கொண்டு வாருங்கள் அவர்களுடைய சகயோகத்தைப் பயனுள்ளதாக ஆக்குங்கள். என்ன செய்ய வேண்டும் என்று புரிந்ததா? ஏதாவது ஒரு ஆத்மா கூட சகயோகி ஆகிறது என்றால் அந்த ஆத்மா நடைமுறையில் சகயோகம் கொடுப்பதன் மூலம் பிராப்தியை எடுப்பதனால் வெளிப்படையான ஆசீர்வாதங்களினால் எளிதாக முன்னேறுகிறது மேலும் அநேகரின் சேவைக்குப் பொறுப்பாளராக ஆகுகிறது.

கூடவே ஒரு வருடத்தில் மாதங்களை நிர்ணயம் செய்யங்கள். சில மாதங்கள் விசேஷமாக சுயத்தின் முயற்சி மற்றும் உலர்ந்த சக்தி தாரணை செய்வதற்கான பயிற்சிக்காக, இதைத் தான் நீங்கள் தபஸ்யா, ரிட்ரீட் அல்லது பட்டி என்று கூறுகிறீர்கள். தேசத்திற்கு ஏற்றபடி இரண்டு இரண்டு மாதங்கள் நிர்ணயம் செய்யுங்கள். அது சீசன் மாதிரி இருக்கட்டும். இரண்டு மாதங்கள் தபஸ்யாவிற்காக, இரண்டு மாதங்கள் சின்ன சின்ன சேவைகளுக்காக, இரண்டு மாதங்கள் பெரிய ரூபமான சேவைகளுக்காக, அந்த மாதிரி நிர்னயம் செய்யுங்கள். 12-மாதங்களும் சேவையில் அந்தளவு நீங்கள் உங்களை பிஸியாக்கிக் கொண்டு, தன்னுடைய முன்னேற்றத்திற்காக நேரம் குறைவாக கிடைக்கிறது என்று அப்படி இருக்க வேண்டாம். எப்படி தேசத்தின் சீசனாக இருக்கிறதோ அநேக நேரங்களில் வெளியில் சென்று விசேஷமான சேவை செய்ய முடியாமல் இருக்கிறது. அந்த நேரம் தன்னுடைய முன்னேற்றத்திற்காக விசேஷ ரூபத்தில் வைத்துக் கொள்ளுங்கள். முழு வருடமும் சேவை செய்யாதீர்கள் மேலும் முழு வருடமும் தபஸ்யா மட்டும் செய்யுங்கள் -இதுவும் நடக்க முடியாது. எனவே இரண்டையும் சேர்த்தே லட்சியத்தை வைத்துக் கொண்டு தம் தம் இடங்களுக்கு (தேசங்களுக்கு) ஏற்றபடி நிர்ணயம் செய்புங்கள். அதில் சேவை மற்றும் சுயத்தின் முன்னேற்றம் சேர்ந்தே நடக்கட்டும். நல்லது.

எப்பொழுதும் தன்னை அடிக்கடி உண்மையான சொரூபம் நான் நிராகாரமானவன் -அந்த மாதிரி நிச்சயம் மற்றும் போதையில் பறக்கக்கூடிய, எப்பொழுதும் பணிவுத்தன்மை மூலமாக

மஹான்தன்மையின் பிராப்தியின் அனுபவி ஆத்மாக்களுக்கு, அந்த மாதிரி பணிவு, எப்பொழுதும் மஹான் மற்றும் எப்பொழுதும் ஆகாரி மற்றும் நிராகாரி நிலையை இயற்கையான இயல்பாக ஆக்கக்கூடிய அனைத்து உயர்ந்த ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் மிக மிக மிக அதிகமான அன்பு நினைவுகளும், நமஸ்காரமும்,

**வரதானம்: ஊக்கம் உற்சாகம் மூலமாக தடைகளை இல்லாமல் செய்யக்கூடிய தந்தைக்குச் சமமான நெருக்கமான இரத்தினங்கள் ஆகுக!**

நான் தந்தைக்குச் சமமாக நெருக்கமான இரத்தினமாகி உண்மையான குழந்தையின் எடுத்துக்காட்டைக் கொடுப்பேன் என்ற ஊக்கம் உற்சாகம் குழந்தைகளின் உள்ளத்தில் இருக்கிறது. இந்த ஊக்கம் உற்சாகம் பறக்கும் கலைக்கான ஆதாரம் ஆகும். இந்த ஊக்கம் அனேக விதமாக வரக்கூடிய தடைகளை நீக்கி சம்பன்னமாவதில் சகயோகம் கொடுக்கிறது. இந்த ஊக்கம் உற்சாகத்தின் சுத்தமான மற்றும் உறுதியான எண்ணம் வெற்றியாக்குவதில் விசேஷமாக சக்திசாலியான ஆயுதமாகி விடுகிறது. எனவே உள்ளத்தில் எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்தினை மற்றும் இந்த பறக்கும் கலையின் சாதனத்தை நிரந்தரமாக உங்களிடம் வைத்துக் கொள்ளுங்கள்.

**சுலோகன்: எப்படி தபஸ்வி எப்பொழுதும் ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார்கள். அதே போல் நீங்கள் ஒரே ஒருவரின் ரசனை என்ற நிலையின் ஆசனத்தில் அமர்ந்திருங்கள்!**

✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷✷

# 23.04.1993 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நிச்சயபுத்தி பவ! அமர பவ!

வெள்ளி விழாவில் வந்திருந்த பழைய சகோதர-சகோதரிகளுடைய சிநேகம் நிறைந்த அழைப்பின் பேரில் அன்பான பாப்தாதா குழந்தைகளுடைய கூட்டத்தில் எழுந்தருளி, அப்படியே இனிமையான திருஷ்டி கொடுத்தவாறே கூறினார்: இன்று பாப்தாதா எல்லா மிக சிநேகி, ஆதியிலிருந்து யக்ஞத்தின் ஸ்தாபனையில் சகயோகி, அநேக விதமாக வந்துள்ள விதவிதமான பிரச்சனைகளின் பேப்பரில் நிச்சயபுத்தி வெற்றியாளராகி கடக்கக்கூடிய ஆதி சிநேகி, சகயோகி, ஆடாத அசையாத ஆத்மாக்களுடன் சந்திப்பைக் கொண்டாட வந்துள்ளார். நிச்சயத்தின் பாடத்தில் தேர்ச்சி அடைந்து செல்லக்கூடிய குழந்தைகளிடம் வந்துள்ளார். இந்த நிச்சயம், இந்த பழைய வாழ்க்கையாகட்டும், அடுத்த ஜென்மமாகட்டும், சதா வெற்றியின் அனுபவத்தைச் செய்து கொண்டே இருக்கும். நிச்சயத்தினுடைய, அமர பவ என்பதனுடைய வரதானம் சதா கூடவே இருக்கட்டும். விசேஷமாக இன்று யாரெல்லாம் நீண்ட காலத்து அனுபவி வயதான ஆத்மாக்களோ, அவர்களுடைய நினைவு மற்றும் சிநேகத்தினுடைய பந்தனத்தில் கட்டப்பட்டுத் தந்தை வந்துள்ளார். நிச்சயமான வாழ்த்துக்கள்!

ஒரு பக்கம் யக்ஞும், அதாவது பாண்டவர்களுடைய கோட்டையில் யாரெல்லாம் ஆதார-ஆத்மாக்களோ அவர்கள் எல்லோரும் முன்னால் உள்ளனர் மற்றும் மறு பக்கம் நீங்கள் அனுபவி ஆதி ஆத்மாக்கள் இந்த பாண்டவர்களுடைய கோட்டையினுடைய மதில் சுவரின் முதல் செங்கற்கள் நீங்கள். அஸ்திவாரமும் முன்னால் உள்ளது மற்றும் ஆதி செங்கற்கள், எவருடைய ஆதாரத்தினால் இந்த கோட்டை உறுதியாகி, உலகத்தினுடைய குடைநிழலாகி உள்ளதோ, அவர்களும் முன்னால் உள்ளனர். எனவே ஜீ ஹஜூர், ஹாஜர் (ஆம் ஐயா, வந்துவிட்டேன்) என்று கூறி குழந்தைகளின் அன்பை தந்தை உங்களுக்குக் காட்டியது போலவே, சதா பாப்தாதா மற்றும் நிமித்த ஆத்மாக்களுடைய ஸ்ரீமத்

மற்றும் வழிகாட்டுதல்களை 'ஜீ ஹாஜர்' என்றவாறே செல்ல வேண்டும். எப்போதும் வீணான மனவழி மேலும் பிறர்வழியைக் கலக்கக்கூடாது. ஸ்ரீமத்படி பறந்து கொண்டே செல்லுங்கள். புரிந்ததா? நல்லது. (இம்முறை சுமார் அரை மணி நேரமே இருந்தார்; அன்பான அவ்யக்த பாப்தாதா கை அசைத்தவாறே அனைத்து குழந்தைகளுக்கும் பிரியாவிடை அளித்தார்).

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 18.11.1993 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சங்கம யுகத்தின் ராஜகுழந்தைகள், எதிர்காலத்தில் ராஜ்ய அதிகாரிகள்!

இன்று எல்லாக் குழந்தைகளுடைய திலாராம் தந்தை நாலா புறமும் உள்ள தனது எல்லா ராஜகுழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் திலாராம் உடைய அன்பிற்குத் தகுதியானவர்கள். இந்த தெய்வீக அன்பு, பரமாத்ம அன்பு கோடியிலும் சில பாக்கியமான ஆத்மாக்களுக்குத்தான் பிராப்தி ஆகிறது. அநேக ஜென்மங்கள் ஆத்மாக்கள் அல்லது மகான் ஆத்மாக்கள் மூலம் அன்பை அனுபவம் செய்தீர்கள். இப்போது இந்த ஒரு அலௌகீக ஜென்மத்தில் பரமாத்ம அன்பை அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். இந்த தெய்வீக அன்பு மூலம் ராஜ குழந்தைகளாகி விட்டீர்கள். ஆதலால் திலாராம் தந்தைக்கும் என்னுடைய ஒவ்வொரு குழந்தையும் ராஜா குழந்தைகள் என்ற அலௌகீக பெருமை உள்ளது. ராஜா தானே? பிரஜைகள் இல்லை? எல்லோரும் உங்களது பட்டத்தை (title) என்னவென்று கூறுகிறீர்கள்? ராஜயோகி! அனைவருமே ராஜயோகிகளா அல்லது சில பிரஜாயோகிகளும் உள்ளனரா? அனைவருமே ராஜயோகிகள் என்றால் பிரஜைகள் எங்கிருந்து வருவார்கள்? யார் மீது ராஜ்யம் செய்வீர்கள்? பிரஜைகளும் வேண்டுமல்லவா? எனில் அந்த பிரஜாயோகிகள் எப்போது வருவார்கள்? ராஜ குழந்தைகள் என்றால் இப்போதும் ராஜாக்கள் மற்றும் எதிர்காலத்திலும் ராஜாக்கள். இரட்டை ராஜ்யம்! எதிர்காலத்திற்கான ராஜ்யம் மட்டுமில்லை. எதிர்காலத்திற்கு முன்பே இப்போது சுய ராஜ்ய அதிகாரி ஆகி விட்டீர்களா. தனது சுய ராஜ்யத்தினுடைய ராஜ்ய பணிகளை சோதனை செய்கிறீர்களா? எப்படி எதிர்கால ராஜ்யத்தை மகிமை மகிமை செய்கிறீர்கள் -ஒரு ராஜ்யம், ஒரு தர்மம், சுகம் சாந்தி செல்வம் நிறைந்த ராஜ்யம், ஹே சுயராஜ்ய அதிகாரி ராஜாக்களே, அப்படி சுய ராஜ்யத்தினுடைய ராஜ்ய பணிகளில் இந்த எல்லா விஷயங்களும் சதா உள்ளனவா?

ஒரு ராஜ்யம் இருக்கிறதா அதாவது சதா ஆத்மா என்னுடைய ராஜ்யம் இந்த எல்லா ராஜ்ய பணிகளும் கர்ம இந்திரியங்கள் மீது உள்ளதா அல்லது இடையிடையில் சுய ராஜ்யத்திற்குப் பதிலாக பர-ராஜ்யம் தனது அதிகாரம் செய்யவில்லைதானே? பர-ராஜ்யம் என்றால் மாயாவின் ராஜ்யம்! பர-ராஜ்யத்தின் அடையாளம் -அடிமைத்தனம் அதிகமாகி விடுவது! சுய ராஜ்யத்தின் அடையாளம் -சதா சிரேஷ்ட அதிகாரியாக அனுபவம் செய்வது! பர-ராஜ்யம், பிறருக்கு அடிமையாக அல்லது பிறர் வசமாக ஆக்கி விடும். எப்போது ஒரு வேற்றுநாட்டு அரசர் ஒரு ராஜ்யத்தின் மீது வெற்றி அடைகிறார் என்றால் அந்த தோற்ற ராஜாவை கைதி ஆக்கி விடுவார், அதாவது அவருக்கு அடிமையாக ஆக்கி விடுவார். அதே போல இடையிடையே மாயாவின் ராஜ்ய அதிகாரி, சுயராஜ்ய அதிகாரி ராஜாக்கள் உங்களை அல்லது உங்களுடைய ஏதாவது கர்ம இந்திரியங்கள் ரூப ராஜ பணியாட்களை பிறர் வசம் ஆக்குவதில்லைதானே? எனில் ஒரு ராஜ்யமா அல்லது இரண்டு ராஜ்யமா? சுய ராஜ்ய அதிகாரியினுடைய சட்டம் மற்றும் ஒழுங்கு (law&order) பின்பற்றப்படுகிறதா? அல்லது இடையிடையே மாயாவின் உத்தரவும் பின்பற்றப்படுகிறதா?

கூடவே ஒரு தர்மம், தர்மம் என்றால் தாரணை! எனில் சுயராஜ்யத்தின் தர்மம் அல்லது தாரணை எது? பவித்ரதா! மனம், சொல், செயல், சம்பந்தம், தொடர்பு எல்லா விதத்திலும் தூய்மை, இதற்குத்தான் சொல்லப்படுகிறது ஒரு தர்மம், அதாவது ஒரு தாரணை. கனவிலும்கூட, எண்ணத்திலும் கூட அபவித்ரதா அதாவது வேறொரு தர்மம் இருக்கக்கூடாது. ஏனெனில் எங்கு தூய்மை உள்ளதோ அங்கு அபவித்ரதா, அதாவது வீணானதின் அல்லது தவறானதின் பெயர் அடையாளம் இருக்காது. இத்தகைய சக்திசாலியான சக்ரவர்த்தி ஆகி விட்டீர்களா? அல்லது மந்தமான ராஜாவா? அல்லது சில சமயம் மந்தமாக, சில சமயம் ராஜாவாக? எத்தகைய ராஜாக்கள் நீங்கள்? ஒருவேளை இப்போது சிறிய ஒரு ஜென்மத்தினுடைய ராஜ்யம் செய்ய முடியவில்லை என்றால் 21-ஜென்மத்தினுடைய ராஜ்ய அதிகாரம் எப்படி பிராப்தி ஆகும்? சம்ஸ்காரத்தை இப்போது நிரப்பிக் கொண்டிருக்கிறீர்கள். இப்போதைய சிரேஷ்ட சம்ஸ்காரம் மூலம்

எதிர்கால உலகம் உருவாகும் என்றால் இப்போதிருந்தே ஒரு ராஜ்யம், ஒரு தர்மத்தின் சம்ஸ்காரம் எதிர்கால உலகினுடைய ஆதாரம் ஆகும். எனில் சோதனை செய்யுங்கள் -சுகம், சாந்தி, செல்வம் அதாவது சதா எல்லைக்குட்பட்ட பிராப்திகளின் ஆதாரத்தில் சுகம் இருக்கிறதா அல்லது ஆத்மீக அதீந்திரிய சுகம் பரமாத்ம சுகமயமான ராஜ்யத்திலா? சாதனம் அல்லது புகழ்ச்சியின் ஆதாரத்தில் சுகத்தின் அனுபவம் ஆகிறதா அல்லது பரமாத்ம ஆதாரத்தில் அதீந்திரிய சுகமயமான ராஜ்யத்திலா?

இதைப் போலவே சீர்குலையாத அமைதி -எவ்விதமான அசாந்தியினுடைய சூழ்நிலை சீர்குலையாத அமைதியைச் சீர்குலையச் செய்வதில்லையே? அசாந்தியின் புயல், சிறியதோ பெரியதோ ஆனால் சுய ராஜ்ய அதிகாரிக்காக, புயல் அனுபவி ஆக்குவதற்காக பறக்கும் கலையினுடைய பரிசாக ஆகி விடட்டும், 'லி்ப்ட்'ன் 'கி்ப்ட்' ஆகி விடட்டும். இதற்குத்தான் கூறப்படுகிறது -சீர்குலையாத சாந்தி என! எனில் சோதனை செய்யுங்கள் -சீர்குலையாத சாந்திமயமான சுய ராஜ்யம் இருக்கிறதா?

அதே போல செல்வம் என்றால் சுயராஜ்யத்தினுடைய செல்வம் ஞானம், குணம் மற்றும் சக்திகள்! இந்த எல்லா செல்வங்களிலும் சம்பன்ன சுயராஜ்ய அதிகாரிகளாக இருக்கிறீர்களா? சம்பன்னதாவின் அடையாளம் -சன்பன்னதா என்றால் சதா சந்துஷ்டதா (திருப்தி), அபிராப்தியின் பெயர் அடையாளம் கூட இல்லை. எல்லைக்குட்பட்ட ஆசைகளினுடைய அறியாமை -இதற்கு கூறப்படுகிறது செல்வந்தர் என! மற்றும் ராஜா என்றால் வள்ளல்! ஒருவேளை எல்லைக்குட்பட்ட இச்சை அல்லது பிராப்தி உற்பத்தியானது எனில் அவர் ராஜாவிற்குப் பதிலாக யாசிப்பவராக ஆகி விடுவார். ஆதலால் தனது சுய ராஜ்ய அதிகாரத்தை நல்ல விதமாக சோதனை செய்யுங்கள் -எனது சுய ராஜ்யம், ஒரு ராஜ்யம், ஒரு தர்மம், சுகம், சாந்தியுடன் முழுமையாக உள்ளதா? என. ஒருவேளை ராஜா ஆகிக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் எப்போது ராஜ்ய அதிகாரி ஸ்திதி இல்லையோ, அந்த நேரம் என்ன ஆகும்? பிரஜை ஆகி விடுவீர்கள் அல்லது ராஜாவும் இல்லை, பிரஜையும் இல்லை. இடையிலா? இப்போது இடையில் இருந்து விடாதீர்கள். இறுதியில் ஆகி விடுவோம் என்று இப்படிகூட

நினைக்கக்கூடாது. ஒருவேளை நீண்ட காலத்திற்கு ராஜ பாக்கியம் அடைய வேண்டுமானால் நீண்ட காலத்தினுடைய சுயராஜ்யத்தின் பலன்தான் நீண்ட காலத்தின் ராஜ்யம். முழு நேரத்திற்கான ராஜ்ய அதிகாரத்திற்கான ஆதாரம் தற்சமயம் சதா காலத்தின் சுயராஜ்யம். புரிந்ததா? ஒருபோதும் அலட்சியம் ஆகி விடக்கூடாது. ஆகி விடும், ஆகிவிடும், அல்ல, செய்து கொண்டே இருக்க வேண்டும். பாப்தாதாவை மிகுந்த இனிமையான விஷயங்களால் மகிழ்விக்கிறீர்கள். ராஜாவிற்குப் பதிலாக மிகப் பெரிய வக்கீல் ஆகி விடுகிறீர்கள். இப்படி இப்படி சட்டக் கருத்துகளைக் கூறுகிறீர்கள், அதைக் கேட்டு தந்தையும் சிரித்துக் கொண்டே இருக்கின்றார். வக்கீல் நல்லதா அல்லது ராஜா நல்லதா? மிகுந்த சாமர்த்தியத்துடன் வாதாடுகின்றனர். ஆதலால் இப்போது வாதாடுவதை விட்டு விடுங்கள், ராஜாக் குழந்தைகள் ஆகுங்கள். தந்தைக்குக் குழந்தைகள் மீது அன்பு உள்ளது ஆதலால் கேட்டும், பார்த்தும்கூட சிரித்துக் கொண்டே இருக்கின்றார். இப்போது தர்மராஜ் மூலம் எந்த வேலையும் செய்விப்பதில்லை.

சிநேகம் அனைவரையும் நடத்திக் கொண்டிருக்கின்றது. சிநேகத்தின் காரணமாகத்தானே வந்தடைந்துள்ளீர்கள்; என்றால் சிநேகத்தினுடைய பதிலாக பாப்தாதாவும் கோடி மடங்கு சிநேகத்தினுடைய பிரதிபலனைத் தருகின்றார். உள்நாடு வெளிநாட்டிலிருக்கும் எல்லாக் குழந்தைகளும் சிநேகத்தின் விமானம் மூலம் மதுபன் வந்தடைந்து விட்டீர்கள். பாப்தாதா சாகார ரூபத்தில் உங்கள் அனைவரையும் மற்றும் சிநேகத்தின் சொரூபத்தில் எல்லாக் குழந்தைகளையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார். நல்லது!

எல்லா சிநேகத்தில் மூழ்கியிருக்கும் அருகிலிருக்கும் குழந்தைகளுக்கு, எல்லா சுய ராஜ்ய அதிகாரி மற்றும் விஷ்வ ராஜ்ய அதிகாரி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சர்வ பிராப்திகளும் சம்பன்ன சிரேஷ்ட செல்வந்த விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா ஒரு தர்மம், ஒரு ராஜ்யம் சம்பன்ன சுய ராஜ்ய அதிகாரி தந்தைக்குச் சமமான பாக்யசாலி குழந்தைகளுக்கு பாக்கியவிதாதா பாப்தாதாவின் அன்பு, நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

**தாதிகளுடன்:** எல்லாக் காரியங்களும் நன்றாக நடந்து கொண்டிருக்கிறதா? நல்ல ஊக்கம் உற்சாகத்துடன் காரியங்கள் நடந்து

கொண்டிருக்கின்றன. செய்விப்பவர் செய்து கொண்டிருக்கின்றார் மற்றும் நிமித்தமாகி செய்பவர் செய்து கொண்டிருக்கின்றார். இந்த மாதிரி அனுபவம் ஆகிறதல்லவா? எல்லோருடைய சகயோகத்தின் மூலம் எல்லாக் காரியங்களும் சகஜமாக மற்றும் பயனுள்ளதாகிறது. எப்படி நடந்து கொண்டிருக்கிறது -இது மாயாஜாலமாகத் தெரிகிறதா. உலகத்தினர் பார்ப்பது, சிந்திப்பதோடு இருந்து விடுகின்றனர். மற்றும் நிமித்த ஆத்மாக்கள் நீங்கள் சதா முன்னேறிக் கொண்டே செல்வீர்கள் ஏனென்றால் கவலையற்ற சக்ரவர்த்திகள். உலகத்தினருக்கு ஒவ்வொரு அடியிலும் கவலை உள்ளது மற்றும் உங்கள் அனைவருக்கும் ஒவ்வொரு சங்கல்பத்திலும் பரமாத்ம சிந்தனை உள்ளது ஆதலால் கவலையற்றவர்கள். கவலையற்றவர்களா? அவிநாசி சம்பந்தம் நன்றாக இருக்கிறது. நல்லது, எல்லாம் நன்றாக நடந்து கொண்டிருக்கிறது மற்றும் நடக்கத்தான் வேண்டும். நிச்சயம் உள்ளது மற்றும் கவலையும் இல்லை. என்ன ஆகும், எப்படி ஆகும் -இந்தக் கவலை இல்லை. டீச்சர்களுக்கு ஏதாவது கவலை இருக்கிறதா? சென்டர்களை எப்படி அதிகமாக்குவது -இந்தக் கவலை உள்ளதா? சேவையை எப்படி அதிகமாக்குவது -இந்தக் கவலை உள்ளதா? இல்லை? கவலையற்றவர்களா? சிந்தனை செய்வது வேறு விஷயம், கவலை கொள்வது வேறு விஷயம். சேவை அதிகமாக்குவதற்கான சிந்தனை அதாவது திட்டம் நன்றாக செய்யுங்கள் ஆனால் கவலையினால் ஒருபோதும் வெற்றி கிடைக்காது. நடத்துபவர் நடத்திக் கொண்டிருக்கின்றார், செய்விப்பவர் செய்வித்துக் கொண்டிருக்கின்றார், ஆதலால் எல்லாமே எளிதாக நடந்தே ஆக வேண்டும், நிமித்தம் மட்டுமாகி சங்கல்பம், உடல், மனம், செல்வத்தைப் பயனுள்ளதாக்குங்கள். எந்த நேரத்தில் எந்த காரியம் நடக்கிறதோ அந்தக் காரியம் நமது காரியம். எப்போது நமது காரியமாகி விட்டதோ, எனது காரியம் என்றால் அங்கு என்னுடையது என்பதோ வந்து விடுகிறது, அங்கு எல்லாமே தானாகவே நடந்து விடுகிறது. எனில் இப்போது பிராமண பரிவாரத்தின் விசேஷ காரியம் எது? டீச்சர்கள் கூறுங்கள். பிராமண பரிவாரத்தின் விசேஷ காரியம் எது அதனால் பலன் அடைவோம்? (ஞானசரோவரில்) ஏரியில் அனைத்தையும் ஸ்வாஹா செய்து விடலாமா? பரிவாரத்தில் விசேஷ காரியங்கள் எது நடந்தாலும் அனைவருடைய கவனமும் எங்கு செல்கிறது? அந்த விசேஷ காரியத்தின் பக்கம் கவனம் இருக்கும். பிராமண பரிவாரத்தில்

பெரியதிலும் பெரிய காரியம் தற்சமயம் இதுதானே. ஒவ்வொரு நேரத்திற்கும் தனித்துவம் உண்டு; தற்சமயம் உள்நாடு-வெளிநாட்டில் உள்ள எல்லா பிராமண பரிவாரத்தினுடைய சகயோகம் இந்த விசேஷ காரியத்தில்தானே உள்ளது அல்லது அவரவர் சென்டர்களில் உள்ளதா? எந்தளவு காரியம் பெரியதோ அந்தளவு பெரிய மனசு தேவை! மற்றும் எந்தளவு பெரிய மனதோ அந்தளவு தானாகவே முழுமை பெற்று விடும். ஒருவேளை சிறிய மனதாக இருந்தால் என்ன வர வேண்டுமோ அதுவும் தடைபட்டு விடும், என்ன நடக்க வேண்டுமோ அதுவும் கூட தடைபட்டு விடும். மற்றும் பெரிய மனதால் அசம்பவமும் சம்பவமாகி விடும். மதுபனுடைய ஞானசரோவரா அல்லது உங்களுடையதா? யாருடையது? மதுபனுடையதுதானே? குஜராத்தினுடையதல்ல, மதுபனுடையதா? மகாராஷ்டிராவுடையதா? வெளிநாட்டினுடையதா? எல்லோருடையதும்! எல்லையற்ற சேவையினுடைய எல்லையற்ற இடம், அநேக ஆத்மாக்களுக்கு எல்லையற்ற ஆஸ்தி அளிக்கக் கூடிய இடம். சரிதானா. நல்லது. மனம், சொல், செயல், சம்பந்தம், தொடர்பு எல்லா விதத் தூய்மையைத்தான் -ஒரு தர்மம் அதாவது ஒரு தாரணை என சொல்லப்படுகிறது. எங்கு தூய்மை உள்ளதோ அங்கு தூய்மையற்றதின் அதாவது வீணானதின் அல்லது தீமையின் பெயர் அடையாளம் கூட இருக்காது.

குழுக்களுடன் தனிப்பட்ட சந்திப்பு (சாரம்):

**குரூப்-1:** சுய மாற்றத்தின் அதிர்வலைகளே உலக மாற்றத்தைச் செய்யும்! எல்லாவற்றையும் விட மிகப் பெரிய பொக்கிஷம் குஷி! ஏனெனில் ஏதாவது பிராப்தி ஆகும் போது குஷி ஏற்படுகிறது. ஒருவேளை அபிராப்தி ஆகியது எனில் குஷியாயிருக்க முயற்சி செய்தாலும் குஷியாய் இருக்க முடியாது.

பகவானுடைய குழந்தைகள் எனில், எங்கு பகவான் இருக்கிறாரோ அங்கு அபிராப்தி ஆக முடியுமா? இத்தகைய சிரேஷ்ட சமயம், சிரேஷ்ட சம்பந்தம், சிரேஷ்ட பிராப்திகள் முழு கல்பமும் ஒருபோதும் கிடைக்காது. எனவே முதலில் சுய மாற்றம் செய்யுங்கள், இந்த சுய மாற்றத்தின் அதிர்வலைகளே உலக மாற்றத்தையும் செய்யும்!

இப்போது முயற்சியில் வேகம், சேவையிலும் வேகம் மற்றும் குறிக்கோளில் சம்பூர்ணம் அடைவதிலும் வேகம் அவசியம்.

சதா தூய்மையினுடைய சவாலின் கொடியை அசைத்துக் கொண்டே இருங்கள்! நல்லது.

குரூப்-2: தினமும் அமிர்தவேளையில் இணைந்த சொரூபத்தினுடைய நினைவின் திலகம் இட்டுக் கொள்ளுங்கள்! எப்போது தனியாகி விடுகிறீர்களோ அப்போது பலவீனமடைந்து விடுகிறீர்கள் மற்றும் பலவீனமடைந்தவருக்கு எளிதான விஷயம்கூட கஷ்டமாக இருக்கும். எனவே இணைந்தே இருங்கள். யார் மீது அன்பு உள்ளதோ, அவரிடமிருந்து பிரிந்து இருக்க முடியாது. நல்லது.

குரூப்-3: நேரம் விலைமதிப்பற்றது -நேரத்தை சேமிப்பதுதான் தீவிர புருஷார்த்தம்! தற்சமயத்தின் பெருமிதம் எதிர்காலத்தை பிரத்யக்ஷமாக்கிக் கொண்டிருக்கிறது. சங்கம யுகத்தின் ஒரு நொடி மற்றும் யுகங்களுடைய ஒரு வருஷத்தை விடவும் அதிகமானது. சதா இது நினைவிலிருந்தால் ஒவ்வொரு நொடியும் பரமாத்ம ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டே இருப்பீர்கள். யாருடைய பை பரமாத்ம ஆசீர்வாதங்களால் நிரம்பி உள்ளதோ அவருக்கு அருகில் ஒருபோதும் மாயா வர முடியாது.

தீவிர புருஷார்த்தி என்றால் மாயாஜீத்! மாயாவிடம் யுத்தம் செய்து கொண்டே இருந்தால் சந்திர வம்சி ஆவீர்கள். வெற்றியின் அதிகாரம் சதா பிரத்யக்ஷ ரூபத்தில் இருக்கட்டும். நல்லது.

குரூப்-4: மனசா சேவைக்காக தனது ஸ்திதியை சக்திசாலி ஆக்குங்கள், நிரந்தர சேவாதாரி ஆகுங்கள்! பரமாத்ம அன்பை எந்த ஒரு சக்தியாலும் தகர்க்க முடியாது. பிராமணன் ஆவது என்றாலே சதா சேவையின் மேடையிலேயே இருப்பதாகும். சேவாதாரி என்றால் ஒவ்வொரு நேரமும் தனது சிரேஷ்ட பார்வை மூலம், உள்ளுணர்வு மூலம், செயல் மூலம் சேவை செய்பவர். பிராமண ஆத்மாவால் சேவையின்றி இருக்க முடியாது. அனைத்திலும் சக்திசாலியான மற்றும் மிகப் பெரிய சேவை மனஸா சேவை ஆகும்.

சங்கம யுகமே திருப்தியின் யுகம் ஆகும். சேவாதாரி சதா நம்பரில் முன்பாக இருப்பார். நான் நிரந்தர சேவாதாரி, சேவையின் மேடையில் இருக்கிறேன் என்ற இந்த நினைவின் மூலம் சதா கவனமாக இருங்கள். நல்லது.

**குரூப்-5: மாஸ்டர் சர்வ சக்திவானாகி தேவையான நேரத்தில் ஒவ்வொரு சக்தியையும் காரியத்தில் ஈடுபடுத்துங்கள்!** மாஸ்டர் என்றால் ஒவ்வொரு சக்தியையும் எந்த நேரத்தில் அழைக்கிறீர்களோ அந்த சக்தி நடைமுறை சொரூபத்தில் அனுபவம் ஆக வேண்டும். மாஸ்டர் சர்வ சக்திவான் என்றால் எந்த சக்திக்கு கட்டளையிட்டாரோ அது உடனே ஆஜராக வேண்டும். எந்தளவு சக்திகளை உபயோகிக்கிறீர்களோ அத்தளவு அனுபவி ஆகிக் கொண்டே செல்வீர்கள்.

சங்கம யுகம்தான் சதா வெற்றியாளர் ஆக்கக்கூடிய யுகம் என்ற வரதானம் உள்ளது ஆதலால் வரதானி ஆகி வெற்றி அடையுங்கள். நல்லது.

**குரூப்-6: திரிகாலதரிசி ஸ்திதியில் நிலைத்திருந்து முக்காலங்களையும் பார்த்தீர்கள் என்றால் சதா குஷி இருக்கும்!** கல்ப கல்பமாக நாம் தான் இருந்தோம், நாம் தான் இருக்கிறோம், நாம் தான் இருப்போம். முக்காலங்களின் ஞானம் வந்து விட்டதல்லவா! திரிகால தரிசி ஆகி விட்டீர்களா. நல்லது.

✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳✳

# 25.11.1993 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சகஜமாக வெற்றி அடைவதற்காக ஞான சொரூப பிரயோகி ஆத்மா ஆகுங்கள்!

இன்று ஞானவள்ளல் வரதானவள்ளல் தனது ஞானி ஆத்மா, யோகி ஆத்மா குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் ஞான சொரூபம் மற்றும் யோகயுக்த் ஆக எது வரை ஆகியுள்ளனர்? ஞானம் கேட்பது மற்றும் சொல்வதற்கு நிமித்தமாகி இருக்கிறீர்களா அல்லது ஞான சொரூபமாகி இருக்கிறீர்களா? நேரத்திற்கு ஏற்றவாறு யோகத்தில் ஈடுபடுபவரா அல்லது சதா யோகி வாழ்க்கை அதாவது தானாகவே கர்மத்தில் யோகயுக்த், யுக்தியுக்த் அல்லது சதா யோகி ஆகி இருக்கிறீர்களா? எந்த ஒரு பிராமண ஆத்மாவிடம் யாராவது ஞானி மற்றும் யோகியா எனக் கேட்டால் என்ன சொல்வது? எல்லோருமே ஞானி, யோகிகளா? ஞான சொரூபம் ஆவது என்றால் ஒவ்வொரு எண்ணம், சொல் மற்றும் செயல் சக்திசாலியாக உள்ளதா? வீணானது முடிந்து விட்டது, ஏனெனில் எங்கு சக்திசாலியானது உள்ளதோ அங்கு வீணானது இருக்க முடியாது. எப்படி ஒளியும் இருளும் சேர்ந்தே இருக்க முடியாது; எனில் ஞானம் என்பது ஒளி, வீணானவை என்பது காரிருள். தற்சமயம் வீணானவற்றை முடிவு கட்டுவதற்கான கவனம் தேவை. எல்லாவற்றையும் விட முக்கிய விஷயம் சங்கல்ப ரூப விதையை சக்திசாலி ஆக்க வேண்டும். ஒருவேளை சங்கல்ப ரூப விதை சக்திசாலியாக இருந்ததென்றால் சொல், செயல், சம்பந்தமும் சகஜமாக சக்திசாலி ஆகியே விடும். ஆகவே, ஞான சொரூபம் என்றால் ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு சங்கல்பமும், ஒவ்வொரு நொடியும் சக்திசாலியாக இருப்பது!

யோகி ஆத்மாவாக அனைவரும் ஆகி இருக்கிறீர்கள் ஆனால் ஒவ்வொரு சங்கல்பமும் தானாக யோகயுக்த், யுக்தியுக்த் ஆக இருக்க வேண்டும், இதில் நம்பர்வார் உள்ளது. ஏன் நம்பர் வருகிறது? எப்போது வள்ளலும் ஒருவர்தான், விதியும் ஒன்றுதான் எனும்போது நம்பர் ஏன்

வருகிறது? யோகம் செய்வது மற்றும் செய்விப்பது இரண்டிலுமே எல்லோரும் புத்திசாலிகள். யோகம் வரவில்லை எனக் கூறுபவர்கள் யாரும் இல்லைதானே? எப்படி யோகம் செய்ய-செய்விக்க தகுதியானவர்களோ, அது போல பிரயோகம் செய்வது, செய்விப்பதிலும் தகுதியானவர்கள் ஆக வேண்டும் -இதற்கு கூறப்படுகிறது யோகி வாழ்க்கை, அதாவது யோகயுக்த் வாழ்க்கை. இப்போது பிரயோகி வாழ்க்கையின் அவசியம் உள்ளது. யாருக்கு யோகத்தின் விளக்கம் தெரியுமோ, வர்ணனை செய்கிறீர்களோ, அவருக்கு எல்லா விசேஷங்களும் பிரயோகத்தில் வருகிறதா? எல்லாவற்றையும் விட முதலில் தனக்குள் சோதனை செய்யுங்கள், தனது சம்ஸ்கார மாற்றத்தில் எது வரை பிரயோகி ஆகியிருக்கிறீர்கள்? ஏனெனில் உங்கள் அனைவருடைய சிரேஷ்ட சமஸ்காரம்தான் சிரேஷ்ட உலகத்தின் படைப்பின் ஆதாரம் ஆகும். ஒருவேளை ஆதாரம் உறுதியாக இருந்தது எனில் மற்ற எல்லா விஷயங்களும் தானாகவே உறுதியாகத்தான் வேண்டும். ஆகவே சம்ஸ்காரம் தக்க தருணத்தில் ஏமாற்றவில்லைதானே? என பாருங்கள். சிரேஷ்ட சம்ஸ்காரத்தை மாற்றம் செய்யக்கூடிய எவராயினும் சரி, பொருளாயினும் சரி, சூழ்நிலையாயினும் சரி, யோகத்தைப் பிரயோகம் செய்யக்கூடிய ஆத்மாவை சிரேஷ்டத்திலிருந்து சாதாரணத்தில் அசைக்க முடியாது. அப்படியில்லை விஷயமே அப்படியிருந்தது, மனிதரும் அப்படியிருந்தார் அல்லது வாயுமண்டலம் அப்படியிருந்தது, ஆதலால் சிரேஷ்ட சம்ஸ்காரத்தை மாற்றம் செய்து சாதாரண அல்லது வீணானதாக ஆக்கினால், இவரை பிரயோகி ஆத்மா எனக் கூறுவோமா? ஒருவேளை தக்க தருணத்தில் யோகத்தின் சக்திகள் பிரயோகம் ஆகவில்லை எனில் இவரை என்னவென்று சொல்வது? ஆகவே முதலில் இந்த ஆதாரத்தைப் பாருங்கள் எது வரை தக்க தருணத்தில் பிரயோகி ஆகியிருக்கிறேன்? என்பதை. ஒருவேளை தனது சம்ஸ்காரம் மாற்றம் செய்பவராகவில்லை எனில் புதிய உலக மாற்றம் செய்பவராக எப்படி ஆவீர்கள்?

பிரயோகி ஆத்மாவின் முதல் அடையாளம் -சமஸ்காரத்தின் மீது சதா பிரயோகம் செய்வதில் வெற்றியாளர். இரண்டாவது அடையாளம், இயற்கை மூலம் வரப்போகின்ற சூழ்நிலைகளின் மீது யோகத்தின் பிரயோகம் மூலம் வெற்றியாளர். அவ்வப்போது இயற்கையின்

குழப்பமும் யோகி ஆத்மாவைத் தன் பக்கம் ஈர்க்கிறது. அத்தகைய நேரத்தில் யோகத்தின் விதி பிரயோகத்தில் வருகிறதா? எப்போதாவது யோகி ஆத்மாவை அல்லது புருஷோத்தம ஆத்மாவை இயற்கை பிரபாவம் செய்யவில்லைதானே? ஏனெனில் பிராமண ஆத்மாக்கள் புருஷோத்தம ஆத்மாக்கள் ஆவர். இயற்கை புருஷோத்தம ஆத்மாக்களின் தாசி ஆகும். எஜமானன் வேலைக்காரரின் பிரபாவத்தில் வந்தால் என்னவென்று சொல்வோம்? இந்நாளில் புருஷோத்தம ஆத்மாக்களுக்கு இயற்கை சாதனங்களை மற்றும் மீட்பதன் (கரையேற்றுவதன்) ரூபத்தில் பிரபாவம் செய்கிறது. சாதனம் அல்லது மீட்பதன் ஆதாரத்தில் யோகி வாழ்க்கை உள்ளது. சாதனம் அல்லது மீட்பது குறைவாக இருந்தது என்றால் யோகயுக்த்'ம் குறைவாக இருக்கிறது -இதற்கு கூறப்படுகிறது பிரபாவத்தில் வருவது என. யோகி அல்லது பிரயோகி ஆத்மாவுடைய சாதனையின் முன்பு சாதனம் தானாகவே வந்து விடும். சாதனம் சாதனைக்கு ஆதாரம் இல்லை ஆனால் சாதனை சாதனங்களுக்குத் தானாகவே ஆதாரமாகி விடும். இவருக்கு கூறப்படுகிறது -பிரயோகி ஆத்மா! ஆகவே சம்ஸ்கார மாற்றத்தில் வெற்றி மற்றும் இயற்கையின் பிரபாவத்தில் வெற்றி எது வரை அடைந்துள்ளேன்? என சோதனை செய்யுங்கள். மூன்றாவது அடையாளம் -விகாரங்களின் மீது வெற்றி! யோகி அல்லது பிரயோகி ஆத்மாவிற்கு முன்பு இந்த ஐந்து விகாரங்கள், எது மற்றவர்களுக்கு விஷப்பாம்பு ஆனால் யோகி-பிரயோகி ஆத்மா உங்களுக்கு இந்த பாம்புகள் கழுத்து மாலைகள் ஆகி விடுகின்றன. பிராமணர்கள் உங்களுடைய மற்றும் பிரம்மாதந்தையுடைய அசரீரி தபஸ்வி சங்கர் சொரூபத்தின் நினைவுச்சின்னத்தை இப்போதும்கூட பக்த ஜனங்கள் பூஜை செய்கின்றர் மற்றும் பாடிக் கொண்டே இருக்கின்றனர். இரண்டாவது நினைவுச்சின்னம், இந்த பாம்பு உங்களுக்கு அப்படி அடிமையாகி ஆகி விடுகிறது என்றால் நீங்கள் குஷியுடன் ஆடுவதற்கான மேடை ஆகி விடுகிறது. அப்போது வெற்றியடைகிறீர்கள் எனில் என்ன அனுபவம் செய்கிறீர்கள்? ஸ்திதி எப்படி இருக்கிறது? குஷியில் ஆடிக் கொண்டே இருக்கிறீர்களா. ஆகவே இந்த ஸ்திதியை மேடையின் ரூபத்தில் காட்டியுள்ளனர். ஸ்திதியை 'ஸ்டேஜ்' (stage) என்றும் கூறப்படுகிறது. அந்த மாதிரி விகாரங்கள் மீது வெற்றி அடையுங்கள் -இவரைத்தான் பிரயோகி என கூறப்படுகிறது. ஆகவே எது வரை பிரயோகி ஆகியிருக்கிறேன்? என்பதை சோதனை

செய்யுங்கள். ஒருவேளை யோகம் சரியான நேரத்தில் பிரயோகம் ஆகவில்லை, யோகத்தின் விதி மூலம் சரியான நேரத்தில் வெற்றி பெறவில்லை எனில் யதார்த்த விதி எனக் கூறுவோமா? நேரமும் தனது தீவிர வேகத்தை அடிக்கடி காட்டிக் கொண்டே இருக்கிறது. ஒற்றுமையின்மை, அதர்மம், தமோபிரதானம் ஒவ்வொரு இடத்திலும் தீவிர வேகத்தில் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இத்தகைய நேரத்தில் உங்களுடைய யோகத்தின் விதியின் முன்னேற்றம் அல்லது விதியினுடைய வெற்றியில் முன்னேற்றம் தீவிர வேகத்தில் இருப்பது மிக அவசியம் ஆகும். நம்பரில் முன்னேறுவதற்கான ஆதாரம் -பிரயோகி ஆவதற்கான சகஜ விதி! ஆகவே பாப்தாதா என்ன பார்த்தார் -தக்க நேரத்தில் பிரயோகம் செய்வதில் தீவிர வேகத்திற்குப் பதில் சாதாரண வேகம் இருக்கிறது. இப்போது இதை அதிகரியுங்கள். இதனால் என்ன ஆகும் என்றால் வெற்றி சொரூபத்தை அனுபவம் செய்து கொண்டே செல்வீர்கள். உங்களுடைய ஜட சித்திரங்கள் மூலம் வெற்றி பிராப்தி செய்வதற்கான அனுபவம் செய்து கொண்டே இருக்கிறீர்கள். சைதன்யத்தில் வெற்றி சொரூபம் ஆகுங்கள் அப்போது இந்த நினைவுச்சின்னமும் தொடரும். ரித்திஸித்திக்காரர்கள் அல்ல, விதி மூலம் வெற்றி! புரிந்ததா, என்ன செய்ய வேண்டும் என? எல்லாமே உள்ளது ஆனால் தக்க சமயத்தில் பிரயோகம் செய்வது மற்றும் பிரயோகம் வெற்றி பெறுவது, இவருக்கு கூறப்படுகிறது ஞான சொரூப ஆத்மா! அத்தகைய ஞான சொரூப ஆத்மாக்கள் மிக்க அருகாமையில் மற்றும் மிக்க பிரியமானவர்கள். நல்லது.

சதா யோகத்தின் விதி மூலம் சிரேஷ்ட வெற்றியின் அனுபவம் செய்யக்கூடிய, சதா சாதாரண சம்ஸ்காரத்தை சிரேஷ்ட சம்ஸ்காரத்தில் மாற்றம் செய்யக்கூடிய சமஸ்கார மாற்றம் செய்விக்கும் ஆத்மாக்களுக்கு, சதா இயற்கையை வென்ற, விகாரங்கள் மீது வெற்றி அடையக்கூடிய வெற்றி ஆத்மாக்களுக்கு, சதா பிரயோகத்தின் வேகத்தை தீவிர அனுபவம் செய்யக்கூடிய ஞான சொரூப, யோகயுக்த் யோகி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு, நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

24.11.1993 அன்று இரு குமாரிகளின் சமர்ப்பண விழா நடந்த பின், இரவு 10-மணிக்கு தாதி ஆல்ரவுண்டர் தனது பழைய சரீரத்தைத் துறந்து,

பாப்தாதாவின் மடியைச் சென்றடைந்தார். 25'ம் தேதி மதியம் அவருடைய இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. மாலை முரளி வகுப்பிற்குப் பின் தாதிகளுடன் சந்தித்துக் கொண்டிருக்கும்போது பாப்தாதா கூறியதாவது:

விளையாட்டில் விதவிதமான விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். சாக்ஷியாகி விளையாட்டைப் பார்ப்பதால் குஷி ஏற்படுகிறது. ஏதாவது உற்சவமாகட்டும், யாராவது சரீரத்தை விடட்டும் -இரண்டிலுமே என்ன தெரிகிறது? விளையாட்டில் ஒரு விளையாட்டு இருப்பதாகத் தெரிகிறது. மற்றும் இப்படித்தான் விளையாட்டு நடக்கிறது என்பதும் தெரிகிறது மற்றும் நேரப்படி முடிந்தும் விடுகிறது. அப்படியே எது நடந்ததோ அது சகஜமாக முடிந்தது என்றால் விளையாட்டாகத்தான் தெரியும். ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அதற்கென பாகம் உள்ளது. எல்லா ஆத்மாக்களுடைய சுப பாவனை, அநேக ஆத்மாக்களுடைய சுப பாவனை பிராப்தி ஆவது -இதுவும் ஒவ்வொரு ஆத்மாவுடைய பாக்கியத்தின் வெற்றி ஆகும். என்ன நடந்ததோ, என்ன பார்த்தீர்கள்? விளையாட்டைப் பார்த்தீர்களா அல்லது மரணத்தைப் பார்த்தீர்களா? ஒருபக்கம் அலௌகீக சுயம்வரத்தைப் பார்த்தீர்கள் மற்றும் மறுபக்கம் சரீரம் மாற்றும் விளையாட்டைப் பார்த்தீர்கள் ஆனால் இரண்டும் எப்படி இருந்தது? விளையாட்டில் விளையாட்டு! வித்தியாசம் உள்ளதா என்ன? ஸ்திதியில் வித்தியாசம் தெரிந்ததா? அலௌகீக சுயம்வரத்தைப் பார்ப்பதில் மற்றும் சரீரம் மாற்றுவதை பார்ப்பதில் வித்தியாசம் தெரிந்ததா? கொஞ்சம் ஏற்றஇறக்கம் ஆனதா, இல்லையா? சாக்ஷியாகி விளையாட்டைப் பார்த்தால் அதுவோ தனது விதி. சகஜமாக நஷ்டோமோஹா ஆவது என்பது நீண்ட கால யோகத்தினுடைய விதியின் வெற்றியாகும். எனில் நஷ்டோமோஹா, சகஜமாக மரணத்தின் விளையாட்டைப் பார்த்தீர்கள். இந்த விளையாட்டில் எந்த ரகசியத்தைப் பார்த்தீர்கள்? தேகத்தின் நினைவிலிருந்தும் கூட விலகியிருப்பது! வியாதி மூலமாகவோ, விதி மூலமாகவோ -வேறு எவ்வித ஈர்ப்பும் இறுதி நேரத்தில் கவரக்கூடாது! இதற்குத்தான் கூறப்படுகிறது சகஜமாக ஆடையை மாற்றுவது என. எனில் என்ன செய்ய வேண்டும்? நஷ்டோமோஹா! சென்டருடைய நினைவும் வரக் கூடாது. (டீச்சர்களைப் பார்த்து) அப்படியில்லை யாராவது ஞானத்தைத் தெரிந்து கொள்ளும் ஆவல் உடையவரின் ஞாபகம் வரட்டும், சென்டருடைய எந்த பொருளும் ஞாபகம் வரட்டும்,

சில ஒதுக்கப்பட்ட விஷயங்கள் ஞாபகம் வரட்டும்... என்பது. எல்லோரிடமும் விடுபட்டவராக மற்றும் தந்தையுடைய அன்பானவராக ஆக வேண்டும். ஆரம்பத்திலிருந்தே கரைகளிலிருந்து விடுபட்டிருக்க வேண்டும். எந்த ஒன்றையும் ஆதாரமாக ஆக்கக்கூடாது. இலக்கைத் தவிர வேறு எதன் மீதும் ஈர்ப்பு இருக்கக்கூடாது. நல்லது.

**நிர்மல்சாந்தா தாதியுடன்:** குழு நன்றாக இருக்கிறதா? குழுவினுடைய விசேஷமே அழகுதான்! எல்லோருடைய பார்வையும் எவ்வளவு அன்பாக உங்கள் அனைவர் பக்கமும் செல்கிறது. எதுவரை எவ்வளவு சேவை உள்ளதோ அந்தளவு சேவை சரீரத்தின் மூலம்தான் நடைபெற வேண்டும். எப்படியாவது சரீரத்தை நடத்திக் கொண்டே இருப்பீர்கள். சரீரத்தை நடத்துவதற்கான வழி வந்து விட்டதல்லவா. நல்லது, நடந்து கொண்டிருக்கிறது ஏனெனில் தந்தையின் மற்றும் அனைவருடைய ஆசீர்வாதமும் உள்ளது. குஷியாக இருப்பது மற்றும் குஷியைப் பரப்புவது, வேறு வேலை என்ன உள்ளது. எல்லோரும் பார்த்து பார்த்து எவ்வளவு குஷி அடைகின்றனர் எனில் குஷியைப் பரப்பிக் கொண்டிருக்கிறீர்களா. சாப்பிடவும் செய்கிறீர்கள், பரப்பிக் கொண்டுமிருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் தரிசனத்திற்குரிய மூர்த்திகள். எல்லோருடைய பார்வையும் நிமித்த ஆத்மாக்கள் பக்கம் செல்கிறது எனில் தரிசனத்திற்குரிய மூர்த்திகள் ஆனீர்களா. நல்லது!

**குழுக்களுடன் தனிப்பட்ட சந்திப்பு: (சாரம்).**

**குரூப்-1: பிராமண வாழ்க்கையின் ஆதாரம் -நினைவு மற்றும் சேவை!**

தக்க சமயத்தில் விதி மூலம் வெற்றி உண்டாகட்டும்.

ஒருபோதும் தனது சக்திகளை மறந்து விடக் கூடாது, உபயோகப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

**குரூப்-2: அனைவரிடமிருந்தும் மதிப்பை பெற பணிவானவர் ஆகுங்கள்!**

நாம் பணிவானவராக ஆகும்போது மற்றவர்கள் மதிப்பு தருவார்கள்.

சுயஸ்திதி முன்னால் பரஸ்திதி ஒன்றுமே கிடையாது. எப்போதாவது ஏதாவது பெரிய பரஸ்திதி வந்தது எனில் பறக்கும் கலையில் சென்று விடுங்கள், அப்போது பரஸ்திதி பொம்மையாகி விடும்.

மேன்மையின் அடையாளம் -எந்தளவு மகானோ அந்தளவு பணிவு.

**குரூப்-3: மாயாஜீத் ஆவதற்காக மாஸ்டர் சர்வ சக்திவானுடைய நிலையை நினைவில் வையுங்கள்!** உங்களுடைய நிலை மாஸ்டர் சர்வ சக்திவான் எனில் மறந்து போக முடியாது ஆனால் மறந்து விடுகிறீர்கள்; இதற்காக தினமும் அமிர்தவேளையில் இந்த நினைவை எமர்ஜ் செய்வதால் நிரந்தர நினைவாகி விடும்.

**குரூப்-4: தைரியம் மற்றும் ஊக்கம் உற்சாகத்தின் ஆதாரத்தில் பறக்கும் கலையின் அனுபவம் செய்யுங்கள்!** பறக்கும் கலையின் இரண்டு இறக்கைகள் எவை? (ஞானம் மற்றும் யோகம்). ஞானம் மற்றும் யோகத்தின் கூடவே தைரியம் மற்றும் ஊக்கம் உற்சாகம்.
நேரத்தின் மகத்துவத்தை சதா நினைவில் வையுங்கள்.

**குரூப்-5: விசேஷ பார்ட்தாரி என்றால் ஒவ்வொரு அடி, ஒவ்வொரு நொடி சதா கவனம், அலட்சியம் கூடாது!** சூரியவம்சத்தில் வருவதற்காக ஒவ்வொரு சங்கல்பம், ஒவ்வொரு வார்த்தை மூலம் சாதாரணத்தன்மை முடிவு பெறட்டும்.
எப்படி தந்தையை பரம் ஆத்மா என கூறுகிறீர்கள் என்றால் எப்படி தந்தையோ அப்படியே குழந்தைகளும் ஒவ்வொரு விஷயத்திலும் பரம் அதாவது சிரேஷ்டமானவர்கள்.
தீவிர புருஷார்த்தியின் அடையாளம் -இப்பொழுது இல்லையேல் எப்பொழுதும் இல்லை!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 02.12.1993 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# நம்பர்-1 ஆவதற்காக குணமூர்த்தியாகி குணங்களின் தானம் செய்யக்கூடிய மஹாதானி ஆகுங்கள்!

இன்று எல்லையற்ற தாய்-தந்தை நாலா புறமும் உள்ள விசேஷ குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். என்ன விசேஷத்தைப் பார்த்தார்? நிரந்தர ஞானி, ஸ்திரமான சுயராஜ்ய அதிகாரி, அகண்ட தடையற்ற, அகண்ட யோகி, அகண்ட மகாதானியாக எந்தக் குழந்தைகள் இருக்கிறார்கள் -இத்தகைய விசேஷ ஆத்மாக்கள் கோடியிலும் சிலர்தான் ஆகியுள்ளனர். ஞானி, யோகி, மகாதானி எல்லோருமே ஆகியிருக்கிறீர்கள் ஆனால் 'அகண்ட' ஆத்மாவாக மிகச் சிலரே ஆகியுள்ளனர். நிரந்தர, ஸ்திரமான, அகண்ட ஆத்மாக்களே வெற்றி மாலையின் வெற்றி மணிகளாக ஆகின்றனர். பாப்தாதா இந்த சங்கம யுகத்தில் எல்லாக் குழந்தைகளுக்கும் 'ஸ்திரமான அகண்ட பவ' என்ற வரதானத்தை அளித்துள்ளார் ஆனால் வரதரனத்தை வாழ்க்கையில் சதா தாரணை செய்வதில் நம்பர்வார் ஆகி விடுகிறீர்கள். நம்பர்-1 ஆவதற்காக அனைத்தையும் விட மிக எளிய விதி -அகண்ட மகாதானி ஆவது! அகண்ட மகாதானி என்றால் நிரந்தரமாக சகஜ சேவாதாரி! ஏனெனில் சகஜமானதுதான் நிரந்தரமாக முடியும். ஆகவே, அகண்ட சேவாதாரி என்றால் அகண்ட மகாதானி! வள்ளலின் குழந்தைகள், எல்லாக் கஜானாக்களிலும் சம்பன்ன சிரேஷ்ட ஆத்மாக்கள் ஆவீர்கள். சம்பன்னத்தின் அடையாளம் அகண்ட மகாதானி! ஒரு நொடி கூட தானம் செய்யாமல் இருக்க முடியாது. துவாபர யுகம் முதல் தானம் செய்யும் ஆத்மாக்களாக அநேக பக்தர்களும் ஆகிறார்கள் ஆனால் எவ்வளவுதான் பெரிய தானம் செய்பவராக இருந்தாலும், அழிவற்ற கஜானாக்களின் தானம் செய்பவராக ஆவதில்லை. அழியக்கூடிய கஜானா அல்லது பொருட்களின் தானம் செய்பவராக ஆகின்றனர். சிரேஷ்ட ஆத்மாக்கள்

நீங்கள் இப்போது சங்கம யுகத்தில் அழிவற்ற, அகண்ட மகாதானி ஆகிறீர்கள். தன்னைத்தானே கேளுங்கள், அகண்ட மகாதானியாக இருக்கிறேனா? அல்லது சமயத்திற்கேற்ற தானியா? அல்லது வாய்ப்புக்கேற்ற தானியா?

அகண்ட மகாதானி சதா மூன்று விதமாக தானம் அளிப்பதில் பிஸி ஆக இருப்பார். முதலாவதாக, மனம் மூலம் சக்திகளின் தானம், இரண்டாவதாக, வார்த்தைகள் மூலம் ஞானத்தின் தானம், மூன்றாவதாக, கர்மத்தின் மூலம் குணங்களின் தானம்! இந்த மூன்று வித தானங்கள் செய்பவர் சகஜ மகாதானி ஆக முடியும். வார்த்தை மூலம் ஞானதானம் பெரும்பான்மையினர் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பது 'ரிசல்ட்'ல் தெரிந்தது. மனதின் மூலம் சக்திகளின் தானம் முடிந்த வரை செய்கிறீர்கள் மற்றும் செயல் மூலம் குணதானத்தை மிகக் குறைவானவர்களே செய்கிறீர்கள். மற்றும் தற்சமயம், அஞ்ஞானி ஆத்மாக்களாயினும் சரி, பிராமண ஆத்மாக்களாயினும் சரி, இருவருக்குமே குணதானத்தின் தேவை உள்ளது. தற்சமயம் விசேஷமாக தனக்குள் அல்லது பிராமண பரிவாரத்தில் இந்த விதியை தீவிரமாக்குங்கள்.

இந்த தெய்வீக குணம் அனைத்தையும் விட சிரேஷ்ட பிரபு பிரசாதமாகும். இந்த பிரசாதத்தை நன்றாக பகிர்ந்தளியுங்கள். எப்படி யாரையாவது சந்திக்கும்போது ஒருவருக்கொருவர் சிநேகத்தின் அடையாளமாக ஸ்தூலத்தில் டோலி கொடுக்கின்றீர்களா, அது போல ஒருவருக்கொருவர் இந்த குணங்களின் டோலியை அளியுங்கள். இந்த விதி மூலம் சங்கம யுகத்தின் லக்ஷியம் எதுவோ -பரிஷ்தா -to- தேவதை -இது சகஜமாக அனைவரிடமும் பிரத்யக்ஷமாகத் தெரிய வேண்டும். இதை நிரந்தரமாக நினையில் வையுங்கள் -நான் வள்ளலின் குழந்தை அகண்ட மகாதானி ஆத்மா ஆவேன்!

எந்த ஒரு ஆத்மாவிற்கும், அஞ்ஞானியாயினும் சரி, பிராமணராயினும் சரி, ஆனால் கொடுக்க வேண்டும். பிராமண ஆத்மாக்களுக்கு ஞானமோ முதலில் உள்ளது ஆனால் இரு விதமான வள்ளல் ஆக முடியும். (1) எந்த ஆத்மாவிற்கு எந்த சக்தி தேவையோ அந்த ஆத்மாவிற்கு மனம் மூலம், அதாவது சுத்தமான உள்ளுணர்வு, அதிர்வலைகள் மூலம்

சக்திகளின் தானம், அதாவது சகயோகம் அளியுங்கள். (2) கர்மம் மூலம் சதா சுயம் வாழ்க்கையில் குணமூர்த்தி ஆகி, பிரத்யக்ஷ முன்மாதிரி ஆகி மற்றவர்களும் சகஜமாக குண தாரண செய்வதற்கான சகயோகம் செய்யுங்கள். இதற்குத்தான் கூறப்படுகிறது, குணதானம்! தானம் என்றால் சகயோகம் அளிப்பது. இந்நாட்களில் பிராமண ஆத்மாக்களும் கூட கேட்பதற்குப் பதில் பிரத்யக்ஷ சான்றைப் பார்க்க விரும்புகிறார்கள். யாருக்காவது சக்தி தாரணை செய்வதற்கான அல்லது குணத்தைத் தாரணை செய்வதற்கான அறிவுரை கூற விரும்பினால், சிலர் மனதிற்குள் நினைப்பார்கள், சிலர் கூறுவார்கள் இத்தகைய தாரணை மூர்த்தியாக யார் ஆகியிருக்கிறார்கள்? என. பார்க்க விரும்புகிறார்கள் ஆனால் கேட்க விரும்புவதில்லை. அப்படி ஒருவர் மற்றவருக்குக் கூறுகிறீர்களா -யார் ஆனார்கள், எல்லோரையும் பார்த்தாச்சு,...! எப்போதாவது ஏதாவது விஷயம் வந்தது என்றால் கூறுகிறீர்கள் யாருமே ஆகவில்லை, எல்லாம் நடக்கத்தான் செய்யும் என ஆனால் இந்த அலட்சியப் பேச்சு சரியானதில்லை. சரியானது எது? பிரம்மாதந்தையைப் பின்பற்றுங்கள். எப்படி பிரம்மாதந்தை தானாகவே, சதா தன்னை நிமித்த உதாரணமாக ஆக்கினார், சதா இந்த லக்ஷியம் லக்ஷணத்தில் கொண்டு வந்தார் -அதாவது யார் தானாகவே நிமித்தமாகி பிரத்யக்ஷ சான்றாகிறாரோ அவரே அர்ஜுன், முதல் நம்பரில் வருபவர். ஒருவேளை தந்தையைப் பின்பற்ற வேண்டுமானால் மற்றவர்களைப் பார்த்து, ஆவதில் நம்பர்-1 ஆக முடியாது, நம்பர்வார் ஆகி விடுவீர்கள்.

நம்பர்-1 ஆத்மாவின் அடையாளம் ஒவ்வொரு சிரேஷ்ட காரியத்திலும் தான் நிமித்தமாகி மற்றவர்களை சாதாரணமாக (simple) ஆக்குவதற்காக உதாரணமாக (sample) ஆவது. மற்றவர்களைப் பார்ப்பது, பெரியவர்களோ சிறியவர்களோ சமமானவர்களோ, ஆனால் மற்றவர்களைப் பார்த்து ஆவதற்கு முன்னால் இவர்கள் ஆனால் நானும் ஆவேன் என்றால் நம்பர்-1 இவர் ஆகி விட்டார் அல்லவா. ஆகவே தானாகவே நம்பர்வாரில் வந்து விடுகின்றார். எனவே அகண்ட மகாதானி ஆத்மா சதா தன்னை ஒவ்வொரு நொடியும் மூன்று வித மகாதானங்கள் மூலம் ஏதாவது தானம் செய்வதில் பிஸி ஆக இருப்பார். எப்படி சமயமோ அப்படியே சேவையில் சதா ஈடுபட்டிருப்பார். அவருக்கு வீணானதைப் பார்ப்பது, கேட்பது அல்லது செய்வதில் விருப்பமிருக்காது. ஒருவேளை இடையிடையே தடைபட்டது என்றால்

அதை சம்பூர்ணம் எனக் கூற முடியாது. தற்சமயம் தங்களுக்குள் விசேஷ கர்மம் மூலம் குணவள்ளல் ஆவதற்கான அவசியம் உள்ளது. ஒவ்வொருவரும் சங்கல்பம் செய்யுங்கள் -நான் சதா குணமூர்த்தி ஆகி அனைவரையும் குணமூர்த்தி ஆக்கும் விசேஷ கடமையைச் செய்தேயாக வேண்டும்! ஆகவே தனது மற்றும் அனைவரது பலகீனங்களை முடிப்பதற்கு இந்த விதியில் ஒவ்வொருவரும் தன்னை நிமித்த முதல் நம்பர் என புரிந்து கொண்டு முன்னேறுங்கள். ஞானமோ நிறைய உள்ளது, இப்போது குணங்களை வெளிப்படுத்துங்கள், சர்வ குண சம்பன்னம் ஆகுங்கள் மற்றும் ஆக்குவதற்கான உதாரணம் ஆகுங்கள். நல்லது!

எல்லா அகண்ட யோகி ஆத்மாக்களுக்கு, சதா எல்லா குணமூர்த்தி ஆத்மாக்களுக்கு, எல்லா ஒவ்வொரு சங்கல்பம் ஒவ்வொரு நொடி மகாதானி, மகாசகயோகி விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா தன்னை சிரேஷ்டதாவில் முன்மாதிரி ஆக்கி எல்லா ஆத்மாக்களுக்கும் எளிதான சகஜ தூண்டுதல் தரக்கூடிய, சதா தன்னை நிமித்த நம்பர்-1 என புரிந்து பிரத்யக்ஷத்தின் சான்று தரக்கூடிய தந்தைக்குச் சமமான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு, நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

<u>தாதி ஜானகியுடன்:</u> (ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளை சுற்றி வந்ததன் செய்தியைக் கூறி, அனைவரது நினைவுகளையும் தந்தார்). அனைவரது நினைவும் வந்தடைந்தது. நாலா பக்கமும் உள்ள குழந்தைகள் சதா தந்தைக்கு முன்னால் இருப்பதே இதன் பிரத்யக்ஷ சான்றாகும். எப்போது நினைவு செய்கின்றனரோ அப்போது அருகில், கூடவே இருக்கும் அனுபவம் செய்கின்றனர். உளமார பாபா என்றதுமே திலாராம் ஆஜராகி விடுகிறார், ஆதலால் கூறப்படுகிறது -'ஹஜூர் ஹாஜர், ஹாஜரா ஹஜூர்'! எங்கிருந்தாலும், யாராக இருந்தாலும் ஆனால் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரிடமும் ஆஜராகி விடுகிறார், ஆதலால் 'ஹாஜரா ஹஜூர்' ஆகி விடுகிறார். இந்த சிநேகத்தின் விதி மனிதர்களால் தெரிந்து கொள்ள முடியாது. இதை பிராமண ஆத்மாக்கள் நீங்கள்தான் தெரிந்துள்ளீர்கள். அனுபவிகள் இந்த அனுபவத்தைத் தெரிந்துள்ளனர். விசேஷ ஆத்மாக்கள் நீங்கள் இணைந்துதானே இருக்கிறீர்கள். பிரிந்து இருக்க முடியாது. மனிதர்கள் கூறுகின்றனர்

எங்கு பார்த்தாலும் நீயே நீ என மற்றும் நீங்கள் கூறுகிறீர்கள் என்ன செய்தாலும், எங்கு சென்றாலும் தந்தை கூடவே இருக்கின்றார் என, அதாவது நீயே நீ தான். எப்படி கடமை கூட இருக்கிறது எனில் கடமையைச் செய்விப்பவரும் சதா கூடவே இருக்கிறார். ஆகவே பாப்பட்டுள்ளது, செய்பவர் செய்விப்பவர்; எனில் இணைந்து விட்டீர்களா -செய்பவர் மற்றும் செய்விப்பவர்! ஆகவே உங்கள் அனைவருடைய நிலை என்ன? சேர்ந்து இருக்கிறீர்கள். செய்பவர் செய்விப்பவருடன் உள்ளார். செய்விப்பவர் தனியாக இல்லை. இதற்கு தான் இணைந்த ஸ்திதி என கூறப்படுகிறது. எல்லோரும் அவரவர் பாகத்தை நன்றாக நடித்துக் கொண்டிருக்கிறீர்கள். எளிமையாகி அநேக ஆத்மாக்களுக்கு முன்பு உதாரணமாகத் திகழ்வதாகத் தெரிகிறதுதானே. கஷ்டத்தை எளிதாக்குவது -இதுவே தந்தையைப் பின்பற்றுவதாகும். எல்லோரும் அவரவர் பாகத்தை நன்றாக செய்து கொண்டிருக்கிறீர்கள். எங்கிருந்தாலும், விசேஷ பார்ட்தாரி, விசேஷ பாகத்தை நடிக்காமல் இருக்க முடியாது. இது டிராமாவில் உள்ளது. நல்லது. சுற்றி வருவது மிக நன்றாக உள்ளது. சுற்றி வந்து இனிமையான இல்லத்திற்கு வந்து விட்டீர்கள். சேவைக்காக சுற்றுவது அநேக ஆத்மாக்களுக்காக விசேஷ ஊக்கம் உற்சாகத்தின் சுற்றுதல் ஆகும். எல்லோரும் நலம்தானே? நலமாக இருக்கிறீர்கள், நலமாக இருக்கிறீர்கள். டிராமாவுடைய விதி நிச்சயம் இழுக்கின்றது. நீங்கள் இருக்க விரும்புகிறீர்கள் ஆனால் டிராமாவில் இல்லையேல் என்ன செய்வது. நினைக்கிறீர்கள் போக வேண்டும் என; சேவையில் விதிக்கப்பட்டிருந்தால் சேவையின் விதி தனது காரியத்தைச் செல்விக்கும். வருவது, போவது இதுவே விதி. நல்லது. குழுவும் நன்றாக உள்ளது.

**குழுக்களுடன் தனிப்பட்ட சந்திப்பு: (சாரம்).**

**குரூப்-1**: பரமாத்ம அன்பை அனுபவம் செய்வதற்காக துக்கத்தின் அலைகளிலிருந்து விடுபட்டு இருங்கள்!

**குரூப்-2**: அசையாத ஸ்திதியை உருவாக்க மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற பட்டத்தை (title) நினைவில் வையுங்கள்!

**குரூப்-3**: ஒவ்வொரு நொடியும் இறுதி நொடி என புரிந்து சதா எவர் ரெடி ஆகுங்கள், தனது பாக்கியத்தின் பாடலை சதா பாடிக் கொண்டே இருங்கள்!

**குரூப்-4**: ராஜரிஷி, அதாவது சுயராஜ்யத்துடன் சேர்த்து எல்லையற்ற வைராகி ஆகுங்கள்!

**குரூப்-5**: சதா ஒரே மனநிலை எனும் ஆசனத்தில் நிலைத்து இருக்கக்கூடியவரே தபஸ்வி ஆவார்!

**குரூப்-6**: நான் விஷ்வ கல்யாணகாரி ஆத்மா, நன்மை செய்வதே எனது கடமை என்ற இந்த சுவமானத்தில் இருங்கள்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

# 09.12.1993 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# ஏகாக்கிரதா சக்தி, நிச்சயத்தின் மூலமாக, சகஜமான வெற்றியைப் பிராப்தி செய்விக்கிறது!

இன்று பிராமண உலகினை படைப்பவர் தமது நாலா புறங்களில் உள்ள பிராமண பரிவாரத்தைப் பார்த்து புன் சிரிக்கின்றார். இது மிகச் சிறிய, ஒப்பற்ற, மற்றும் அன்புடைய லௌகீக பிராமண உலகம். முழு நாடகத்திலேயே மிகவும் சிரேஷ்டமான உலகம் ஆகும் இது. ஏனென்றால், பிராமண உலகின் நடைமுறைகளும், வழிமுறைகளும் தனிப்பட்டவையானவை மற்றும் சிறப்பானவை ஆகும். இந்த பிராமண உலகில், பிராமண ஆத்மாக்களும், உலகிலேயே மிகவும் விசேஷமான ஆத்மாக்கள் ஆவர். ஆகவே இது விசேஷமான ஆத்மாக்கள் அடங்கிய உலகம் ஆகும். ஒவ்வொரு பிராமண ஆத்மாக்களும் சிரேஷ்டமான எண்ணம், சிரேஷ்டமான பார்வை மற்றும் சிரேஷ்டமான செயல் இவை மூலம் உலகின் சர்வ ஆத்மாக்களையும் சிரேஷ்டமாக்குவதற்கு நிமித்தமாக உள்ளனர். உங்கள் ஒவ்வொரு ஆத்மாவின் மீதும் இந்த விசேஷமான பொறுப்பு உள்ளது. ஆகவே நீங்கள் ஒவ்வொருவரும் இத்தகைய பொறுப்பினை அனுபவம் செய்கிறீர்களா? எவ்வளவு பெரிய பொறுப்பு இது. அகில உலகினையே பரிவர்த்தனை செய்யும் பொறுப்பு! வெறும் ஆத்மாக்களை மட்டும் பரிவர்த்தனை செய்வதில்லை ஆனால், பிரகிருதியையும் பரிவர்த்தனை செய்கிறீர்கள். இந்த ஸ்மிருதியும் வரிசைக்கிரமத்திலேயே இருந்து வருகிறது.

நாம் முதல் எண்ணில் வரும் விசேஷ ஆத்மா ஆக வேண்டும் என்று அனைத்து பிராமணர்களும் கருதி வருகின்றனர் ஆனால் சிந்திப்பதற்கும், செயலுக்கும் இடையில் வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணம் என்னவென்றால், செயலாற்றும்போது, இந்த ஸ்மிருதியை (நிலை) அனுபவத்தில் கொண்டு வருவதில்லை.

செவிமடுப்பதும், அறிவதும் ஆகிய இரண்டும் நினைவில் உள்ளன ஆனால், இந்த ஸ்திதியில் தம்மை உணர்ந்து நடந்து கொள்வதில் சில சமயம் அனுபவஸ்தர்களாகவும், மற்ற சமயங்களில் வெறும் அறிவாளிகளாகவும் மாறி விடுகின்றனர். இந்த அனுபவத்தை அதிகரிப்பதற்கு, இரு விஷயங்களின் மகத்துவத்தை அறிந்தால் போதும். ஒன்று (சுயம்) தன்னுடைய மகத்துவம், இரண்டாவது (சமயம்) காலத்தின் மகத்துவம். தம்மை அறிந்தவர்கள் பலர் உள்ளனர். நீங்கள் எத்தகைய ஆத்மா என்று வேறு எவரையாவது கேளுங்கள். மேலும் நான் யார்? என்று உங்களையே நீங்கள் கேட்டுப் பாருங்கள். எவ்வளவு விஷயங்கள் வெளியாகின்றன! ஒரு நிமிடத்தில் உங்களுடைய எத்தனை குணங்கள் (சுவமான்) நினைவுக்கு வருகின்றன! ஒரு நிமிடத்தில் எத்தனை நினைவுக்கு வருகின்றன? நிறைய நினைவுக்கு வருகின்றன அல்லவா? சுயத்தின் மகத்துவத்தின் பட்டியல் எவ்வளவு நீண்டதாக உள்ளது? அறிவதில் நீங்கள் மிகவும் திறமைசாலிகள்! நீங்கள் அனைவரும் திறமைசாலிகள் அல்லவா! இருப்பினும் அனுபவம் செய்வதில் ஏன் வேறுபாடு அமைந்து விடுகிறது? ஏனென்றால் தக்க தருணத்தில், அந்த ஆசனத்தில் சரியாக அமர்வதில்லை. இது சிரேஷ்டமான ஆசனம் என்கிற அனுபவம் உள்ளது. இந்த ஆசனத்தில் சரிவர அமர்ந்து விட்டால், பலவீன சமஸ்காரமோ, வேறு ஒரு ஆத்மாவோ அல்லது பிரகிருதியோ அல்லது எந்த ஒரு மயக்க வல்ல மாயையோ, உங்களை நிலைகுலையச் செய்ய இயலாது. ஆத்மாக்கள் தமது சரீத்தை ஸ்தூல ஆசனத்தில் ஒரு நிலையில் அமரச் செய்கின்ற பயிற்சியில்லாததன் காரணத்தால் சரியாக இருப்பதில்லை. அசைந்து கொண்டே இருக்கிறார்கள் அல்லவா? அவ்வாறே மனம் மற்றும் புத்தியை அனுபவம் என்கிற ஆசனத்தில் அமரச் செய்ய இயலாவிட்டால் அவ்வப்பொழுது நிலைத்திருப்பதும், அவ்வப்பொழுது நிலை குலையவும் ஏற்படுகிறது. சரீரத்தை அமர்த்துவதற்கு ஸ்தூல ஆசனம் உள்ளது. மனம்-புத்தியை அமர்த்துவதற்கு, சிரேஷ்ட ஸ்திதி என்கிற ஆசனம் உள்ளது. அவ்வப்பொழுது உயர்ந்த ஸ்திதியின் அனுபவம் என்கிற ஆசனத்தில் அமர்வது, அவ்வப்பொழுது தமது ஸ்திதியில் நிலைகுலைவு ஏற்படுத்துவது என்கிற குழந்தைகளின் விளையாட்டினை பாப்தாதா பார்த்து வருகின்றார். சிறிய குழந்தைகள் ஓர் இடத்தில் அமராமல், சதா துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கின்றனர் அல்லவா? இவ்வாறு சில குழந்தைகள் குழந்தைத்தனமான

விளையாட்டில் மிகுதியாக ஈடுபட்டுள்ளனர். அவ்வப்பொழுது ஏகாக்கிரதா (ஒருநிலைப்படுதல்) அவ்வப்பொழுது ஒருநிலைப்படாமல், பல்வேறு ஸ்திதியில் அலைந்து கொண்டிருக்கிறார்கள்! ஆகவே மனமும், புத்தியும் ஒரு நிலையில் இருக்க வேண்டும் என்பதில் இப்பொழுது கவனம் செலுத்துவது அவசியம்.

ஏகாக்கிரதா சக்தி, சகஜமாக நிர்விக்னம் ஆக்க வல்லது. பிரயத்தனம் செய்வதற்கு அவசியமே இல்லை.
ஏகாக்கிரதா சக்தி, தந்தை ஒருவரைத் தவிர வேறு ஒன்று இல்லை என்கிற அனுபூதி தானாக அடைய வைக்கிறது. ஏகாக்கிரதா சக்தி சகஜமாக ஏக்ரஸ் ஸ்திதியை ஏற்படுத்துகிறது.
ஏகாக்கிரதா சக்தி அனைவரின் மீதும், நன்மை புரியும் எண்ணத்தை சகஜமாக உருவாக்குகிறது.
ஏகாக்கிரதா சக்தி, அனைவரின் மீதும் சகோதரத்துவ திருஷ்டியை தானாகவே அமைக்கின்றது.
ஏகாக்கிரதா சக்தி, ஒவ்வொரு ஆத்மாவின் உறவிலும், அன்பு, மரியாதை, சுயமரியாதை கொண்ட செயலை சகஜமாக அனுபவம் செய்விக்கின்றது.

ஆகவே இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? எதன் மீது கவனம் செலுத்த வேண்டும்? ஏகாக்கிரதா. இதில் நிலைத்திருக்கிறீர்கள், அனைவரும் செய்கிறீர்கள் ஆனால் ஏகாக்கிரதா அனுபவசாலிகளாக விளங்குவதில்லை. அவ்வப்பொழுது சிரேஷ்டமான அனுபவம், அவ்வப்பொழுது மத்திமம், அவ்வப்பொழுது சதாரணம் என்கிற மூன்று ஸ்திதிகளிலும் சுழன்று வருகிறீர்கள். உங்களுடைய மனம் மற்றும் புத்தி கனவில் கூட, ஒரு வினாடி கூட நிலைகுலையாதிருக்கும்படி உங்கள் ஆணைக்குக் கீழ்ப்படிந்திருக்குமாறு நீங்கள் சக்தி மிக்கவாறு மாறுங்கள். மனதை பிறர் வசப்படுத்தக்கூடாது. பிற வசத்தில் உள்ள ஆத்மாவின் அடையாளமாவது, இந்த ஆத்மாவிற்கு எவ்வளவு காலம் சுகம், சாந்தி, ஆனந்தம் ஆகியவற்றின் அனுபூதி தேவையோ அது ஏற்படவே ஏற்படாது. பிராமண ஆத்மா, ஒருபோதும் பிற வசம் ஆகவே இயலாது. தமது பலவீனம், சுபாவம் மற்றும் சமஸ்காரத்தினாலும் வசப்பட மாட்டார்கள்.

சுபாவம் என்பதன் பொருள் சுயத்தின் பாவம் என்பதே. சுயத்தின் பாவம் நல்லதாகவே இருக்க முடியும். கெட்டதாக இருக்க முடியாது. "சுயம்" என்று கூறும்போது என்ன நினைவு ஏற்படுகிறது? ஆத்மீக சொரூபமே நினைவுக்கு வருகிறது அல்லவா? ஆகவே சுப-பாவம் என்றால் சுயத்தின் பேரில் அல்லது அனைவரின் பேரிலும் ஆத்மீக பாவம் என்று பொருள். பலவீனத்தினால் வசப்படுபவர், இது என்னுடைய சுபாவம் அல்லது என்னுடைய சமஸ்காரம், இது இவ்வாறு உள்ளதே நான் என்ன செய்வேன்? இது இவ்வாறு உள்ளதே என்று நினைக்கின்றார். எத்தகைய ஆத்மா இவ்வாறு பேசுகிறது? இது பிற வசப்பட்டுள்ள ஆத்மாவின் குரல் அல்லது சங்கல்பமே ஆகும்.

இது என்னுடைய சுபாவம் என்கிற சங்கல்பம் வரும் போது இதன் சிரேஷ்ட அர்த்தத்தில் நிலைத்து விடுங்கள். பழைய சம்ஸ்காரம் ஏதாவது முன்னிலையில் வந்தால் என்னுடைய சம்ஸ்காரம் என்று கருதி நினைக்கும்போது, இது சிரேஷ்ட ஆத்மாவான என்னுடைய சமஸ்காரமா இது? இதனை என்னுடைய சம்ஸ்காரம் என்றா கூறுகின்றேன்? என்று வினவுங்கள் என்னுடைய என்று கூறுவதனால் இந்த பலவீனமான சமஸ்காரமும் தன் சுய நலத்தின் காரணமாக உங்களை விடுவதில்லை. எங்கு என்னுடையது என்பது உள்ளதோ, அங்கு தன்னுடையது ஏற்படுகிறது. தன்னுடையது இருக்குமிடத்தில் அதிகாரமும் இருக்கும் என்பது நியமம். ஆகவே பலவீனத்தை எனது என்று அவருடையது (ஆத்மா) ஆக்கி விடுவதால் அது தனது அதிகாரத்தைக் கைவிடுவதில்லை. இதனால் ஆத்மா, பரவசப்பட்டு, தந்தையின் முன்னிலையில் என்னை விடுவியுங்கள், விடுவியுங்கள் என்று இறைஞ்சுகிறது. சமஸ்காரம் என்று கூறும்போது, அனாதி சம்ஸ்காரமே, ஆதி சமஸ்காரமே என்னுடைய உண்மையான சமஸ்காரம் என்பதை நினைவு கூறுங்கள். இது மாயையின் சமஸ்காரம் என்னுடையதில்லை. ஆகவே ஏகாக்கிரதா சக்தியின் மூலமாக, பரவச ஸ்திதியை பரிவர்த்தனை செய்து தலைவன் என்கிற ஸ்திதியாகிய ஆசனத்தில் அமர்ந்து விடுங்கள்.

யோகத்தில் அமருகிறீர்கள். மிகுந்த விருப்பம் கொண்டு அமர்கிறீர்கள்! ஆனால் எவ்வளவு நேரம், எந்த ஸ்திதியில் நிலைத்திருக்க விரும்புகிறீர்களோ, அந்த சமயத்தில், ஏகாக்கிரதா ஸ்திதியில்

நிலைத்திருப்பது மிகவும் அவசியம் ஆகும். ஆகவே என்ன செய்ய வேண்டும்? ஆசிரியர்கள் என்ன செய்வீர்கள்? எந்த விஷயத்திற்கு அடிக்கோடிடுவீர்கள். ஏகாக்கிரதா! ஏகாக்கிரதாவில் தான் உறுதி உள்ளது. எங்கு உறுதி உள்ளதோ அங்கு வெற்றி கழுத்தில் மாலையாகத் திகழும். நல்லது.

நாற்புறங்களிலும் விளங்கும், அலௌகீக பிராமண உலகின், விசேஷ ஆத்மாக்களுக்கு, சதா சிரேஷ்ட ஸ்திதி என்கிற அனுபவம் என்கிற ஆசனத்தில் நிலையாக அமர்ந்து இருக்கும் ஆத்மாக்களுக்கு, சதா தனது மகத்துவத்தை அனுபவம் செய்து வரும் சதா ஏகாக்கிரதா சக்தியின் மூலம் மனம் மற்றும் புத்தியை ஒரு நிலைப்படுத்துகின்ற ஆத்மாக்களுக்கு, சதா ஏகாக்கிரதா சக்தியின் மூலம் அடையும் உறுதியின் மூலம் சகஜமான வெற்றி அடைந்து வரும் சிரேஷ்ட சர்வ விசேஷ, சர்வ சிநேகி ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

# 16.12.1993 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உண்மையான சிநேகி ஆகி, ஒரு தந்தையின் மூலமாகவே சர்வ சம்பந்தங்களின் அனுபவத்தை அடையுங்கள்!

இன்று விஷ்வ சிநேகியான பாப்தாதா, தமது அதி சிநேகமாகவும் மற்றும் சதா துணையாக அதாவது சகயோகியாக விளங்குகின்ற ஆத்மாக்களைப் பார்க்க வந்திருக்கின்றார். நாலா புறங்களிலும் உள்ள சர்வ பிராமண ஆத்மாக்களும் நிச்சயமாக சிநேகிகள் தான். ஏனென்றால் அன்பின் மூலமாகவே தமது பிராமண வாழ்க்கையை பரிவர்த்தனை செய்துள்ளார்கள். இருப்பினும், அன்பு மூன்று வகைகள் ஆகும். (1) அன்பு கொண்டிருப்பவர்கள் (2) இரண்டாவது அன்பு செலுத்துபவர்கள் (வழங்குபவர்கள்) (3) அன்பில் மூழ்கியிருப்பவர்கள். மூழ்கியிருப்பவர்கள் என்றால் சமமாக விளங்குபவர்கள் என்று பொருள்.

அன்பு கொண்டிருப்பவர்கள் சில நேரம் அன்பு கொள்கின்றனர். அவ்வாறு இருக்கும் போதோ அன்பு சில நேரத்தில் இணைந்துள்ளது, சில நேரத்தில் துண்டிக்கப்படுகிறது. ஆக வே அடிக்கடி இந்த அன்பை மீண்டும் இணைப்பதற்காக அன்பு முயற்சி செய்ய வேண்டியுள்ளது? இது ஏன்? ஏனென்றால் தந்தையுடன் அன்பு கொண்டிருப்பதுடன் வேறு ஒரு இடத்திலும் (ஒரு மனிதர் மீதோ, பிரகிருதியின் மீதோ, சாதனத்தின் மீதோ) அன்பு செலுத்துகிறார்கள். அன்பு சங்கல்பம் அளவிலும் ஏற்பட்டாலும், தந்தையின் மீது அன்பு கொண்டிருப்பவர்களின் பட்டியலில் இவர்கள் இடம் பெற்று விடுகின்றனர்.

அன்பின் அடையாளமாவது: எந்த முயற்சியும் இல்லாமலேயே அன்பு சிநேகியின் மீது தானாகவே செல்வதே ஆகும். ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு ஸ்திதியும் ஒவ்வொரு பரஸ்திதியிலும் அன்பு கொண்டிருப்பவர் தமது சிநேகியின் ஆதாரத்தை அனுபவம் செய்து விடுகிறார்கள். மாறாக ஒரு சாதனத்தின் மீது அன்பு இருந்தால் அச்சமயத்தில் தந்தையை விட அந்த சாதனத்தின் மிகுதியான ஆதாரத்தை அதாவது உதவியை அனுபவம் செய்கின்றனர். அச்சமயத்தில், சங்கல்பத்தில் தந்தையின் அன்பு நினைவுக்கு வருகின்றது. தந்தையின் சிநேகம் சிரேஷ்டமானது ஆனாலும் இந்த சாதனம் அல்லது மனிதனின் உதவியும் மிகவும் அவசியமானது ஆகும் என்று கருதுகின்றனர். இதனால் அன்பு இரு தரப்பிலும் செல்கிறது. மேலும் அடிக்கடி அன்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது. ஒரு சக்தி, ஒரு நம்பிக்கை என்பதற்கு மாறாக, இரண்டாவது நம்பிக்கைக்குரிய வஸ்துவும் அவசியமாகிறது. தந்தையின் அன்பின் மூலமாக அடையக்கூடிய சர்வ பிராப்திகளையும் அனுபவம் செய்வதற்கு பதிலாக, இந்த ஸ்தூல ஆதாரத்தின் மூலமாக அடையும் அல்ப கால பிராப்தி, குழந்தைகளை தன் பக்கம் வசீகரித்து விடுகிறது. மிகுந்த வசீகரம் ஏற்படுவதால் அந்த ஸ்தூல வஸ்துவும் அவசியமான ஒன்று என கருதச் செய்கிறது. அதை வசீகரிப்பு என்று உணராமல் உதவி என்ற நம்புகின்றனர். இவர்களையே அன்பு கொண்டிருப்பவர்கள் என்று சொல்லப்படுகிறது.

அன்பு செலுத்துபவர்கள்: அன்பு செலுத்துபவர்களிடத்தில் அன்பு இருப்பதால் அந்த அன்பை வழங்கும் சக்தி உள்ளது. வழங்குவது என்றால், தந்தையின் அன்புக்கு பிரதி பலனாக அன்பை வழங்குபவர்கள் என்று பொருள். அன்புள்ள தந்தை தமது குழந்தைகளின் மீது சிரேஷ்ட ஆசைகளைக் கொண்டுள்ளார். இந்த அனைத்து ஆசைகளையும், நடைமுறையில் பூர்த்தி செய்ய வேண்டும். தந்தையின் மீது அன்பு செலுத்துபவர்கள் மிகுதியாக செயலாற்றி, நடைமுறையில் இதனை செயல்படுத்திக் காட்டுகின்றனர் ஆனால் சதா தந்தைக்கு சமமாக அதாவது அன்பில் உரைந்திருப்பவர்களின் அனுபவத்தை இந்த இரண்டாம் வகையினர் அவ்வப்பொழுதே அனுபவம் செய்கின்றனர். மற்ற சமயங்களில் அந்த அனுபவம் ஏற்படுவதில்லை. இருப்பினும் அன்பு செலுத்துபவர்கள் சமீபத்தில் உள்ளனர் ஆனால் சமமாக

விளங்குவதில்லை. அன்பு செலுத்துபவர்களுக்கு இவர்களுடைய அன்பின் பிரதி பலனாக கோடி மடங்கு தைரியம் மற்றும் உற்சாகம் என்கிற உதவி, விசேஷமாக தந்தையின் மூலமாக கிடைத்து விடுகிறது.

அன்பில் மூழ்கியிருக்கும் ஆத்மாக்களின் நயணங்களில், சொல்லில், சங்கல்பத்தில், ஒவ்வொரு செயலிலும் எளிதாகவும், இயற்கையாகவும் அன்பு மிக்க தந்தையின் துணையை சதா அனுபவம் செய்து வருகின்றனர். தந்தை இவர்களை விட்டு பிரிந்திருப்பதில்லை. இவர்களும் தந்தையை விட்டு தனித்திருப்பதில்லை. ஒவ்வொரு கணமும், தந்தையின் அன்பின் பலனாக பிராப்தியாக அடைந்துள்ள சர்வ பிராப்திகளில், நிறைந்தும், திருப்தியுடனும் விளங்கி வருகின்றனர். இதனால் வேறு எந்த ஒரு உதவியும் இவர்களை வசீகரிக்க இயலாது. ஏன் என்றால் எதாவது ஒரு அல்ப காலத்திற்கான பிராப்தியின் அவசியம், வேறு ஒருவரை ஆதாரமானவராகச் செய்து விடுகிறது. அதாவது சம்பூர்ணமாக அன்பில் குறையை ஏற்படுத்தி விடுகிறது ஆனால் அன்பில் மூழ்கியுள்ள ஆத்மாக்கள் சதா சர்வ பிராப்திகளிலும் நிறைந்திருக்கின்ற காரணத்தினால் சகஜமாக ஒரு தந்தையைத் தவிர வேறு ஒருவர் இல்லை என்கிற அனுபூதியில் இருந்து வருகின்றனர். அனைவரும் அன்புள்ளவர்கள் தாம் ஆனால் இதில் மூன்று வகை உள்ளது.

நான் எத்தகையவர் என்று உங்களையே நீங்கள் கேட்டுப் பாருங்கள். உங்களை நீங்களே உணர முடியும் அல்லவா? அல்லது இயலாதா? நான் யார்? என்பதை உணர்ந்து கொள்பவர்கள் அல்லவா? நீங்கள் அன்புடையவர்கள் தான். இந்த அன்பின் காரணமாகவே பிராமண வாழ்க்கையில் நீங்கள் இருந்து வருகிறீர்கள் ஆனால் அன்புடன், அதை வழங்கும் சக்தியை அடைவதில் வரிசைக்கிரமம் உருவாகி விடுகிறது. அன்புடன் சக்தியும் அவசியம் ஆகும். எவரிடத்தில் அன்பு மற்றும் சக்தி ஆகிய இரண்டும் சரிசமமாக உள்ளதோ இவரே தந்தைக்கு சமமாக வருகிறார். தந்தையின் அன்பை விட்டு விலகியிருப்பது கடினமாக உள்ளது என்கிற அனுபவம் மூழ்கியிருக்கும் ஆத்மாக்களுக்கு இருந்து வரும். மூழ்கியிருப்பது எளிதாகவும், விலகியிருப்பது கடினமாகவும் இருக்கும். ஏனென்றால் மூழ்கியிருக்கும் ஆத்மாக்களுக்கு தந்தையே உலகம் ஆகிறது. உலகில் வசீகரம் செய்யக் கூடியவை இரு

விஷயங்கள் தாம். ஒன்று மனிதனின் சம்மந்தம், இரண்டாவது செல்வம் அல்லது சாதங்களின் மூலம் அடையும் பிராப்தி. உறைந்துள்ள ஆத்மாவிற்கு சர்வ சம்பந்தங்களின் வசமான அனுபவம் ஒரு தந்தையின் மூலமாகவே சதா ஏற்பட்டு விடுகிறது. சர்வ பிராப்திகளின் ஆதாரம் செல்வமோ அல்லது சாதனமோ அல்ல. மாறாக தந்தை ஒருவர் தான். செல்வமும், சாதனமும் படைப்புகள். மேலும் தந்தையே படைப்பவர் ஆகிறார். எவருக்கு படைப்பவர் ஆதாரமாக உள்ளரோ இவருக்கு படைப்புகளின் மூலமாக அற்ப கால பிராப்திகளை அடையும் எண்ணம் கனவிலும் வராது.

குழந்தைகளின் அவ்வப்பொழுது ஏற்படுகின்ற ஸ்திதியைப் பார்த்து பாப்தாதாவுக்கு என்ன ஏற்படுகிறது? சிரிப்பு வருகின்றது. ஏனென்றால் இதனால் ஆச்சரியம் ஏற்படுவதில்லை. முற்றுப்புள்ளி வைக்கவே தோன்றுகிறது. போகப்போக விதையைக் கை விட்டுவிட்டு, கிளைகளினால் வசீகரிக்கப்படுகின்றனர். சிலர் வேறு மனித ஆத்மாக்களை ஆதாரமாகச் செய்து விடுகின்றனர். வேறு சிலர் சாதனங்களை ஆதாரமாகச் செய்து விடுகின்றனர். ஏனென்றால் விதையின் உருவமும், நிறமும் கவர்ச்சி அளிப்ப தில்லை ஆனால் கிளைகள் மிகுந்த கவர்ச்சியுடன் இவர்களுக்கு காட்சி அளிக்கின்றன. தேகதாரியின் சம்பந்தத்தின் ஆதாரம் தேக உணர்வினால் சகஜமாக அனுபவம் ஆகிறது ஆனால் தந்தையின் ஆதாரம் உடல் உணர்வுக்கு அப்பால் செல்லும்போதுதான் அனுபவம் ஆகிறது. உடல் உணர்வில் இருந்து வரும் பழக்கம் இப்பொழுதும் இருந்து வருகிறது. இதனால் தேகதாரியின் சம்பந்தத்தின் ஆதாரம் அல்லது உதவி சகஜமாக அனுபவம் ஆகிறது. இது சரியல்ல என்று உணர்ந்தாலும் இவ்வாறு வேறு ஒன்றை ஆதாரமாக உருவாக்கிக் கொள்கின்றனர். இதைப் பார்த்துப் பார்த்து பாப்தாதா புன்முறுவல் செய்கின்றார். நீங்கள் வகுப்பிலோ அல்லது சொற்பொழிவாற்றும் போதோ கிளிப்பிள்ளை பற்றிய ஒரு சிறு கதை கூறுகிறீர்கள். கிளியிடம் நீங்கள் குழாயின் மீது அமராதே என்று பல முறை கூறுகிறார்கள். அந்தக் கிளி அந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாததால் அந்தக் குழாயின் மீது அமர்வதால் கண்ணியில் சிக்கிக் கொள்கிறது. இத்தகைய உங்களுடைய ஸ்திதியைக் கண்டு பாப்தாதாவுக்கு சிரிப்பு வருகின்றது. இவ்வாறே குழந்தைகளும் உள்ளுக்குள் ஒரு புறம், ஒரு தந்தையைத்

தவிர வேறு ஒன்றும் இல்லை என்று நினைக்கின்றனர். பலமுறை உள்ளுக்குள் இதைத் இரும்பதிரும்ப கூறியும் வருகிறீர்கள். இருப்பினும் இத்துடன் தூலத்தில் நமக்கு ஆதாரம் அவசியமே என்றும் கருதுகிறீர்கள்! இப்பொழுது என்ன ஏற்படுகிறது? சிரிப்பு வருகிறது அல்லவா? மேலும் அச்சமயத்தில் மாயையும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கிறது. பொய்மையான ஆதாரத்தையும் மெய்யான உதவி என்ற உங்களைக் கருதச் செய்யுமாறு உங்களுடைய பத்தியை மாயை மாற்றி விடுகிறது. இக்காலத்தில் பொய்மை, வாய்மையை விட சிறப்பாகத் தோன்றுகிறது! அவ்வாறே அச்சமயத்தில் தவறும், சரியானது போல் அனுபவம் ஏற்படுகிறது. ஆகவே இந்த தவறை அதாவது பொய்யான ஆதாரத்தை உண்மை என்ற உங்களை நம்ப வைப்பதற்காக, பலவீனமான கட்டிடத்திற்கு வலிமைப்படுத்துவதற்கு பிரத்யோகமான தூண்களை முட்டுக் கொடுப்பதைப் போன்று, மாயையும், உங்களுடைய பலவீனமான சங்கல்பங்களை வலிமைப்படுத்துவதற்காக போலியான தூண்களை உருவாக்குகிறது. எத்தகைய தூண்களை உபயோகிக்கின்றது தெரியுமா? நீங்கள் அனைவரும் அறிவீர்கள்! இவ்வாறு தான் நடைபெறும், பெரியவர்களும் இப்படித்தான் செய்கிறார்கள்; இவ்வாறு தான் நடந்து கொள்கின்றனர் அல்லது இப்பொழுது நாம் புருஷார்த்திதான் இதுவரை சம்பூர்ணம் அடையவில்லை. ஆகவே இப்பொழுது ஏதாவது குறை இருந்து வரவே செய்யும், போகப்போக நாம் சம்பூர்ணம் அடைந்து விடுவோம் என்று கருதுகிறீர்கள். இவ்வாறு வியர்த்த சங்கல்பம் என்கிற போலி தூண் உங்களுடைய பலவீனத்தை வலிமைப்படுத்தி விடுகிறது. ஆகவே இத்தகைய தூண்களின் உதவியை நாடக்கூடாது. ஏனென்றால் தக்க சமயத்தில் இந்த போலித் தூண் உங்களை ஏமாற்றி விடும். சர்வ சம்பந்தங்களின் ஆதாரமாக தந்தை ஒருவர் தான் விளங்க வேண்டும் ஆனால் இந்த சர்வ சம்பந்தங்களின் அனுபவத்தை நீங்கள் குறைவாகவே அனுபவம் செய்கிறீர்கள். இந்த சரி சம்பந்தங்களின் அனுபவத்தை இப்பொழுது அதிகரியுங்கள். சர்வ சம்பந்தங்களின் அனுபூதி குறைவாக இருப்பதன் காரணத்தால் ஏதாவது ஒரு அல்ப காலத்திற்கான சம்பந்தம் உருவாகி விடுகிறது ஸ்தூல வாழ்க்கையிலும், ஸ்தூல உருவின் உதவியாக அல்ல. பரஸ்திதியில், ஸ்தூல உருவில் உதவி செய்பவர்களாக உதவும் தந்தையே என்கிற அனுபவத்தை இப்பொழுது மேலும் அதிகரியுங்கள். தந்தை சூட்சும

உருவில் சகயோகம் அளித்து வருகின்றார். இவர் நிராகாரி மற்றும் ஆகாரி ஆனால் இவர் சாகாரியாக ஒருபோதும் விளங்குவதில்லையே என்று கருதாதீர்கள். ஒவ்வொரு சம்பந்தத்தையும் சாகார உருவில் அனுபவம் செய்ய இயலும் சாகார உருவம் உடன் இருந்து வருவதை அனுபவம் செய்வு இயலும். ஆகவே இந்த அனுபூதியை ஆழமாக அறிந்து உணருங்கள். மேலும் உங்களை இதன் மூலம் வலிமைப் படுத்துங்கள். இவ்வாறானால் மனிதன், செல்வம் அல்லது சாதனம் உங்களை ஆகர்ஷிக்க இயலாது. சாதனங்களை நிமித்தமாகக் கருதி செயலில் ஈடுபடுத்த வேண்டும். அல்லது சாட்சியாக மாறி சேவையின் பொருட்டு, செயலில் ஈடுபடுத்த வேண்டும் என்கிற அனுபூதியை அதிகரியுங்கள். இவை ஆத்மா வசியமானவை அல்ல மாறாக நிமித்தமானவையே ஆகும். இத்தகைவரையே அன்பில் உறைந்திருக்கும் சகஜமான ஆத்மா என்று அழைக்கின்றோம். நான் யார் என்று நீங்களே உங்களைப்பற்றி சிந்திக்க வேண்டும். புரிந்ததா! நல்லது.

சதா அன்பில் மூழ்கியிருக்கும் சமமான ஆத்மாக்களுக்கு, சதா ஒரு தந்தையின் மூலம் சர்வ சம்பந்தங்களையும் அனுபவம் செய்து வரும் ஆத்மாக்களுக்கு, சதா ஒரு தந்தை தான் ஆதார மூர்த்தி உண்மையான உதவி என்று அனுபவம் செய்து வரும் ஆத்மாக்களுக்கு சதா சர்வ பிராப்திகளையும் படைப்பவரான தந்தையின் மூலம் அனும வம் செய்து வரும் ஆத்மாக்களுக்கு, சதா சகஜமான இயற்கையாக ஒரு சக்தி, ஒரு நம்பிக்கை என்று அனுபவம் செய்து வரும் உண்மையான அன்புமிக்க ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் வணக்கம் உரித்தாகுக!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

## 23.12.1993 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பவித்ரதா என்கிற திடமான விரதம் மூலம் விருத்தியைப் பரிவர்த்தனை செய்ய வேண்டும்!

இன்று உயர்ந்தவரிலும் உயர்ந்தவரான தந்தை, தமது சர்வ மகான் குழந்தைகளைப் பார்த்து வருகின்றார். அனைத்து குழந்தைகளும் மகான் ஆத்மா ஆகி விட்டனர். ஏனென்றால் அனைவரும் மகான் ஆவதற்கு முக்கியமான ஆதாரமான பவித்திரத்தை தாரணை செய்துள்ளனர். பவித்திரம் என்கிற விரதத்தை அனவைரும் உறுதிமொழி என்கிற உருவில் தாரணை செய்துள்ளனர். ஏதாவது ஒரு வழியில் திட சங்கல்ப உருவத்தில் விரதத்தை மேற்கொள்வது என்றால், தமது விருத்தியை பரிவத்தனை செய்வது என்றும் பொருள். திடமான விரதம், விருத்தியை மாற்றிவிடுகிறது.. இதனால் தான் பக்தியிலும், விரதத்தை மேற்கொள்ளவும் செய்கின்றனர், மற்றும் விரதத்தை கடைப்பிடிக்கவும் செய்கின்றனர். விரதத்தை மேற்கொள்வது என்றால், மனதில் சங்கல்பம் செய்வது என்று பொருள். மற்றும் விரதத்தைக் கடைப்பிடிப்பது என்றால் நடைமுறையில், கட்டுப்பாட்டுடன் இருப்பது ஆகும். உண்பதில் உபவாசம் மற்றும் நடை, உடை பாவனையில் கட்டுப்பாடு, ஆக இந்த இரண்டின் லட்சியமாவது விரதத்தின் மூலமாக விருத்தியை மாற்றுவதே ஆகும். நீங்கள் அனைவருமே பவித்திரத்திற்கான விரதத்தை மேற்கொண்டுள்ளதால், விருத்தியை விசேசமானதாக்கி விட்டீர்கள். உங்கள் அனைவரிடமும் இந்த விரதம் உறுதியாக உள்ளது அல்லவா?

பிராமண வாழ்க்கையின் அர்த்தமே, பவித்திர ஆத்மாவாக இருப்பது. மேலும் இந்த பவித்திரமே, பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம் ஆகும். இந்த அஸ்திவாரம் வலிமையுடன் உள்ளது அல்லவா? அல்லது அசைந்து கொடுக்கிறதா? இந்த அஸ்திவாரம் உறுதியாக, நிலையாக

இருந்தால் தான் பிராமண வாழ்க்கையின் சுகத்தை அடைய இயலும். அவ்வப்பொழுது குழந்தைகள் தந்தையுடன் உரையாடும் போது உண்மையான சார்ட்டை காட்டும்போது என்ன கூறுகின்றனர்? எந்தளவு அதீந்திரிய சுகத்தை அனுபவம் செய்ய வேண்டுமோ, எந்த அளவு சுகத்தின் அனுபவம் ஏற்பட வேண்டுமோ அந்த அளவு இருப்பதில்லை! ஏதோ இருக்கின்றது ஆனால் எந்த அளவு தேவையோ அந்த அளவு இல்லை, இதை வேறு வகையில் கூற வேண்டுமானால் இருக்கிறது, ஆனால் சதா இருப்பதில்லை. அதன் காரணம் என்ன? கூறும்போது மாஸ்டர் சர்வ சக்திவான் என்று கூறுகிறீர்கள். நீங்கள் மாஸ்டர் சர்வ சக்திவானா என்று கேட்டால் என்ன கூறுவீர்கள்? ஆமாம் அல்லது இல்லை? என்ன கூறுகிறீர்கள்? இல்லை என்று கூறுவதில்லையல்லவா? ஆமாம் என்றே கூறுகிறார்கள். மாஸ்டர் சர்வ சக்திவான் எனும்போது சக்திகள் எங்கு சென்று விட்டன? ஆனால் நீங்களோ பிராமண வாழ்வினர். நீங்கள் பெயர் அளவில் பிராமணர்கள் அல்ல. உண்மையான பிராமண ஜீவன்தாரியாக விளங்குகிறீர்கள். ஆகவே பிராமண வாழ்க்கையில் சம்பூர்ண சுகம், சாந்தியின் அனுபவம் இல்லையெனில், அல்லது பிராமண வாழ்க்கையில் சர்வ பிராப்திகளிலும் முழுமை நிலை இல்லையெனில், பிராமணர்களுக்கு இவற்றைத் தவிர வேறு என்ன இருக்க முடியும்? வேறு ஏதாவது இருக்க முடியுமா? பிராமணர்களுக்கு மட்டுமே இவை இருந்து வரும் அல்லவா? நீங்கள் அனைவரும் எவ்வாறு கையெழுத்திடுகிறீர்கள்? பி.கே. இன்னார், பி.கே. இன்னார் உங்களது கையெழுத்தின் பின்னால் பி.கே. நிச்சயம் இருக்கும் அல்லவர்? அப்படியானால் பி.கே.யின் அர்த்தம் என்ன! பிராமணன். இதுவே பிராமணர்களின் மொழியாகும்.

இவ்வளவு, அவ்வளவு என்ற வார்த்தை ஏன் தோன்றுகிறது. சுகம் மற்றும் சாந்திக்கு பிறவிகளிலிருந்தே பவித்திரம் ஆகும் என்று கூறுகிறீர்கள் அல்லவா! எப்பொழுதாவது அதிந்திரிய சுகம், மற்றும் முழுமையான அமைதியின் அனுபவம் குறைவாக இருந்தால் இதன் காரணமாவது பவித்திரத்தின் அஸ்திவாரம் பலவீனமானதாக உள்ளதாகும். பவித்திரம் என்றால், வெறும் பிரம்மச்சரிய விரதம் மட்டும் அல்ல, இந்த விரதமே உயர்ந்த விரதம் ஆகுப் ஏன் என்றால் இந்த பிரம்மச்சரிய விரதத்தை கடைபிடித்து வரும் இன்றை மகான் ஆத்மா என்று கூறப்படுபவரும் இதை கடைப்பிடிப்பது சுலபம் என்பது

மட்டுமல்ல, அசம்பவமும் ஆகும் என்று கருதுகின்றனர் ஆனால் இந்த அசம்பவமானது உங்களுடைய திட சங்கல்பத்தின் மூலமாக சம்பவம் ஆகும் என்று மாற்றி விட்டீர்கள். ஆகவே இந்த விரதத்தைக் கடைப்பிடிப்பதும், சாதாரணமான விஷயம் அல்ல. பாப்தாதா இந்த விரதத்தைக் கடைப்பிடித்து வரும் ஆத்மாக்களுக்கு மனதார ஆசீர்வாதத்துடன் பாராட்டையும் தெரிவிக்கின்றார் ஆனால் பாப்தாதா ஒவ்வொரு பிராமண குழந்தையையும், சம்பூர்ண மற்றும் முழுமையாகப் பார்க்க விரும்புகின்றார். இந்த முக்கியமான விரதத்தை வாழ்க்கையில் உங்களுடையதாக செய்து விட்டீர்கள், அசம்பவத்தை சம்பவமா சகஜமாக மாற்றி விட்டீர்கள். ஆகவே முழு குலத்திலும் பவித்திரத்தை கடைப்பிடிப்பது உங்களுக்கு ஒரு பெரிய விஷயம் அல்ல. பவித்திரத்தாவின் பிரியமானவராகிய நீங்கள் அனைவரும் கற்பிப்பவர்கள், கற்பிப்பவர்கள் அல்லவா! பவித்திரத்தா என்றால் என்ன? உங்களிடம் யாராவது வினவினால், இந்தத் தலைப்பில் உரையாற்றும்படி வேண்டினால் அவ்வாறு உரையாற்ற இயலுகிறது அல்லவா? நல்ல முறையில் செய்ய இயலுகிறது அல்லவா? இவ்வாறு இதை உரையாற்ற முடிந்த போதிலும் ஏற்றுக் கொள்ளும்போது மட்டும், இவ்வளவு, அவ்வளவு என்கிற வார்த்தை ஏன் வருகிறது? இந்த பவித்திரம் குறைவாக இருப்பதால், சுகம், சாந்தி சக்தியின் அனுபவம் குறைந்து வருகிறது? பவித்திரம் எந்த ஸ்திதியில் நிலை குலைகிறது, எந்த உருவில் தூய்மை நிலை குலைகிறது என்பதை சோதனை செய்யுங்கள். பாப்ததாதா பவித்திரத்தின் அனைத்து உருவங்களையும் இப்பொழுது தெளிவுபடுத்துகிறார். ஏன் என்றால், நீங்கள் இவற்றை அறிவீர்கள், பல முறை செவிமடுத்திருக்கிறீர்கள், இதைப் பற்றி பேசவும் செய்கிறீர்கள், உங்களுக்கும் ஆமாம், இருக்கிறது என்றும் கூறுகிறீர்கள். பெரும்பலானோர் முடிவைப் பார்க்கும்போது, என்ன காணப்படுகிறது? ஞானம் மிகுதியாக உள்ளது, யோகத்தின் விதியிலும், விதாதா ஆகி விட்டீர்கள், தாரணை பற்றி வர்ணனை செய்வதிலும் திறமைசாலிகள் மற்றும் சேவையிலும் ஒருவரை ஒருவர் மிஞ்சியிருக்கிறீர்கள். பிறகு என்ன தேவை? அனைத்திலும் முதன்மையாக வருகிறீர்கள் ஆனால் இன்னும் ஒரு விஷயத்தில் மட்டும் கவனக்குறைவுடன் இருக்கிறீர்கள். அது என்ன என்றால், 'ஒரு வினாடியில் வியர்த்த சிந்தனை, வியர்த்த பேச்சு, வியர்த்த பிரபாவம், வியர்த்த செயல்கள்" ஆகியவற்றிற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு, பரிவர்த்தனை ஆக வேண்டும். பலவீனம்

சுகத்தின் அனுபவத்தில் குறையை ஏற்படுத்தி விடுகிறது. சக்தி சொரூபம் ஆவதில், மற்றும் தந்தைக்குச் சமமாக மாறுவதில் விக்ன சொரூபம் ஆக்கி விடுகிறது என்பதையும் நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். இருப்பினும் என்ன ஆகிறது? உங்களை பரிவர்த்தனை செய்து கொள்ள விடுவதில்லை, முற்றுப்புள்ளி வைக்க முடிவதில்லை, இது சரியே என்று உணர்ந்தாலும் கமா, போட்டு விடுகிறீர்கள். அதாவது மற்றவரைப் பார்த்து ஆச்சரியக்குறி, இட்டு விடுகிறார்கள். இவ்வாறு நடைபெறுமா என்ன! இவ்வாறு நடைபெற வேண்டும்! அல்லது ஏன், என்கிற கேள்விக் குறி இட்டு விடுகிறார்கள். கேள்விக்கு கேள்விக்குறி போட்டு விடுகிறார்கள். புள்ளி என்றால் பிந்து, மற்றும் பிந்து சொரூபமான தந்தை மற்றும் பிந்து சொரூபமான ஆத்மா ஆகிய இரண்டும் நினைவில் இருந்தால் தான் முற்றுப்புள்ளி வைக்க முடியும். இந்த நினைவு முற்றுப்புள்ளி வைப்பதில் அதாவது பிந்து வைப்பதில் சக்தி மிக்கவர்களாக மாற்றி விடுகிறது. அச்சமயத்தில் நான் ஆன்மீக ஸ்திதியில் நிலைத்திருக்க வேண்டும் என்று சிலர் நினைக்கும் போதும், மாயை தனது வெள்ளித்திரையின் மூலம் ஆத்மாவுக்கு பதிலாக, ஒரு மனிதனையோ அல்லது வேறு ஒரு விஷயத்தையோ அடிக்கடி முன்னிலையில் கொண்டு வந்து விடுகிறது. இதனால் ஆத்மா மறைந்து விடுகிறது மேலும். அடிக்கடி மனிதரோ, அல்லது வேறு விஷயங்களோ தெளிவாக முன்னில் தோன்றுகிறது. ஆகவே இதன் மூல காரணமாவது சுயத்தின் மீது கட்டுப்படுத்தும் சக்தி குறைவாக இருப்பதே ஆகும். மற்றவர்களை கட்டுப்படுத்துவது எளிதாக உள்ளது ஆனால் தன்னைக் கட்டுப்படுத்துவதில் அதாவது பரிவர்த்தனை சக்திகளை செயலில் கொண்டு வருவதில் குறை காணப்படுகிறது.

சில குழந்தைகளின் பேச்சைக் கேட்டு, பாப்தாதா புன்முறுவல் செய்கின்றார். என்ன கூறுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? புரிந்து கொண்டீர்கள் அல்லவா? புரிந்து கொள்வதில் திறமைசாலிகள் அல்லவா? கூறப் போனால் அனைவருமே திறமைசாலிகள் தாம்? சுய பரிவர்த்தனைக்கான சமயம் வரும்போதோ அல்லது சகித்துக் கொள்வதற்கான சமயம் வரும்போதோ, எதிர்கொள்வதற்கான சமயம் வரும்போதோ அனைவரும் அனைத்தையும் செய்து விட்டு என்ன கூறுகின்றனர்? நான் தான் சாக வேண்டும், நான் தான் மாற வேண்டும்? நான் தான் அனைத்தையும் சகித்துக் கொள்ள வேண்டியுள்ளது

என்கின்றனர். இன்னார் இறந்து விட்டார், சொர்க்கத்திற்கு சென்று விட்டார் என்று உலகில் கூறுகின்றனர் அல்லவா? அந்த மரணத்தால் சொர்க்கம் போக முடியுமா என்ன? உங்கள் மரணத்தினால் சொர்க்கத்தின் சிரேஷ்ட ஆசனம் கிடைத்து விடுகிறது. ஆகவே இது மரணம் அல்ல, மாறாக சொர்க்க இராஜ்யத்தை அடைவதாகும். ஆகவே இது ஒரு பெரிய விஷயமா என்ன? இல்லை அல்லவா? ஆகவே மரணம் அடைந்தது நல்லது அல்லவா? இல்லை கவலையானதா? அந்த நேரம் கஷ்டமாகி விடுகிறது. நான் தவறே செய்யவில்லை, அவர் தான் தப்பு செய்தார் ஆனால் தவறை நான் எப்படி சரி செய்வேன், இது என்னால் முடியாது. தவறானவரை மாற்ற வேண்டுமா அல்லது சரியானவரையா? யாரை மாற்ற வேண்டும்? இரண்டு பேரையுமே மாற்ற வேண்டுமா! ஆன்மீக பாஷையில் மாற்றுவது என்றால் முன்னேறுவது எனக் கொள்ளுங்கள், மாற்றுவது என்று அல்ல, முன்னேறுவது! தலைகீழான ரூபத்தில் மாற்றுவது அல்ல, நேரான ரூபத்தில் மாற்றுவது. உங்களுக்கு மாறுவதற்கான சக்தி உள்ளதா அல்லது ஒருபோதும் மாறவே மாட்டீங்களா?

பவித்ரதா என்றால் -சதா எண்ணம், சொல், செயல், சம்பந்தம், தொடர்பில் மூன்று புள்ளியின் மகத்துவத்தை ஒவ்வொரு நேரமும் தாரணை செய்வதாகும். எப்பேர்பட்ட சூழ்நிலை வந்தாலும் ஒரு நொடியில் முற்றுப்புள்ளி வைப்பதற்கு முதலில் தனக்கே அந்த வாய்ப்பை அளியுங்கள் -நான் செய்ய வேண்டும்! இத்தகையவர்களுக்குத்தான் மூன்று விதமான ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றன -(1) தனக்குத் தானே ஆசீர்வாதம் கிடைக்கிறது, அதுதான் குஷி, (2) தந்தை மூலம், (3) பிராமண பரிவாரத்தைச் சேர்ந்த சிரேஷ்ட ஆத்மாக்கள் மூலம் ஆசீர்வாதம் கிடைக்கிறது, எனில் இறக்கிறீர்களா அல்லது அடைகிறீர்களா? அடைகிறீர்கள்! எனில் முற்றுப்புள்ளி வைப்பதற்கான முயற்சியை மற்றும் கட்டுப்படுத்தும் சக்தி மூலம் பரிவர்த்தன் சக்தியை தீவிர வேகத்தில் அதிகரியுங்கள். அலட்சியம் கூடாது -இதுவோ இப்படித்தான் ஆகும், நடக்கத்தான் செய்யும்,... இது அலட்சியத்தின் சங்கல்பம் ஆகும். அலட்சியத்தை மாற்றம் செய்து கவனமாக இருங்கள். நல்லது.

நாலாபுறமும் உள்ள ஆத்மாக்களுக்கு, சர்வ சிரேஷ்ட பவித்ரதாவின் விரதத்தை தாரணை செய்யும் ஆத்மாக்களுக்கு, சதா தன்னை ஒரு நொடியில் முற்றுப்புள்ளி வைத்து சிரேஷ்ட பரிவர்த்தனை செய்யும் ஆத்மாக்களுக்கு, சதா சிரேஷ்ட காரியத்தில் தன்னை நிமித்தமாக்கிக் கொள்ள முன்வரும் ஆத்மாக்களுக்கு, சதா மூன்று புள்ளிகளின் மகத்துவத்தை நடைமுறையில் தாரணை செய்து காண்பிக்கக்கூடிய தந்தைக்குச் சமமான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

தாதிகளுடன்: எல்லோரும் உங்களைப் பார்த்து குஷி அடைகிறார்கள். ஏன்? (பாப்தாதா எல்லோரிடமும் கேட்கின்றார்) தாதிகளைப் பார்த்து குஷி அடைகிறீர்களா? ஏனெனில் உங்களது வைப்ரேஷன் மற்றும் கர்மம் மூலம் குஷி அளிக்கிறீர்கள். இத்தகைய சிரேஷ்ட ஆத்மாக்களைச் சந்திக்கும் போது குஷியை அனுபவம் செய்கிறீர்களா. (டீச்சர்களிடம்) பின்பற்றவும் செய்கிறீர்கள் அல்லவா! பலரும் நினைக்கின்றனர் தந்தையோ தந்தை தான் எனில் பாப் சமான் எப்படி ஆக முடியும்? ஆனால் யார் நிமித்த ஆத்மாக்களோ அவர்களோ உங்களை ஒத்தவர்களா? அவரால் ஆக முடியும் என்றால் உங்களால் ஆக முடியாதா என்ன? அனைவருக்கும் சம்பன்னம், சம்பூர்ணம் ஆக வேண்டும் என்ற லட்சியம் உள்ளது. 16-கலையா அல்லது 14-கலையா என ஒருவேளை கைதூக்கச் சொன்னால், எதில் கைதூக்குவீர்கள். 16-கலையில்! எனில் 16-கலையின் அர்த்தம் என்ன? சம்பூர்ணம்! எப்போது லட்சியம் இவ்வாறு உள்ளது எனில் ஆகத்தான் வேண்டும். கஷ்டமே இல்லை, ஆகத்தான் வேண்டும். சின்னச்சின்ன விஷயங்களில் பயந்து விடாதீர்கள். சிலை உருவாக்கப்படுகிறது என்றால் கொஞ்சமாவது சுத்தியால் அடி வாங்கும்தானே, இல்லையேல் எப்படி உருவாக்க முடியும். எந்தளவு யார் முன்னேறுகிறார்களோ அவர் அதிகமாகப் புயலையும் கடக்க வேண்டி வரும் ஆனால் அந்த புயல் அவருக்குப் புயலாகத் தெரியாது, பரிசாகத் தோன்றும். இந்தப் புயலும் அனுபவி ஆவதற்கானப் பரிசாக ஆகி விடுகிறது. எனில் பரிசு பெறுவது நன்றாக உள்ளதா அல்லது கடினமாக உள்ளதா? எனில் இதையும் பெற்றுக் கொள்ள வேண்டும், தர வேண்டாம். கொடுப்பது கஷ்டமாக உள்ளது, பெறுவதே சகஜமாக இருக்கிறது. எனக்கு மட்டும்தான் இந்த பாகமா, எல்லாத் தடைகளின் அனுபவமும் என்னிடம்தான் வர

வேண்டுமா என்று இப்படி நினைக்காதீர்கள். வா என வரவேற்பு அளியுங்கள். இது பரிசு. அதிகத்திலும் அதிகமான பரிசு கிடைக்கிறது, இதில் என்ன? மிகத் துல்லியமான சிலை ஆவது என்றால் அதிக அடி சுத்தியால் வாங்குவது. சுத்தியால் அடித்து அடித்து தான் சரி செய்கின்றனர். நீங்கள் அனுபவி ஆகி விட்டீர்கள், எதுவும் புதிதல்ல. விளையாட்டாகத் தெரியும். பார்த்துக் கொண்டே இருங்கள், புன்சிரித்துக் கொண்டே இருங்கள், ஆசீர்வாதம் கொடுத்துக் கொண்டே இருங்கள். டீச்சர்கள் தைரியசாலிகளா அல்லது அவ்வப்போது பயப்படுகிறீர்களா? இதை நினைத்துக்கூட பார்க்கலை, இப்படி ஆயிடுச்சு, முதலிலேயே தெரிந்திருந்தால்,... பிராமணன் ஆவதிலும் இவ்வளவு இருக்கும் என்று இந்தளவு நினைக்கவே இல்லை என இரட்டை வெளிநாட்டினர் நினைக்கிறீர்களா? சிந்தித்து, புரிந்து கொண்டு தானே வந்துள்ளீர்கள் அல்லது இப்போது சிந்திக்க வேண்டியுள்ளதா? நல்லது. யார் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும் ஆனால் பாப்தாதா நல்லதை மட்டுமே பார்க்கின்றார். எனவே பாப்தாதா அனைவருக்கும் நல்லதையேத்தான் கூறுவார், தீயதைக் கூற மாட்டார். 9-தீயவைகள் இருக்கலாம் ஆனால் ஒன்று நல்லது இருந்தது எனில் தந்தை என்ன கூறுவார்? நல்லதையா அல்லது இவரோ மிகவும் தீயவர், அதிகம் குறைகள் உடையவர் எனக் கூறுவாரா? நல்லது. இது மிகப் பெரிய குழுவாக உள்ளது. (21-தேசங்களிலிருந்து வந்துள்ளனர்). நல்லது, நிரம்பினால் தான் இன்னொரு புதியது உருவாகும். ஒருவேளை நிரம்பவில்லை எனில் உருவாக்குவதற்கான தேவை வராது. தேவை தான் சாதனங்களை முன் கொண்டு வருகிறது.

தூய்மைதான் பிராமண வாழ்க்கையின் அஸ்திவாரம். அஸ்திவாரம் சதா பக்காவாக இருக்க வேண்டும். ஏனெனில் அஸ்திவாரம் சதா ஆடாத-அசையாததாக இருப்பதுதான் பிராமண வாழ்க்கையில் சுகத்தைப் பெறுவதாகும். பிராமணன் என்றாலே தூய்மையான ஆத்மா!

குழுவினருடன் தனிப்பட்ட சந்திப்பு (சாரம்):

**குரூப்-1 டில்லி: இயற்கை மற்றும் மனித ஆத்மாக்களை பரிவர்த்தன் செய்வதற்காக தனது அதிர்வலையை மற்றும் உள்ளுணர்வை சக்திசாலி ஆக்குங்கள்!**

டில்லி பரிவர்த்தனை ஆகட்டும், சென்று விடலாம் என அனைவரும் காத்துக் கொண்டிருக்கின்றனர். ஆக பரிவர்த்தனுக்கு நிமித்தமானவர்கள் டில்லிவாசிகள். குழந்தைகளை நிமித்தமாக்கி, தந்தை முதுகெலும்பாக இருக்கிறார்.

தனது சிரேஷ்ட சதோபிரதான வைப்ரேஷன் மூலம், சுப பாவனை, சுப விருப்பம் மூலம் இயற்கை மற்றும் மனித ஆத்மாக்களின் உள்ளுணர்வை மாற்றம் செய்விப்பது நிமித்த ஆத்மாக்கள் உங்களது பொறுப்பாகும், காலம் செய்விக்காது.

டில்லியை மாற்றம் செய்வதற்காக விசேஷமான 'மைக்'களை தயார் செய்யுங்கள். 'மைக்'களை தயார் செய்வதற்காக ஒரே நேரத்தில விசேஷமாக மூன்று வித சேவை செய்ய வேண்டும். எண்ணம், சொல், சம்பந்தம் தொடர்பில், வாயுமண்டலத்தில் என இந்த நான்கும் இணைந்து சேவை செய்யும் போதுதான் நிமித்தமான ஆத்மாக்கள் உங்கள் அருகில் வருவார்கள் ஆனால் குழுவாகச் செய்ய வேண்டும், ஏதோ ஓரிருவர் மட்டுமல்ல.

எப்போது வாயிற்கதவு (gate) திறக்கும்? பிராமணர்கள் ஃபரிஷ்தா ஆகும் போதுதான் திறக்கும்!

சதா ஒவ்வொரு சங்கல்பமும், ஒவ்வொரு நொடியும் சேவாதாரியாக இருப்பவர்தான் எல்லையற்ற சேவாதாரி ஆவார். நல்லது.

**குரூப்-2: அனைத்தையும் தந்தையிடம் ஒப்படைத்து விடுவது என்றால் டபுள் லைட் ஆவது!**

எந்த ஒரு விஷயம் முன்னால் வந்தாலும் அது எல்லையற்ற விளையாட்டாகும், இதைத்தான் டிராமா எனப்படுகிறது மற்றும் டிராமாவில் நீங்கள் அனைவரும் ஹீரோ நடிகர்கள்; ஹீரோ நடிகர்கள் என்றால் துல்லியமாக (accurate) நடிக்கக்கூடியவர்.

தந்தையுடையவராவது என்றால் எல்லா சுமையையும் தந்தையிடம் ஒப்படைத்து விடுவது.

எப்போது உங்களது படைப்பான தாமரை மலர் 'நியாரா'வாக இருக்கிறது எனில் படைப்பவர் உங்களால் அதை விட இன்னும் அதிக 'நியாரா'வாக இருக்க முடியும்.

மோடி நகர் ஹாஸ்டல் குமாரிகளுடன்: பிரம்மா குமாரிகள் என்றால் 'நியாரி' குமாரிகள். எப்போது ஒரு தந்தையிடம் அன்பு இருந்தது எனில்

பாதுகாப்பாக இருப்பீர்கள், இல்லையேல் எங்காவது சிக்கிக் கொள்வீர்கள்.

**குரூப்-3: சர்வ சக்திவான் தந்தையுடன் சதா இணைந்து இருந்தால் வெற்றி உங்களை சுற்றி வரும்!**

எப்போது சர்வ சக்திவானுடன் இணைந்து இருந்தீர்கள் என்றால் சக்திகள் எங்கு சென்று விடும்? கூடவேத்தான் இருக்குமில்லையா!

**குரூப்-4: சிரேஷ்ட கர்மத்திற்கான ஆதாரம் -சிரேஷ்ட நினைவு!**

சங்கம யுக சிரேஷ்ட பிராமணன் என்றால் ஒவ்வொரு சங்கல்பம், ஒவ்வொரு நொடியும் சிரேஷ்டமானதாக இருக்கும்.

நான் உயர்ந்ததிலும் உயர்ந்த சிரேஷ்ட பிராமண ஆத்மா ஆவேன் என்ற இந்த நினைவு சதா வெளிப்பட்ட (emerge) ரூபத்தில் இருக்கட்டும்.

குலத்திற்கு ஏற்றபடி செயலும் இருக்கும். சிரேஷ்ட கர்மத்திற்கான ஆதாரம் சிரேஷ்ட நினைவு! நினைவு சிரேஷ்டமாக இருந்தால் கர்மமும் தானாகவே சிரேஷ்டமாக இருக்கும். எது வரை இந்த பிராமண வாழ்க்கை இருக்குமோ அதுவரை தானாகவே இந்த நினைவு இருக்கட்டும் -நான் உயர்ந்ததிலும் உயர்ந்த சிரேஷ்ட பிராமண ஆத்மா ஆவேன்!

நல்லது, மகாராஷ்டிரா மற்றும் ஆந்திரா வாசிகள் இப்போது ஏதாவது புதுமை செய்து காண்பியுங்கள். நல்லது.

**குரூப்-5: ஒவ்வொரு அடியிலும் கோடி மடங்கு வருமானம் சேமிக்கக்கூடிய யுகம், சங்கம யுகம்! (இரட்டை வெளிநாட்டினருடன்).**

துணை வேண்டுமா அல்லது துணைவன் வேண்டுமா? இத்தகைய துணைவன் ஒருபோதும் கிடைக்க மாட்டார். எல்லோரும் எடுத்துக் கொள்பவராக இருப்பார்கள், கொடுப்பவராக அல்ல. வள்ளலே துணைவனாக உள்ளார்! நல்லது.

**பெரிய நாள் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்!** கிறிஸ்துமஸ் கொண்டாடி விட்டீர்களா அல்லது இப்போது கொண்டாடுவீர்களா? கிறிஸ்துமஸ் என்றால் தந்தை மூலம் பரிசு பெறுவது. அவர் கிறிஸ்துமஸ் ஃபாதர் (தந்தை) மற்றும் இவர் 'காட் ஃபாதர்' (God Father). எனில் கிறிஸ்துமஸ்

ஃபாதர் என்ன தருகிறார்? சின்னச்சின்ன பரிசுகள் தருவார். மேலும் 'காட் ஃபாதர்' என்ன பரிசு தருகிறார்? ஜென்ம ஜென்மத்திற்கான சர்வ சிரேஷ்ட பிராப்திகளுடைய அதிகாரி ஆக்குகிறார். சொர்க்கத்தைக் கையில் தருகிறார். சொர்க்கம் உங்கள் கையில் உள்ளதா? இது உங்களுடைய படமா அல்லது பிரம்மாபாபா உடையது மட்டுமா? ஏனெனில் படத்தில் ஒருவரைத்தான் காட்டுகின்றனர் ஆனால் அதிகாரிகளாக அனைவருமே ஆகிறீர்கள். இந்த போதை உள்ளதா?

இதை பெரிய நாள் எனக் கூறி கொண்டாடுகின்றனர் ஆனால் உங்களது ஒவ்வொரு நொடியும் பெரியதாகி விட்டது; ஏனெனில் ஒரு நொடியில் எவ்வளவு சம்பாதிக்கிறீர்கள் எனில் பெரியதாகி விட்டதல்லவா! மேலும் கிறிஸ்துமஸ்த்தின் அடையாளமாக எதைக் காட்டுகின்றனர்? (கிறிஸ்துமஸ் ட்ரீ -tree). எனில் சங்கமத்தில் உங்களுக்குத்தான் மரத்தின் ஞானம் கிடைத்துள்ளதல்லவா. உங்களுடைய மரம் எவ்வளவு பெரியதாக உள்ளது. எனவே நீங்கள் எங்கு அமர்ந்திருக்கிறீர்கள்? கல்ப விருக்ஷத்தில் அமர்ந்திருக்கிறீர்கள். இந்த சங்கம யுகத்தின் நினைவுச்சின்னத்தை ஒரு நாளாக அமைத்து கொண்டாடுகிறார்கள். எனில் கிறிஸ்துமஸ்திற்கான வாழ்த்துக்கள் கிடைத்ததா? இது கிடைப்பதும் கூட வாழ்த்துதான்! நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋ ❋❋❋❋❋❋❋❋

# 31.12.1993 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# புது வருடத்தை எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்தில் பறங்கள் மற்றும் அனைவருக்காகவும் மஹாதானி, வரதானி ஆகி வீணானதை முடிவு கட்டுங்கள்!

இன்று புது யுகம் மற்றும் புது உலகின் படைப்பவர் பாப்தாதா தன்னுடைய புது யுகத்தின் ஆதாரமூர்த்திக் குழந்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். பாப்தாதாவுடன் குழந்தைகள் நீங்கள் அனைவரும் எப்பொழுதும் உதவியாளராக இருக்கிறீர்கள். எனவே நீங்கள் தான் ஆதாரமூர்த்தி ஆவீர்கள். உலகீய கணக்கின்படி இன்றைய நாள் வருடத்தின் சங்கமமாகும். பழைய வருடம் விடை பெற்றுச் சென்று கொண்டிருக்கிறது மற்றும் புது வருடம் வந்து கொண்டிருக்கிறது. இது வருடத்தின் சங்கமமான நாள் மேலும் நீங்கள் எல்லைக்கப்பாற்பட்ட சங்கமயுகத்தில் அமர்ந்திருக்கிறீர்கள், நீங்கள் அனைவரும் புது வருடத்தின் கூடவே புது யுகத்தின் வாழ்த்துக்களை அனைவருக்கும் கொடுக்கிறீர்கள். ஒரு நாளின் வாழ்த்துக்கள் இல்லை, ஆனால் புது யுகத்தின் அனேக ஜென்மங்களுக்காக வாழ்த்துக்களைக் கொடுக்கிறீர்கள். இந்த சங்கமயுகத்தில் பிராமண ஆத்மாக்கள் நமக்கு இந்த நேரம் புது வாழ்க்கை கிடைத்திருக்கிறது என்று மிக நன்றாக அனுபவம் செய்கிறீர்கள். புது வாழ்க்கையில் வந்து விட்டீர்கள் தான் இல்லையா? பிராமணர்களின் உலகமே புதியது தான். அமிர்தவேளையிலிருந்து பார்த்தீர்கள் என்றால் புதிய பழக்கம், புதிய அன்பு இருக்கிறது. பழைய உலகத்தின் ஒரு நாளின் நடவடிக்கை மற்றும் புது வாழ்வின் பிராமண வாழ்க்கையில் ஒரு நாளின் நடவடிக்கையில் எவ்வளவு வித்தியாசம். இருக்கிறது. அனைத்தும் புதியதாக ஆகி விட்டது. புதிய நினைவு, புதிய உள்உணர்வு, புதிய

பார்வை அனைத்தும் மாறி விட்டது இல்லையா? மேலும் புதிய வாழ்க்கை எவ்வளவு நன்றாக இருக்கிறது. பார்க்கப் போனால் புதிய பொருள் அனைவருக்கும் பிடித்தமானதாக இருக்கும். பழைய பொருளை அகற்ற விரும்புவார்கள் மற்றும் புதிய பொருளை வாங்க விரும்புவார்கள். அப்படி இந்த நேரத்தின் இது சிறிய புதிய உலகமாகும். உலகமும் புதியது மற்றும் சம்ஸ்காரமும் புதியது. எனவே உலகத்தினரும் கூட புதிய வருடத்தை கோலாகலமாகக் கொண்டாடுகிறார்கள். கொண்டாடுவதின் அர்த்தம் ஊக்கம் உற்சாகத்தில் வருவது. உற்சாகம் ஏற்படுகிறது. எனவே கொண்டாடும் நாளை உற்சவம் (பண்டிகை) என்று கூறுகிறார்கள். உற்சாகத்தினால் தான் ஒருவர் இன்னொருவருக்கு பாராட்டுக்கள் மற்றும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறார்கள் மற்றும் வாழ்த்துகிறார்கள். பிராமண ஆத்மாக்கள் உங்களுக்காக ஒவ்வொரு நாளும் உற்சவம் தான். எப்பொழுதும் உற்சவம்; என்றால் ஊக்கம் உற்சாகத்தில் இருக்கிறீர்கள். இந்த ஊக்கம் உற்சாகம் தான் பிராமண வாழ்க்கை ஆகும். உலக வழக்கத்தின்படி விசேஷ நாளைக் கொண்டாடுகிறீர்கள், இன்று கொண்டாடுவதற்காகத் தான் அனைவரும் இங்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள் இல்லையா? ஆனால் உங்களுடைய புது யுகம் புது வாழ்க்கையின் ஊக்கம் உற்சாகம் எப்பொழுதுமே இருக்கிறது. இரண்டாம் தேதி ஆகி விட்டால் ஊக்கம் உற்சாகம் குறைந்து விடும், ஒரு மாதம் ஆகி விட்டால் இன்னும் இல்லாமல் ஆகி விடும். என்று அப்படி இல்லை. ஒவ்வொரு நாளும் ஊக்கம் உற்சாகம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. குறைவது இல்லை. அப்படித் தான் இல்லையா? அல்லது அவரவர்களின் ஊருக்குச் சென்ற பிறகு உற்சாகம் இல்லாமல் ஆகி விடுமா? ஒவ்வொரு விநாடியும் ஊக்கம் உற்சாகம் நிறைந்தது. ஏனென்றால் ஊக்கம் உற்சாகம் தான் பிராமணர்களாகிய உங்களுக்கு பறக்கும் கலைக்கான இறக்கைகள். இந்த ஊக்கம் உற்சாகத்தின் இறக்கைகளினால் எப்பொழுதுமே பறந்து கொண்டே இருக்கிறீர்கள். ஒருவேளை தனது வேலையைச் செய்வதற்காக காரியத்தில் வந்தாலும் கூட பறக்கும் கலையின் நிலையினால் கர்மயோகி ஆகி காரியத்தில் வருகிறீர்கள். அப்படி பறக்கக்கூடியவர்கள் தான் இல்லையா? அப்படியானால் இறக்கைகள் இன்றி பறக்க முடியாது. இந்த ஊக்கம் உற்சாகம் என்ற பறக்கும் கலையின் இறக்கைகள் எப்பொழுதும் உடன் இருக்கிறது. இந்த ஊக்கம் உற்சாகம் பிராமணர்கள் உங்களுக்காக மிகப்

பெரிய சக்தி ஆகும். சோர்வான வாழ்க்கை இல்லை. உலகத்தினரோ என்ன செய்வது ரசனையே இல்லை, ரசனையற்ற வாழ்க்கை என்று கூறுவார்கள். மேலும் நீங்கள் ஊக்கம் உற்சாகத்தின் ரசனையோ இருக்கவே இருக்கிறது என்று கூறுவீர்கள். ஒருபொழுதும் மனம் உடைந்து போனவராக ஆக முடியாது. எப்பொழுதும் குஷி நிறைந்த மனம் இருக்கிறது. எப்படிப்பட்ட கடினமான விஷயமாக இருந்தாலும் ஊக்கம் உற்சாகம் கடினத்தை சுலபம் ஆக்கி விடுகிறது. உற்சாகம் புயலையும் பரிசாக ஆக்கி விடுகிறது. மலையையும் கடுகாக கூட இல்லை பஞ்சாக ஆக்கி விடுகிறது. உற்சாகம் எந்த விதமான சோதனை மற்றும் பிரச்சனையை பொழுது போக்காக அனுபவம் செய்விக்கிறது. எனவே ஊக்கம் உற்சாகத்தில் புது யுகத்தின் ஆதாரமூர்த்தி புது வாழ்க்கையுடைய பிராமண ஆத்மாக்கள் நீங்கள். நீங்கள் உங்களை தெரிந்து இருக்கிறீர்களா? ஏற்றுக் கொள்ளவும் மட்டும் செய்கிறீர்களா அல்லது தெரிந்து மட்டும் இருக்கிறீர்களா? என்னவென்று சொல்லலாம்? தெரிந்திருக்கவும் செய்கிறீர்கள், ஏற்றுக் கொள்ளவும் செய்கிறீர்கள் மேலும் அதன்படி நடந்து கொண்டும் இருக்கிறீர்கள். சென்ற கல்பத்திலும் நாம்தான் அப்படி இருந்தோம், இப்பொழுதும் இருக்கிறோம் மேலும் அனேக தடவைகள் நாம் தான் அப்படி ஆவோம். அப்படி ஆழியாத உற்சாகமாக ஆகி விட்டது இல்லையா? இருந்தோம், இருக்கிறோம் மேலும் எப்பொழுதும் இருப்போம் -மூன்று காலத்திற்கும் ஆகி விட்டது இல்லையா? கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் -மூன்று காலங்கள் ஆகி விட்டது. அப்படி அழியாததாக ஆகி விட்டது இல்லையா. அழியாத ஊக்கம் உற்சாகத்தில் இருக்கக்கூடிய ஆத்மாக்கள் வரிசைக்கிரமமாக இருக்கிறார்களா அல்லது அனைவரும் நம்பர் ஒன்னில் இருக்கிறார்களா? என்று பாப்தாதா பார்த்துக் கொண்டிருந்தார். எப்பொழுது நிச்சபுத்தி உடையவர் கண்டிப்பாக வெற்றி அடைவார் என்று இருக்கிறதோ அப்பொழுது வெற்றி அடைபவர் அவசியம் நம்பர் ஒன்னாகத் தான் இருப்பாரேயன்றி வரிசைக் கிரமமாகவா இருப்பார்?

எனவே எப்பொழுதும் புது வாழ்க்கையின் இந்த உற்சாகத்தில் பறந்து கொண்டே இருங்கள். ஏனென்றால் நீங்கள் ஆதாரமூர்த்தி ஆவீர்கள். தன்னுடைய வாழ்க்கைக்காக மட்டும் ஆதாரமாக நீங்கள் இருக்கவில்லை ஆனால் உலகத்தின் அனைத்து ஆத்மாக்களுக்கும்

நீங்கள் ஆதாரமூர்த்தி ஆவீர்கள். உங்களுடைய உயர்ந்த உள்உணர்வினால் உலகின் சூழ்நிலை மாறிக் கொண்டிருக்கிறது. உங்களுடைய இனிமையான பார்வையினால் உலகின் ஆத்மாக்கள் மற்றும் இயற்கை இரண்டும் தூய்மையாகிக் கொண்ருக்கிறது. உங்களுடைய பார்வையினால் படைப்பு மாறிக் கொண்டிருக்கிறது. உங்களுடைய உயர்ந்த காரியங்களினால் சிரேஷ்டாச்சாரி (உயர்ந்த காரியங்கள் செய்பவர்கள்) உலகம் உருவாகிக் கொண்டிருக்கிறது. அப்படி எவ்வளவு பொறுப்பு இருக்கிறது. உலகத்தின் பொறுப்பு என்ற கிரீடம் அணிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா? அல்லது சில நேரம் சுமையாக இருக்கிறது என்று இறக்கி வைத்து விடுகிறீர்களா? என்ன செய்கிறீர்கள்? யார் டபுள் லைட்டாக இருக்கிறார்களோ அவர்களுக்கு இந்த பொறுப்பின் கிரீடம் கூட எப்பொழுதும் லேசாக அனுபவம் ஆகும், சுமையாக அனுபவம் ஆகாது. இந்த நேரத்தில் கிரீடம் அணிந்திருப்பவர்கள் எதிர்காலத்திலும் கிரீடம் அணிந்தவர்களாக ஆவார்கள். அப்படியானால் புதிய வருடத்தில் என்ன செய்வீர்கள்? அவ்யக்த வருடத்தையும் கொண்டாடினீர்கள், அவ்யக்த வருடம் என்றால் பரிஷ்தா ஆகி விட்டீர்களா? அல்லது இப்பொழுது ஆக வேண்டுமா? பரிஷ்தாக்கள் என்ன செய்கிறார்கள்? அவ்யக்தத்தின் அர்த்தமே பரிஷ்தா என்பதாகும். வருடம் முடிந்து விட்டது என்றால் பரிஷ்தாவாக ஆகி விட்டீர்கள்தான் இல்லையா அல்லது ஆகவில்லையா? அவ்யக்த வருடத்தையும் இன்னும் கொஞ்சம் அதிகமாக ஆக்கி விடலாமா? இரண்டு வருடங்களை ஒரு வருடமாக ஆக்கி விடுவோமா? இப்பொழுது இன்னும் முன்னேற வேண்டும் தான் இல்லையா? அவ்யக்த வருடத்தைக் கொண்டாடினீர்கள், இப்பொழுது பரிஷ்தாவாக ஆகி என்ன செய்வீர்கள்?

எப்பொழுதும் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நேரமும் மஹாதானி மற்றும் வரதானியாக ஆக வேண்டும். அப்படி இந்த வருடத்தை மஹாதானி, வரதானி வருடமாகக் கொண்டாடுங்கள். உறவு சம்பந்தத்தில் யார் வந்தாலும் மஹாதானியாகி அந்த ஆத்மாவிற்கு ஏதாவது சக்தியின், ஞானத்தின் குணத்தின் தானம் கொடுக்கத் தான் வேண்டும். மூன்று பொக்கிஷங்களும் எவ்வளவு நிரம்பியிருக்கின்றன. ஞானத்தின் பொக்கிஷம் நிரம்பியிருக்கிறதா? அல்லது கொஞ்சம் குறைவாக இருக்கிறதா? மாஸ்டர் ஞானம் நிறைந்தவர் தான் நீங்கள்

இல்லையா? அப்படி ஞானத்தின் பொக்கிஷமும் இருக்கிறது, சக்திகளின் பொக்கிஷமும் இருக்கிறது, மேலும் குணங்களின் பொக்கிஷமும் இருக்கிறது. மூன்றிலும் நிரம்பியிருக்கிறீர்களா அல்லது ஒன்றில் தான் நிரம்பியிருக்கிறீர்கள் மற்ற இரண்டிம் நிரம்பியில்லை என்றிருக்கிறதா? தற்சமயம் ஆத்மாக்களுக்கு இந்த மூன்றும் மிக அவசியமாக இருக்கிறது. முழு நாளிலும் ஏதாவது ஒரு தானத்தை அது ஞானமானாலும் சரி, சக்தியானாலும் சரி அல்லது குணங்களலானாலும் சரி ஆனால் அவசியம் கொடுக்கத் தான் வேண்டும். மஹாதானி ஆத்மாக்களுக்கு தானம் கொடுக்காத நாள் ஒன்று கூட இருக்க வேண்டாம். வருடம் முடிவடைந்து விட்டது மேலும் நீங்கள் எங்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை என்று அப்படி இருக்க வேண்டாம். வாய்ப்பை எடுத்துக் கொள்வது கூட தன்னிடம் தான் இருக்கிறதா அல்லது வாய்ப்பு கொடுப்பவர் எப்பொழுது கொடுக்கிறாரோ அப்பொழுது தான் வாய்ப்பை எடுக்க முடியுமா? அல்லது தானே வாய்ப்பை எடுத்துக் கொள்ள முடியுமா? வாய்ப்பை எடுத்துக் கொள்ளத் தெரியுமா? அல்லது யாராவது கொடுத்தால் தான் எடுக்கத் தெரியுமா? யாராவது வாய்ப்பு கொடுக்கவில்லை என்றால் என்ன செய்வீர்கள்? பார்த்துக் கொண்டும், யோசித்துக் கொண்டும் இருந்து விடுவீர்களா? முழு நாளிலும் பிராமண ஆத்மாக்களானாலும் அஞ்ஞானி ஆத்மாக்கள் ஆனாலும் உறவு சம்பத்தத்தில் வரத் தான் செய்கிறார்கள் இல்லையா? அப்படி யாருடைய உறவு சம்பந்தத்தில் வந்தாலும் அவருக்கு ஏதாவது தானம் அதாவது சகயோகத்தை கொடுங்கள். தானம் என்ற வார்த்தையின் ஆன்மீக அர்த்தம் சகயோகம் கொடுப்பது என்பதாகும். அப்படியானால் தினந்தோறும் மஹாதானி மற்றும் வரதானியாகி வரதானம் எப்படி கொடுப்பீர்கள்? வரதானம் கொடுப்பதற்கான விதி என்ன? உங்களுடைய ஜடச்சிலைகளே இப்பொழுது வரை வரதானம் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. எந்தவொரு ஆத்மாவும் உறவு சம்பந்தத்தில் வந்தால் அவருக்கு தன்னுடைய நிலையின் சூழ்நிலை மூலமாக மற்றும் தன்னுடைய உள்உணர்வின் எண்ண அதிர்வலைகள் மூலமாக சகயோகம் கொடுப்பது. அதாவது வரதானம் கொடுப்பது. இது தான் வரதானம் கொடுப்பதற்கான விதி ஆகும். எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும் தீய வார்த்தைகளால் திட்டுபவராக இருந்தாலும், சரி, நிந்தனை செய்பவராக இருந்தாலும் சரி, நீங்கள் உங்களுடைய சுப பாவனை, சுப விருப்பங்கள் மூலமாக, உள்உணர்வு மூலமாக, நிலை

மூலமாக அந்த மாதிரியான ஆத்மாவிற்குக் கூட குண தானம் அல்லது சகித்துக் கொள்வதற்கான சக்தியின் வரதானம் கொடுங்கள். ஒருவேளை யாராவது கோப அக்னியில் எரிந்து கொண்டு உங்கள் எதிரில் வருகிறார் என்றால் நெருப்பில் எண்ணை விடுவீர்களா அல்லது தண்ணீர் விடுவீர்களா? தண்ணீர் விடுவீர்கள் தான் இல்லையா? அல்லது கொஞ்சம் எண்ணையின் சொட்டுக்களையும் தெளிப்பீர்களா? ஒருவேளை கோபப்படுபவரின் எதிரில் நீங்கள் வாய் மூலமாகக் கோபப்படவில்லை. வாயினால் அமைதியாகவே இருந்தீர்கள் ஆனால் கண்கள் மூலமாக, முகம் மூலமாக கோபத்தின் பாவனையை வைத்திருந்தீர்கள் என்றால் கூட எண்ணையின் சொட்டுக்களைத் தெளித்தீர்கள் என்பதாகும். கோபப்படும் ஆத்ம மற்றவர்களின் வசமாகியிருக்கிறது. இரக்கத்தின் குளிர்ந்த தண்ணீர் மூலமாக வரதானம் கொடுங்கள். சரி அந்த மாதிரியான வரதானியாக ஆகியிருக்கிறீர்களா? அல்லது எந்த நேரம் தேவையாக இருக்கிறதோ அந்த நேரம் சகித்துக் கொள்ளும் சக்தியின் அம்பை எய்ய முடியவில்லையா? ஒருவேளை தேவையானது நேரத்தில் ஏதாவது விலைமதிக்க முடியாத பொருள் காரியத்தில் ஈடுபடுத்தவில்லை என்றால் அதை விலைமதிக்க முடியாதது என்று சொல்ல முடியுமா? விலைமதிப்பில்லாதது என்றால் தேவையான நேரத்தில் அதன் மதிப்பு காரியத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டும். அப்படியானால் இந்த வருடம் என்ன செய்வீர்கள்? மஹாதானி, வரதானி ஆகுங்கள். எப்பொழுது சைத்தன்யமாக இருக்கும்பொழுது சம்ஸ்காரத்தை நிரப்புகிறீர்களோ அப்பொழுது தான் ஜடச்சிலைகள் மூலமாகவும் வரதானிமூர்த்தி ஆகிறீர்கள் சம்ஸ்காரத்தையோ இப்பொழுது நிரப்ப வேண்டும் இல்லையா? அல்லது எந்த நேரம் மூர்த்தியாக ஆவீர்களோ அந்த நேரம் நிரப்புவீர்களா?

மஹாதானி வரதானி மூர்த்தி ஆவதினால் வீணானவை தானாகவே முடிவடைந்து விடும் ஏனென்றால் ஒருவர் மஹாதானி, வரதானியாக இருக்கிறார், மற்றவர்களுக்குக் கொடுக்கக்கூடிய வள்ளலாக இருக்கிறார் என்றால் வள்ளலின் அர்த்தமே நிறைந்தவர். நிறைந்தவராக இருக்கிறார் என்பதால் கொடுக்கிறார். அப்படி எங்கு நிரம்பியிருக்கிறதோ அங்கு வீணானவை தானாகவே முடிவடைந்து விடும். நிறைந்த நிலை என்றால் சுவிட்ச் ஆன் செய்வது. எப்படி இந்த

ஸ்தூல விளக்கின் சுவிட்ச் ஆன் செய்வது என்றால் இருளை விலக்குவது என்பதாகும். அப்படி நிறைந்த நிலை என்றால் சுவிட்ச் ஆன் செய்வது. அப்படியானால் சுவிட்ச் சரியாக இருக்கிறதா? அல்லது சில நேரம் சரியாகவும், சில தோம் லூசாகவும் (loose) ஆகி விடுகிறதா? அல்லது ப்யூசாகவும் (fuse) ஆகி விடுகிறதா? ஆன் செய்யத் தெரியும் இல்லையா. இன்றைய நாட்களிலோ சிறு சிறு குழந்தைகள் கூட சுவிட்ச் ஆன் செய்வதில் புத்திசாலிகளாக இருக்கிறார்கள். டி.வி யின் சுவிட்ச் ஆன் செய்து விடுகிறார்கள் இல்லையா? அப்படி சுவிட்ச் ஆன் செய்வதினால் ஒவ்வொரு வீணான எண்ணத்தையும் முடிப்பதன் உழைப்பிலிருந்து விடுபட்டு விடுகிறீர்கள். இதுதான் அவ்யக்த பரிஷ்தாக்களின் உயர்ந்த காரியம் ஆகும். மேலும் என்ன புதுமை செய்வீர்கள்? அவ்யக்த வருடத்தில் தன்னுடைய சார்ட் எழுதினீர்களா, அல்லது சில நேரம் எழுதினீர்கள் மற்றும் நேரம் எழுதவில்லையா? எப்பொழுதாவது செய்பவராக ஆகியிருக்கிறீர்களா அல்லது சதா செய்பவராக ஆகியிருக்கிறீர்கள? எப்பொழுதாவது செய்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

இந்த புதிய வருடத்தில் புதிய சார்ட் எழுதுங்கள். என்ன புதிய சார்ட் எழுதுவீர்கள். நான்கு படங்களையும் நன்கு தெரிந்திருக்கிறீர்கள். அப்படி இந்த வருடத்தில் நான்கு பாடங்களிலும் ஞானம், யோகம், தாரணை, சேவை நான்கிலும் ஒவ்வொரு நாளும் ஏதாவது புதுமையைக் கொண்டு வர வேண்டும். ஞானம் என்றால் அறிந்தவர் ஆவது, அறிவைக் கொடுப்பது மற்றும் அறிவுள்ளவராகி நடந்து கொள்வது. ஞானத்திலும் புதுமை என்பதின் அர்த்தமாவது எது தன்னிடம் குறையாக இருக்கிறதோ அதை உணர்வது என்றால் புதுமையாகி விட்டது இல்லையா? இல்லை என்பதிலிருந்து ஆம் என்று ஆகி விட்டது என்றால் புதியது ஆனது இல்லையா. இதே போல் யோகத்தின் பிரயோகத்திலும் ஒவ்வொரு நாளும் ஏதாவது புதிய அனுபவம் செய்யுங்கள். யோகாவில் மிக நன்றாக அமர்ந்திருக்கிறார். மிக நன்றாக யோகா செய்தார், ஆனால் புதுமையாக என்ன நடந்தது? சதவிகிதத்தை அதிகரிப்பது கூட புதுமை தான். ஒருவேளை உங்களுடைய யோகாவின் சதவிகிதம் 50-ஆக இருக்கிறது என்றால் மேலும் நாளையிலிருந்து 50-லிருந்து அதிகரித்து விட்டது என்றால் புதுமையாகி விட்டது தான் இல்லையா. ஒரே மாதத்தில் 50-50 என்று போட்டுக் கொண்டே

இருக்கிறீர்கள் என்பது கூட வேண்டாம். அப்படி நான்கு பாடங்களிலும் சுய முன்னேற்றத்தில் புதுமை, விதியில் புதுமை, பிரயோகத்தில் புதுமை, மற்றவர்களை சகஜயோகி ஆக்குவதில் மற்றும் சதவிகிதத்தை அதிகரிப்பது என்றால் புதுமை. யாருக்காவது துக்கம் கொடுப்பது யார் மேலாவது கோடப்படுவது இதுவோ பொதுவான சார்ட். இதையோ உங்களுடைய இராயல் பிரஜைகளாக இருப்பவர்கள் கூட வைக்கிறார்கள். நீங்கள் ராயல் பிரஜையா? இராஜாவா? அப்படி புதுமையினால் இயல்பாகவே தீவிர முயற்சியின் நெருக்கத்தின் அனுபவம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். என்ன சார்ட் எழுத வேண்டும் என்று புரிந்ததா? மேலும் ஒவ்வொரு மாதத்திற்கு ஒரு முறை இங்கு அனுப்புங்கள். தினந்தோறும் இங்கு அனுப்பாதீர்கள், வேலை அதிகமாகி விடும். இந்த வருடமோ நீங்கள் சிக்கனத்தையும் கடைபிடிக்க வேண்டும் இல்லையா. வருடம் விசேஷமாக சிக்கனமாக இருப்பதற்கானது. ஏக்னாமி (ஒருவருடைய பெயர்) மற்றும் எகானமி (சிக்கனம்). ஞானசரோவரை கட்டிக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் அனைத்திலும் சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அனைத்து பொக்கிஷங்களில் நேரத்திலும், எண்ணத்திலும், செல்வத்திலும் அணத்திலும் சிக்கனம் வேண்டும். அப்படி ஒவ்வொரு மூன்று மாதத்திற்கு ஒரு முறை நீங்களே சார்ட்டை சோதித்து சுருக்கமாக உங்களுடைய செய்தியை அனுப்புங்கள். ஒவ்வொரு மூன்று மாதத்திலும் முன்னேற்றம் இருக்கிறதா? அல்லது எப்படி இருந்தோமோ அப்படியே இருக்கிறோமா என்று பாருங்கள். இறங்கும் கலையிலோ செல்லக்கூடாது. ஆனாலும் எப்படி இருந்தோமோ அப்படியே இருக்கிறோம் என்பது கூடாது. முயற்சி செய்வதில் இடையில் நிற்பவராக ஆகாதீர்கள். இடையில் நிற்பது நன்றாக இருக்குமா? விரும்பவில்லை தான் ஆனால் என்ன செய்வது என்று அப்படி கூறாதீர்கள். என்ன என்று சொல்லக்கூடாது. பிராமணர்களின் பாஷையில் என்ன செய்வது, எப்படி செய்வது, இப்படி செய்தால் என்ன.... ஆனால் இப்படி செய்யுங்கள் என்று மற்றவர்களுக்கும் சகயோகம் கொடுங்கள். என்ன சார்ட் எழுத வேண்டும் என்று புரிந்ததா? இப்பொழுது யார் யார் என்னென்ன செய்கிறார்கள் என்று பார்க்கலாம்.

அன்பின் காரணமாக பாப்தாதா பெயரை அறிவிக்கவில்லை. யார் என்னென்ன செய்தார் என்று தெரிந்திருக்கிறீர்கள் தான் இல்லையா.

இன்றைய நாட்களில் டி.வியின் பேஷன் இருக்கிறது. பாப்தாதாவிடமும் டி.வி. இருக்கிறது. சென்ற வருடம் வேலை கொடுத்திருந்தோம் அதை யார் எவ்வளவு செய்தார் என்று பாப்தாதாவிற்கு தெரியும். அரைகுறை பிராமணன் எத்தனை பேர் இருந்தார்கள், முழுமையான பிராமணர்கள் எத்தனை பேர் இருந்தார்கள் என்று பெயரை அறிவிக்கலாமா? நல்லது.

இந்த புதிய வருடத்தின் இந்த சுலோகனை 'எப்பொழுதும் ஊக்கம் உற்சாகத்தில் பறக்க வேண்டும் மற்றும் மற்றவர்களையும் பறக்க வைக்க வேண்டும்' என்பதை அமிர்தவேளையில் எப்பொழுதும் வெளிக் கொண்டு வாருங்கள். இடையிடையே சோதனை செய்யுங்கள். அமிர்தவேளையில் சோதனை செய்தீர்கள், பிறகு முழு நாளும் உள்ளடக்கி விட்டீர்கள் என்பதும் இருக்க வேண்டாம். பிறகு இரவு இன்றைய நாள் இப்படியே இருந்து விட்டது என்றும் யோசிக்க வேண்டாம். இடையிடையே சோதனை செய்யுங்கள். ஊக்கம் உற்சாகத்திற்குப் பதிலாக வேறு எந்த பாதையிலும் சென்று விடவில்லையே என்று சோதியுங்கள். பறக்கும் கலைக்குப் பதிலாக வேறு எந்த கலையும் தன் பக்கம் கவர்ந்திழுக்கவில்லையே. நல்லது.

நாலாபுறத்திலும் உள்ள புது வாழ்க்கையை அனுபவம் செய்யக்கூடிய அனைத்து பிராமண குழந்தைகளுக்கும், எப்பொழுதும் புது யுகத்தின் ஆதாரமூர்த்தி உயர்ந்த ஆத்மாக்களுக்கு எப்பொழுதும் எண்ணம், சொல் மற்றும் செயல் மூலமாக மஹாதானி, வரதானியாக இருக்கும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் தன்னுடைய நிலை மூலமாக மற்றவர்களின் சூழ்நிலையைக் கூட சுலபமானதாக ஆக்கக்கூடிய சக்தி நிறைந்த ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஒவ்வொரு நாளும் தன்னில் முன்னேற்றம் அதாவது புதுமையை அனுபவம் செய்யக்கூடிய நெருக்கத்தில் இருக்கும் ஆத்மாக்களுக்கு, எப்பொழுதும் ஏக்னாமி மற்றும் எகானமி செய்யக்கூடிய தந்தைக்குச் சமமான நெருக்கமான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவும், நமஸ்காரமும்!

தாதிகளுடன்: நிமித்த ஆத்மாக்கள் ஒவ்வொரு நேரமும் பிரத்யக்ஷ பழம் சாப்பிடக்கூடியவர்கள். எதிர்காலத்திலோ உங்களுக்கு நிச்சயிக்கப்பட்டதுதான், அதுவோ நடந்தேத் தீரும் ஆனால் பிரத்யக்ஷ பலன் எவ்வளவு அன்பானது. உடனுக்குடன் செய்வது மற்றும்

உடனேயே சிரேஷ்ட பிராப்தியின் அனுபவம் செய்து கொண்டே இருக்கிறீர்கள். அனைத்தையும் விட பிரத்யக்ஷ பலன் அருகாமையின் அனுபவம் ஆவது மற்றும் அருகாமையின் அடையாளம் சமமாக ஆவது! பிரத்யக்ஷ படத்தைச் சாப்பிடக்கூடியவர்கள் ஆதலால் சதா 'ஹெல்தி, வெல்தி, ஹேப்பி' (ஆரோக்கியம், செல்வம், மகிழ்ச்சி) ஆக இருக்கிறீர்கள். யாராவது எப்படி இருக்கிறீர்கள் என கேட்டால் என்ன கூறுவீர்கள்? ஹெல்தியாக, வெல்தியாக, ஹேப்பியாக இருக்கிறேன் என்பீர்கள்தானே. எப்படி சாகார உலகினரும் கூறுகின்றனர், பழம் சாப்பிட்டால் ஆரோக்கியமாக இருக்கலாம் என. ஆரோக்கியமாக இருப்பதற்கான சாதனமாக பழத்தைக் கூறுகின்றனர். மற்றும் நீங்களோ ஒவ்வொரு நொடியும் பிரத்யக்ஷ பழம் சாப்பிட்டுக் கொண்டே இருக்கிறீர்கள், கிடைத்துக் கொண்டே இருக்கிறது, எனவே சதா 'எவர் ஹெல்தி'யாக இருக்கிறீர்கள். பாப்தாதாவும் கூறினார்தானே, ஒருவேளை பிராமணக் குழந்தைகளிடம் யாராவது எப்படி இருக்கிறீர்கள் என கேட்டால், நலமாக உள்ளேன் என்பார்கள். மற்றும் நடத்தை எவ்வாறு உள்ளது? ஃபரிஷ்தாவுடையது! ஃபரிஷ்தாக்களின் நடத்தை மற்றும் நலம்! (சபையினரிடம் கேட்டபடியே) எல்லோரும் இப்படி இருக்கிறீர்களா அல்லது எப்போதாவது வித்தியாசம் ஏற்படுகிறதா? ஒருவர் மற்றவரைச் சந்திக்கும்போது என்ன கேட்கிறீர்கள்? என்ன விசேஷம்? எனில் பிராமணன் என்றால் நலமுடன் இருப்பவர் மற்றும் ஃபரிஷ்தாக்களைப் போல சதா பறப்பவர். எனவே புதிய வருஷத்தில் ஒவ்வொரு நொடி, ஒவ்வொரு சங்கல்பமும் நலமுடன் இருக்க வேண்டும். அமைதியற்று அல்ல ஆனால் நலங்கள் நிறைந்தவராக! ஆடுங்கள், பாடுங்கள்! ஆட, பாட வரும்தானே எனில் ஆடுங்கள் பாடுங்கள், வேறு என்ன செய்ய வேண்டும்? பிரம்மா போஜன் சாப்பிடுங்கள் மற்றும் ஆடுங்கள் பாடுங்கள். எங்கிருந்தாலும் சரி ஆனால் நினைவு செய்தபடியே சமைத்தீர்கள், நினைவு செய்தபடியே சாப்பிட்டீர்கள் என்றால் அது பிரம்மா போஜனம் ஆகும்! எல்லாம் நன்றாக உள்ளது.

நல்லது, இரட்டை வெளிநாட்டினர் குஷியாக இருக்கிறீர்களா? குஷியாகவும் அதிகமிருப்பது, பின் வருத்தமும் அதிகம் அடைவது என இப்படி இருக்கக்கூடாது. இந்த வருஷத்தில் வருத்தமடைவது அல்லது தனிமை அல்லது வீணான உணர்வுகளை கொண்டு வரவேக் கூடாது.

அப்போதுதானே புதிய உலகை அருகில் கொண்டு வர முடியும். நல்லது. புதிய வருஷத்தில் புதிய ஊக்கம், புதிய உற்சாகம் இருக்கிறது. இப்போது எல்லோரும் இப்படியே ஆடிப்பாடி இருக்க வேண்டும். நல்லது. ஒவ்வொரு நேரமும் வாழ்த்துக்கள்தானே! அழியாத வாழ்த்துக்கள்! நல்லது.

**மகாதானி-வரதானி:** மூர்த்தி ஆவது மூலம் வீணானது தானாகவே முடிந்து விடும் ஏனெனில் வள்ளல் என்றாலே சக்திசாலியானவர் என்று பொருள். யார் மகாதானி, வரதானியோ, பிறருக்குத் தரக்கூடிய வள்ளலோ அவரே சக்திசாலியாவார். எங்கு சக்தி உள்ளதோ அங்கு வீணானது தானாகவே முடிந்து விடும்.

**குழுக்களுடன் தனிப்பட்ட சந்திப்பு (சாரம்):**

**குரூப்-1:** நினைவின் குடை நிழலில் இருந்தால் மாயாஜீத் ஆகி விடுவீர்கள்!

குடை நிழலில் இருப்பது என்றால் மாயாஜீத், வெற்றி அடைவதாகும்.

மரியாதை என்றால் நினைவின் கோடிற்குள் இருப்பவர்.

வெற்றி மாலை வெற்றி ரத்தினங்களின் நினைவுச்சின்னமாகும்.

அநேக முறை வெற்றி பெற்றுள்ளோம் என்ற இந்த நினைவின் மூலம் சதா சக்திசாலியாக இருப்பீர்கள்.

மாஸ்டர் சர்வ சக்திவான் என்றால் சக்திகள் நிறைந்தவர்!

பாபா என்று சொன்னவுடன் அந்த நொடியே தந்தையுடன் இருக்கும் அனுபவம், அந்த சங்கல்பத்தில் நிச்சயம் இருக்கும்.

**குரூப்-2:** பரமாத்ம அன்புதான் பிராமண வாழ்க்கையின் ஆதாரமாகும், விலகியவரானீர்கள் என்றால் இந்த அன்பிற்குத் தகுதியானவராகலாம்!

சேவையின் பந்தனத்தில் தன்னை பிணைப்பதன் மூலம் கர்மபந்தனம் முடிவடைந்து விடும்.

விலகியிருப்பதன் அடையாளம் -பிரபுவின் அன்பு அனுபவமாதல்; எந்தளவு அன்பு ஏற்படுகிறதோ அந்தளவு பிரிந்து இருக்க மாட்டீர்கள், சதா கூடவே இருப்பீர்கள்.

நஷ்டோமோகா என்றால் 'நியாரா - பியாரா'!

**குரூப்-3:** பட்டத்தின் (சுவமான்) நினைவின் மூலம் அந்த ஸ்திதியில் நிலைத்து இருப்பதற்கான அனுபவம் செய்யுங்கள்!

சதா தனது விதவிதமான பட்டத்தின் நினைவில் இருந்து, அந்த ஸ்திதியில் நிலைத்து நடந்து கொள்ளுங்கள்.
சுயதரிசன சக்கரதாரி என்றால் சதா மாயாஜீத்!
ஆத்மாவின் முகவரி பரந்தாமம்; பிராமண ஆத்மாவின் முகவரி மதுபன்!

**குரூப்-4:** முக்காலமும் மிக நன்றாக இருப்பதுதான் பிராமண வாழ்க்கையின் ஜாதகம் ஆகும்!
பிராமண வாழ்க்கையில் நினைவும் சேவையும் இயல்பானதாக மற்றும் அவசியமானதாகும்.
பாக்கிய விதாதா உங்களுடைய பாக்கியத்தின் ரேகையை சிரேஷ்டமாக ஆக்கி விட்ட பாக்கியவான்கள் நீங்கள். எல்லோரும் என்ன சொல்வீர்கள்? மேரா பாபா! எங்கு இருக்கிறீர்கள்? தந்தையின் இதய சிம்மாசனத்தில். இப்போது இதய சிம்மாசனதாரியாக இருப்பவர்கள்தான் எதிர்காலத்தில் ராஜ்ய சிம்மாசனதாரி ஆவார்கள். நல்லது.

**குரூப்-5:** எல்லா கஜானாக்களையும் பயனுள்ளதாக்குவதே வெற்றி பெறுவதற்கான சகஜ சாதனமாகும்!
எங்கு எல்லா கஜானாக்களும் உள்ளதோ அங்கு திருப்தி இருக்கும்! நல்லது.

இரவு **12**-மணிக்கு பாப்தாதா மெழுகுவர்த்தி ஏற்றி, கேக் வெட்டினார், பின்னர் எல்லோரையும் சந்தித்தவாறே புத்தாண்டு வாழ்த்து அளித்தார்!
இந்த குழுவோ மிக அதிர்ஷ்டசாலி ஆனது எனில் உள்ளத்திலும் நெருக்கமாகவும், கண்களுக்கும் நெருக்கமாகவும் அமர்ந்துள்ளனர். பாப்தாதாவோ கூறினார் அனைவருமே திருப்தியின் ரத்தினங்கள் என. எல்லா பிராப்தி சொரூபமாக இருக்கிறீர்கள், இதற்காக என்ன பாட்டு பாடுகிறீர்கள்? அடைய வேண்டியதை அடைந்தே விட்டேன்! நல்லது. யூ.கே. (u.k) விற்கான வரதானம் என்ன? ஓ.கே. (o.k)! எனில் ஓ.கே.'வா? மற்றவர்களையும் ஓ.கே. ஆக்குகிறீர்களா அல்லது தான் மட்டுமே அவ்வாறு இருக்கிறீர்களா? இப்போது இந்த வருஷத்தில் ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு விதத்தில் மகாதானி, வரதானி ஆக வேண்டும் எனில் சதா மற்றவர்களுக்குச் சேவை செய்து கொண்டே இருக்க

வேண்டும். லண்டன்வாசி அல்லது யூ.கே.வாசி சிரேஷ்ட பாக்கியவான்கள் ஏனெனில் விசேஷ ஆத்மாக்களின் பாலனை கிடைத்துக் கொண்டே இருக்கிறது மற்றும் அனைத்தையும் விட முதலாவதாக உடனடி தானம் மகா புண்ணியமாக முரளியும் லண்டனைச் சென்றடைகிறது. பல விஷயங்கள் இவ்வாறு நடக்கின்றன அவை பாரதவாசிகளுக்குக் கிடைப்பதில்லை ஆனால் லண்டன் சென்றடைகிறது, ஏனெனில் லண்டன் வெளிநாட்டில் உருவான முதலாவது சென்டர் திறப்பதில் நிமித்தமானது. எனில் இப்போது லண்டன்வாசிகள் என்ன செய்வீர்கள்? எல்லா பாடத்திலும் நம்பர்-1 ! இருப்பினும் பாப்தாதா எல்லா வெளிநாடுகளிலும் சேவை செய்கின்றவர்களுக்கு வாழ்த்துக்கள் அளிக்கின்றார், உழைப்பும் ஊக்கமும் நன்றாக இருக்கிறது. தைரியத்தினால் வெற்றி கிடைக்கின்றது மற்றும் இன்னும் முன்னேறிக் கொண்டே இருப்பீர்கள். தைரியத்தை சதா கூடவே வைத்திருக்க வேண்டும். எங்கு தைரியம் உள்ளதோ அங்கு தத்தையின் உதவியும் உள்ளது!

பாப்தாதா விடைபெறும் சமயம் எல்லாக் குழந்தைகளுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் அளித்தார்! நாலா புறமும் உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் புத்தாண்டினுடைய ஊக்கம் உற்சாகத்தின் அன்பு நினைவுகள் மற்றும் நல்ல நல்ல பரிசுகளும் அளிக்கின்றார். பாப்தாதா எல்லாக் குழந்தைகளுக்கும் கோடானுகோடி பாக்கியசாலி குழந்தைகளுக்கு கோடானுகோடி மடங்கு அன்பு நினைவுகளை அளிக்கின்றார். இந்த சங்கம யுகம் மற்றும் புதிய உலகம் இரண்டிற்காகவும் வாழ்த்துக்களை அளிக்கின்றார். எப்படி புத்தாண்டின் ஆரம்பத்தில் விழா கொண்டாடுகிறார்கள் மற்றும் கூடகூடவே ஒருவர் மற்றவரது வாயை இனிப்பாக்குகின்றனர் எனில் நீங்களும் எந்த மிட்டாயைக் கொடுப்பீர்கள்? ஒவ்வொரு நேரமும், ஒவ்வொரு நாளும் எல்லோருக்கும் தில்குஷ் மிட்டாய் கொடுத்துக் கொண்டே இருங்கள். இந்த மிட்டாயோ அனைவருமே சாப்பிடலாம். சாப்பிட்டுக் கொண்டே இருக்க வேண்டும் மற்றும் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். சதா எந்த ஒரு ஆத்மாவின் சம்பந்தம் தொடர்பில் வந்தாலும் முதலில் புன்முறுவல் செய்ய வேண்டும், பின்பு தில்குஷ் மிட்டாய் உண்ணச் செய்து சந்திக்க வேண்டும். மேலும் என்ன பரிசு தருவீர்கள்? குணங்களின் பரிசு, சக்திகளின் பரிசு தர வேண்டும். உங்களிடமோ

நிறைய பரிசுகள் இருக்கிறதல்லவா. இருப்பு உள்ளதுதானே? எனில் நிறைய பரிசுகள் கொடுத்துக் கொண்டே இருங்கள். சதா ஊக்கம் உற்சாகத்தில் பறக்க வேண்டும் மற்றும் பறக்க வைக்க வேண்டும். புத்தாண்டின் 'குட் மார்னிங்'! (good morning). நல்லது, ஓம் சாந்தி!

**வரதானம்: உறுதியான எண்ணம் என்ற விரதம் மூலமாக உள்உணர்வுகளை மாற்றம் செய்யக்கூடிய மஹான் ஆத்மா ஆகுக!**

மஹான் ஆவதற்கான முக்கிய ஆதாரம் தூய்மை. இந்த தூய்மையின் விரதத்தை உறுதிமொழியின் ரூபத்தில் தாரணை செய்வது என்றால் மஹான் ஆத்மா ஆவது. எந்தவொரு உறுதியான எண்ணம் என்ற விரதம் உள்உணர்வை மாற்றி விடுகிறது. தூய்மையின் விரதத்தை எடுப்பது என்றால் தன்னுடைய உள்உணர்வை உயர்ந்ததாக ஆக்குவது, விரதம் வைப்பது என்றால் ஸ்தூலமாக பத்தியம் வைத்துக் கொள்வது, மனதில் உறுதியான எண்ணத்தை உருவாக்குவது. அப்படி தூய்மையாவதற்கான விரதம் எடுத்திருக்கிறீர்கள். மேலும் நாங்கள் ஆத்மா சகோதர சகோதரர்கள் -இந்த சகோதரத்துவத்தின் உள்உணர்வை உருவாக்கியிருக்கிறீர்கள். இந்த உள்உணர்வினால் பிராமணன் மஹான் ஆத்மா ஆகி விட்டார்.

**சுலோகன்: வீணானதிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றால் வாயில் உறுதியான எண்ணம் என்ற பொத்தானை (பட்டனை) வைத்து விடுங்கள்!**

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

## பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂